24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 40
விலை: 40

சுடர் 34 கதிர் 34 மார்கழி 14ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 30 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

சிங்களப் பேரினவாத அரசியல் அணியில்

# ஒரு தரப்பை தீவிரமாக எதிர்த்துக்கொண்டு தமிழருக்கான தீர்வைக் காணவேமுடியாது

இப்படிச் சொல்கிறார் ரெலோவின் செயலர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 30

சிங்களப் பேரினவாத அரசியல் அணிகள் இரண்டினதும் அதிகாரப் போட்டிக்குள் கூட்டமைப்பு புகுந்து விளையாடுவதன் ஊடாக இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற சிந்தனை நடைமுறைச் சாத்தியமானது அல்ல. இரண்டு பிரதான சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் அரசியல் தீர்வை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. இந்த யதார்த்தமான நிலைமையில் பிரதான சிங்களக் கட்சிகளில் ஒன்றைத் தீவிரமாக எதிர்த்தபடி தமிழர் தரப்பு அரசியல் தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோ அமைப்பின் பொதுச் செயலர் ந.சிறிகாந்தா தெரிவித்தார். >> 07



## ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின

யாழ்ப்பாணம், டிசெ. 30

இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத்தராதர (ஜி.சி.ஈ.) உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்னிரவு வெளியாகின. மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றோர் >> 07

## இரணைமடு விசாரணைக்குழுவின் தலைவர் அதிரடியாக நீக்கம்

கிளிநொச்சி, டிசெ. 30

இரணைமடுக்குள முகாமைத்துவம் தொடர்பில் விசாரணை செய்யும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவ்குமார் அந்தக் குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரால் விசாரணைக் >> 07

## பன்னாட்டு நீதித்துறையின் தலையீடு அவசியமில்லை

சபாநாயகர் கரு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 30

பன்னாட்டு நீதித்துறையின் தலையீடு இனியும் இலங்கைக்குத் தேவையில்லை. இலங்கை நீதித்துறையின் சுயாதீனம் அதை உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறு சபா >> 07



## பெரும்பான்மைவாதச் சிந்தனைக்கு நீதித்துறையும் விதிவிலக்கல்ல

பன்னாட்டுச் சமூகம் உணர வேண்டும் என்கிறார் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன்

கொழும்பு, டிசெ. 30

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதில் நீதித்துறை செயற்பட்ட விதத்தை கருத்திலெடுத்து. இனப்படுகொலை விவகாரத்தில் இலங்கையின் நீதித்துறை சரியாகச் செயற்படும் என்று பன்னாட்டுச் சமூகம் நினைக்கக்கூடாது. இலங்கையின் நீதித்துறையும் இனரீதியான சிந்தனைக்கு உட்பட்டதே. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான சி.வி.விக் >> 05



## நீண்ட இழுபறியின் பின்னர் வெளியானது அரசிதழ்

### மைத்திரி வசம் 43 திணைக்களங்கள்

கொழும்பு, டிசெ. 30

புதிய அமைச்சரவையின் அமைச்சுக்களுக்கான >> 05

## வாள்வெட்டுக் குழுவை விரட்டியடித்த இளைஞர்கள்

கொக்குவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 30

கொக்குவில் மேற்குப் பகுதியில் அட்டகாசம் செய்த வாள்வெட்டுக் குழுவை. அந்தப் பகுதி >> 07

## வெள்ள நீரிழ் மூழ்கி சிறுவன் பரிதாபச் சாவு

கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, டிசெ. 30

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் வாய்க்காலில் தேங்கி நின்ற வெள்ள நீரில் மூழ்கி 11வயதுச் சிறுவன் நேற்றைய தினம் பரிதாபகரமாக உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 05



## நோய்கள் பரவும் ஆபத்து இல்லை

உதவிப் பொருள்கள் கையளித்த பின்னர் சுகாதார அமைச்சர் ராஜித

கிளிநொச்சி, டிசெ. 30

வெள்ளம் பாதித்த பகுதிகளில் சுகாதார சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படு >> 05

கிளி. வெள்ளப்பெருக்கு

## யாழ்ப்பாண மக்களுக்குப் பதில் சொல்ல முடியாது திணறுகிறோம்

இரணைமடுவில் வைத்துக் கூறினார் ரவூப் ஹக்கீம்

கிளிநொச்சி, டிசெ. 30

இரணைமடுக் குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக 20 மில்லியன் டொலர்களைச் >> 07

## வடமராட்சி கிழக்குக் கடலில் கரையொதுங்கியது மர்மப்பொருள்



>> 05

## வடக்கில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மினிகோப் சிற்றிகளாக மீண்டும் மாற்ற முயற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 30

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மினிகோப் சிற்றிகளாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள 5 கிளை நிலையங்களை தரம் உயர்த்தி அவற்றை மினி கோப் சிற்றிகளாக மாற்ற >> 07



SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி.

12.60% வ.வ.

வ.தே.வ. 13.14%

4 மாதங்கள்

அழையுங்கள்: 0115 411 411

011 5 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

SDB வங்கி

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கும் உதவிகள் வேண்டும்

## கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவர் வலியுறுத்து

முல்லைத்தீவு, டிசெ. 30

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களை நோக்கி இடம்பெயராது, உறவினர்கள் வீடுகளில் தங்கி வாழ்வாதாரங்களைஇழந்துள்ளமீனவக்குடும்பங்களுக்குஉதவிகள்இல்லையா?பாதிக்கப்பட்டுள்ள மீனவக் குடும்பங்களுக்கு உதவிசெய்ய ஒருவரேனும் முன்வரவில்லை. இவ்வாறு முல்லைத்தீவு கடற்றொழிலாளர் அமைப்பின் தலைவர் பேரின்பநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எமது மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை யாரும்மறுக்கமுடியாது. தொழிலுக்குச் செல்லாதுபாதிக்கப்பட்ட அவர்கள்வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்படி பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களுக்குச்சென்றாலும்எந்த உதவிகளும் கிடைக்கப்போவதில்லை என்பதால் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று தங்கினார்கள். இப்போது அவர்களுக்கு எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை.

மீன்பிடி அமைச்சோ, இடர்முகாமைத்துவ அமைச்சோ, அதிகாரிகளோ யாருமேஉதவிசெய்யவில்லை. மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளான கள்ளப்பாடு, தீத்தக்கரை, செல்வபுரம் போன்ற பகுதிகளைச்சேர்ந்தமீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது. இடரால்பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும். அரசால் வழங்கப்படும் உதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்படவேண்டும்" - என்றார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குஎந்தவிதமானஉதவிகளும் வழங்ககப்படவில்லை. உதவிகளைவழங்குவதற்குயாரும்முன்வருவதில்லை. விவசாயிகள் பாதிக்கப்பட்டால் உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் மீனவர்கள் பாதிக்கப்பட்டால் உதவிகள் இல்லை என்று வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,21)

# எதிர்க் கட்சித் தலைவர் பணியகம் மகிந்தவிடம்

## புத்தாண்டின் பின்னர் நடக்கும் என்கிறார் ரோஹண

கொழும்பு, டிசெ.30

புத்தாண்டின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மகிந்த ராஜபக்ச வசமாகும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியையும் இணைப்பதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான சர்ச்சையைத் தீர்க்க முடியும். எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான சர்ச்சை ஏற்கனவே முற்றுப்பெற்றுவிட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை நியமித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளோம். புத்தாண்டின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மகிந்த ரஜபக்ச வசமாகும் - என்றார். (ந-10)

# மகிந்த அணியிலிருந்து 15 பேர் புத்தாண்டில் ரணிலுடன் சங்கமம்

மைத்திரி-மகிந்ததலைமையிலானகூட்டணியிலிருந்து 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியமுன்னணிஅரசுடன் இணைய உத்தேசித்துள்ளனர். பெரும்பாலும்அவர்கள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இணைவதற்குத் தீர்மானித்துள்ளனர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க அந்தக் கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரி மறுப்புத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் அரச தலைவருடன் தலைமை அமைச்சர் நேரில் பேசியிருந்தார். இதனையடுத்து அரச தலைவர் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு விரைவில் அமைச்சுப்பதவிகள்வழங்கப்படும். அதேவேளை, அரச தலைவர் மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியிலிருந்தும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள்ஐக்கியதேசிய முன்னணிஅரசுடன்ஜனவரி மாதமுதல்வாரத்தில்இணைய உத்தேசித்துள்ளனர்.

அவர்கள் எம்முடன் இது தொடர்பில் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். அவர்களை வரவேற்க நாம் தயாராக இருக்கின்றோம். இந்த அரசு வலுவான அரசாகத் திகழும். அரசியல்நெருக்கடியால் சீரழிந்த நாட்டை நாம் கட்டியெழுப்போம்.

எவரையும் பழிவாங்கும் வகையில் எமது செயற்பாடுகள்அமையாது. நாட்டின்நற்பெயரைக் கருத்தில் கொண்டும் நாட்டு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டும் எமது செயற்பாடுகள் அமையும்-என்றார். (5)

# ரணில் தரப்பிலிருந்தே 5 பேர் மகிந்தவுடன் கைகோர்ப்பார்கள்

## சஜித்தின் கருத்துக்கு தினேஷ் பதிலடி

கொழும்பு, டிசெ. 30

ஐக்கிய தேசிய முன்னணி அரசில்அமைச்சுப்பதவிகள் கிடைக்காதவர்கள் உள்ளிட்ட அந்த அணியைச் சேர்ந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் விரைவில் இணையவுள்ளனர். இவ்வாறுமகிந்தஅணியின்நாடாளுமன்றஉறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.



அரச தலைவர் மைத்திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும்மகிந்தராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியிலிருந்தும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் ஜனவரி மாத முதல் வாரத்தில் இணைய உத்தேசித்துள்ளனர் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார். இதுதொடர்பில்நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தனவிடம வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"எமது அணியிலிருந்து எவரும் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணையமாட்டார்கள். அந்த அணித் தரப்பைச்சேர்ந்தவர்களேஎம்முடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களில் சிலர் அமைச்சுப் பதவி கிடைக்கவில்லைஎன்றஆத்திரத்திலும் உள்ளனர். அதிருப்தியடைந்துஎம்மைநம்பி வருபவர்களை நாம் இருகரம் கூப்பி வரவேற்போம். விரைவில் மீண்டும் நாம் ஆட்சிப்பீடம்ஏறுவோம். இது உறுதி" -என்றார். (5)

# வெள்ளஇடர்முகாம்கள் முல்லையில்மூடப்பட்டன

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவுமாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த29முகாம்களும்மூடப்பட்டு, மக்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு சென்றுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர்எஸ்.லிங்கேஸ்வரகுமார்தெரிவித்துள்ளார்.

'வெள்ளஇடரின்காரணமாக முல்லைத்தீவில் இதுவரை 10 ஆயிரத்து 318 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 551பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் காரணமாக86வீடுகள்முழுமையாகவும், பகுதியளவில் 2ஆயிரத்து 297வீடுகளும் சேதமடைந்துள்ளன'என்று லிங்கேஸ்வரகுமார் குறிப்பிட்டார். (5,246)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 30

நாங்கள் செயற்பாட்டு வலையமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலைமாணவர்களுக்குகற்றல்உபகரணங்கள்வழங்கும் நிகழ்வுநாளைதிங்கட்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நவாலி வடக்கு முதியோர் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

'நாங்கள் செயற்பாட்டு வலையமைப்பின்' தலைமைச் செயற்பாட்டாளர் செ.பிரதாப் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாகஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் பொருளாளர்பெ.கனகசபாபதி, வலி. தென்மேற்குதவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாக பிரதேச சபை உறுப்பினர்களான ரா.வன்னியசேகரம், சே.கலையமுதன், நா.பகீரதன், சி.மரியரோசரி மற்றும் கிராம அலுவலர் ஜி.சஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

# துணிவிருந்தால்நாடாளுமன்ற தேர்தலை நடத்திக்காட்டுங்கள்

## ரணிலுக்கு மகிந்த சவால்

தோல்வியை எதிர்நோக்க இயலாமை காரணமாக சிலர்நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சதெரிவித்தார்.

ஹங்கம பிரதேசத்தில் மத வழிபாட்டுக்கு நேற்றுக் காலை சென்ற மகிந்த ராஜபக்சவழிபாடுகளின்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் மீன்பிடித்துறை உள்ளிட்ட அனைத்து வியாபாரங்களும் வீழ்ச்சியடைந்து இருக்கும் அதேவேளையில் கொலைகள் மற்றும்பாதாளக்கோஷ்டிகளின் நடமாட்டம் கூடுதலாக உள்ளது.

இந்த அரசு, அரச தலைவர் தேர்தலை நடத்துமா அல்லது மாகாண சபைத் தேர்தலை நடத்துமா என்று சொல்லத் தெரியாது. ஆனால், நாம் நாடாளுமன்றத் தேர்தலைத்தான் விரும்புகின்றோம். தேர்தலை எதிர்நோக்கப்பயந்திருக்கும் சிலர் அதற்குஎதிராகச்செயற்படுகின்றனர்.

துணிவிருந்தால் பொதுத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு அவர்களுக்கு (ரணில் அரசு) நாம் சவால் விடுகின்றோம்" -என்றார். (5)

# திருநெல்வேலியில் 3 ஆலயங்களின் உண்டியல்கள் ஒரே இரவில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 30

திருநெல்வேலிகிழக்குப்பகுதியில் உள்ள 3 ஆலயங்களின் உண்டியல்கள்நேற்றுஅதிகாலைதிருடர்களால் உடைத்துக் களவாடப்பட்டுள்ளது.

திருநெல்வேலிகிழக்குப்பகுதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயம், ஞான வைரவர் ஆலயம் மற்றும் குட்டிப்பிள்ளையார் ஆலயம் என்பவற்றின் திருப்புணி உண்டியல்களே ஒரே நாளில் திருடர்களின்கைவரிசைக்குஉட்பட்டுள்ளன. திருட்டுத் தொடர்பில் கோப்பாய்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்யப்பட்டுள்ளது. (5,105)

# ரெக்சியன் கொலையைத் தொடர்ந்து நீக்கப்பட்டகமல்மீண்டும்ஈ.பி.டி.பியில்

யாழ்ப்பாணம், டிசெ. 30

நெடுந்தீவுப்பிரதேசசபையின்முன்னாள் தவிசாளர் ரெக்சியன் கொலை வழக்கில் முதன்மைச்சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஈ.பி.டி.பி.யின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக இருந்த க.கமலேஸ்வரன் அந்தக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் ஈ.பி.டி.பி. கட்சித் தலைமையகமாக சிறிதர் தியேட்டரில் நேற்று இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலில் அவர் பங்கேற்றுள்ளார்.

ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண முக்கிய தலைவர்களுடான கூட்டம் அந்தக் கட்சியின் அலுவலகமாகத் திகழும் சிறிதர் தியேட்டரில்இடம்பெற்றது. அந்தக்கூட்டத்தில் பலர் பங்கேற்றிருந்தனர்.

ஈ.பி.டி.பி கட்சியைச் சேர்ந்த நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் ரெக்சியன் 2014ஆம் ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன்தொடர்புடையசந்தேகத்தில்ஈ.பி.டி.பியின்யாழ்ப்பாணமாவட்டஅமைப்பாளராகவும், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த க.கமலேஸ்வரன் கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்துகமலேஸ்வரனைக்கட்சியிலிருந்துநீக்குவதாகஈ.பி.டி.பி. அறிவித்தது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, மகிந்தராஜபக்சதலைமையிலான சிறிலங்காபொதுமக்கள்முன்னணியுடன் இணைந்துக.கமலேஸ்வரன்செயற்பட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஈ.பி.டி.பியின் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். (5,8)

# 1ஆம் திகதி பணி ஆரம்பம் தொடர்பாக சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.30
எதிர்வரும் முதலாம் திகதி பணிகளை ஆரம்பிக்கும்போது மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள், எடுக்க வேண்டிய சத்தியப் பிரமாணம் என்பவை தொடர்பில் அனைத்து அலுவலகத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது:
பொது நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலரால் அமைச்சுக்களின் செயலர்கள், மாகாண பிரதி முதன்மைச் செயலர்கள், திணைக்கள அலுவலகத் தலைவர்களுக்கு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
அரச தலைவரால் போதைப் பொருள் அற்ற, மனித நேயம் மிக்க பண்பாடுகளைப் பின்பற்றக் கூடிய நாடாக மற்றும் கொள்கையின் அடிப்படையில் அரச அலுவலர்கள் கடமை புரிய வேண்டும்.
2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அரச தலைவர் செயலரால் புதிய ஆண்டு வேலைகள் ஆரம்பிப்பதற்கான சிறப்பு நிகழ்வு அரச தலைவர் செயலகத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும். அனைத்து அரச அலுவலகங்களிலும் இந்த நிகழ்வு நடைபெற வேண்டும்.
அனைத்து அலுவலர்களும் ஒரு இடத்தில் ஒன்று கூட வேண்டும். அலுவலகத் தலைவரால் இலங்கைத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, இலங்கைத் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும். நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் சத்தியப்பிரமாணம் செய்தல் வேண்டும். இவற்றுக்கு ஏற்றவாறு நிகழ்வை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-7)

# நீதித்துறை ஊடாக நாட்டின் ஜனநாயகத்தை காத்தோம்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30
அரசமைப்பை மீறி அரச தலைவர் மேற்கொண்ட தீர்மானங்களை நீதித் துறையின் ஊடாகத் தட்டிக் கேட்டோம். அதில் பெரும்



வெற்றியும் கண்டோம். நாங்கள் அதை முன்னெடுத்த பின்னர்தான் மற்றவர்கள் அதில் வந்து சேர்ந்து கொண்டார்கள். நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"நவம்பர் மாதம் 7 ஆம் திகதி வரவிருந்த அரசமைப்பு வரைவைத் தடுப்பதற்காகவே தாங்கள் இந்த மாற்றத்தைச் செய்தோம் என்று மகிந்த ராஜபக்ச தரப்பைச் சேர்ந்த பலர் கூறியிருக்கின்றனர். 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக தனக்கிருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன என்பதை அறியாதவர் போன்று அரச தலைவர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். 19ஆம் திருத்தத்தின் மூலம் அரச தலைவரிடம் இருந்து எடுக்கப்பட்ட அதிகாரங்கள் இன்னமும் தன்னிடம் இருக்கின்றது என்பது போன்று அரச தலைவர் செயற்பட்டு இந்தத் தீர்மானங்களை எடுத்தபோதுதான், அதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.
அரசமைப்பு மீறப்படுகின்றபோது அதைத் தடுக்கின்ற தேவை தமிழ் மக்களுக்குதான் உள்ளது. ஏனெனில் தற்போது ஒரு அரசமைப்பை நாம் எதிர்பார்ப்பது புதிய அரசமைப்பின் மூலமான ஒரு தீர்வே. எழுதப்பட்ட பின்னர் அரசமைப்பு மீறப்படுமாக இருந்தால் அந்தத் தீர்வில் எந்தப் பிரியோசனமும் இல்லை. அரசமைப்பு மீறப்படுவதை நாம் இப்போது தடுக்காவிட்டால் தீர்வு வந்த பின்னரும் அவர்கள் அதை மீறுவார்கள். நாம் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருப்போம்.
எமது செயற்பாட்டால் ஏற்பட்ட விளைவுகள் மிக முக்கியமானவை. ஒன்று நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தெற்கில் சிங்கள மக்களிடையே நாட்டுக்காக, நாட்டு நலனுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது என்ற நல்லெண்ணம் ஏற்பட்டுள்ளது. இது புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் மிகப் பெரிய பங்கை வகிக்கும்.
புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளில் துரிதமாக நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம். எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கிய ஒரு வரைவு வெளிவரும். புதிய அரசமைப்புத் தொடர்பான பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த நல்லெண்ணம் அதில் ஒரு பெரும் பங்கு வகிக்கும்" - என்றார். (ப)

# முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட வரைவு விரைவில்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.30
2019ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் நிதியமைச்சர் மங்கள சமவீரவால் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2019ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்குமான இடைக்காலக் கணக்கறிக்கை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.
அதில் புதிய யோசனைகள் உள்ளடக்கப்படா. 2018ஆம் ஆண்டின் கடன் செலுத்தல்கள், வட்டிக் கொடுப்பனவு, குறிப்பிட்ட அரச பணியாளர்களின் வேதனம், குறிப்பிட்ட அரச சேவை வேதன அதிகரிப்பு என்பன நடைமுறைப்படுத்தப்படும். இவை தவிர தேசிய பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துப் போன்ற அத்தியாவசியச் சேவைகள் தொடர்பான செலவினங்கள், இடைக்காலக் கணக்கறிக்கையின்படி சனவரி மாதம் முதல் ஈடு செய்யப்படவுள்ளன.
2019ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட வரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (ப-10)

# ஜனநாயகத்தைக் காத்தோம் என்ற தம்பட்டம் கேலிக்கூத்து

## விழுந்து விழுந்து சிரித்தேன் என்கின்றார் ஆனந்த சங்கரி

யாழ்ப்பாணம், டிசெ.30
தமிழீழ விடுதலைப் புலிகளின் சொல்லைக் கேட்டு 2004ஆம் ஆண்டு ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இப்போது ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டோம் என்று தம்பட்டம் அடிப்பது கேலிக் கூத்தாக உள்ளது.
இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டோம் என்று சம்பந்தன் கூறியதைக் கேட்டு நான் தனிமையில் விழுந்து விழுந்து சிரித்தேன். 2004ஆம் ஆண்டு ஜனநாயகம் புதைக்கப்படும்போது இவர்கள் எங்கிருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சைக் கேட்டுத் தேர்தலைப் புறக்கணித்தார்கள். அன்று ஜனநாயகம் காப்பற்றப்பட்டு இருந்தால் தமிழ் மக்களுக்கு இப்போது அவலநிலை வந்திருக்காது.
கடந்த காலங்களில் சம்பந்தன் நாடாளுமன்றம் எவ்வாறு வந்தார்?, காலையில் தோற்ற மாவை மாலையில் எப்படி வென்றார்?. கஜேந்திரகுமாருக்கு வாக்குகள் எப்படிக் கிடைத்தன என்று மக்கள் நன்கு



அறிவார்கள்.
அரசியல் நெருக்கடி ஏற்பட்டபோது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானது. ஆனால் அதனால் தமிழர்களுக்கு ஒரு பயனும் இல்லை. அதனால் நன்மை அடைந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே. அவர்களின் பதவிக்காகவே ரணிலுக்கு முண்டு கொடுத்துள்ளனர்.
தமிழ் மக்களுக்கு ஒருமித்த நாட்டுக்குள்தான் தீர்வு, சமஷ்டி தீர்வு என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறிவருகின்றார். நான் சுமந்திரனை அரசியல்வாதியாகப் பார்க்கவில்லை. அவர் காலையில் ஒரு கதை, மாலையில் ஒரு கதை கூறுபவர். இவர்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களை அழித்தவர்கள் என்றும், வேலை இல்லாதவர்கள்தான் அந்த அமைப்பில் இருந்தனர் என்றும் கூறியவர்" - என்றார். (ப-8)


**WINSTAR**
**INTERNATIONAL LEARNING CENTRE** இன்
**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்**
IELTS இல் மிகச்சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள 02.01.2019 அன்று நடைபெறும் எமது புலமைப்பரிசில் நுழைவுத் தேர்வில் கலந்துகொள்ளுங்கள்
நுழைவுத் தேர்வில் 50% இற்கும் மேலதிகமான புள்ளிகளை எடுக்கும் மாணவர்களுக்கு IELTS பயிற்சிக் கட்டணம் 12500/= மட்டுமே
அனுமதிகளை பெற்றுக்கொள்ள உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை 076 136 8544 இற்கு SMS அனுப்புங்கள்
WINSTAR CONSULTANTS (PVT)LTD
No:45, Vembadi Street,
Jaffna.
Tel: 076 136 8544

**VACANCY - ACCOUNTANT**
- பிரபல ஹோட்டல் ஒன்றின் நிர்வாகப் பிரிவிற்கு கணக்காளர் தேவை.
- இதே துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத முன்னனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிவரக் கோவையுடன் எதிர்வரும் 31.12.2018 / 02.01.2019 ஆகிய தினங்களில் முற்பகல் 10.00 மணிக்கு நேரில் வரவும்.
WINSTAR CONSULTANTS (PVT)LTD
No:45, Vembadi Street,
Jaffna.
Tel: 076 136 8544

# கிளிநொச்சி வெள்ளத்துக்கு காரணம் இரணைமடுவின் தவறான முகாமையே !

## இன்றைய அதிகாரிகளைச் சாடுகிறார் முன்னாள் அதிகாரி

**யாழ்ப்பாணம்,டிசெ.30**

**இரணைமடுக் குளத்தினை முறையாக கையாளுவதற்கான அனுபவமும், அறிவார்ந்த ஆற்றலும் இல்லாத நிலையே இன்று கிளிநொச்சியின் மக்கள் பேரவலத்துக்கும், பேரிடருக்கும் காரணம் என யாழ். பல்கலைக்கழக பொறியியல்த்துறை முதுநிலை விரிவுரையாளரும், நீர்ப்பாசனத் திணைக்கள முன்னாள் பொறியியலாளரும் , பொறியியல் நிபுணருமான கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் சில நாள்களுக்கு முன்னர் உதயனுக்குத் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் எனும் பெயரால் 164.04 மில்லியன் அமெரிக்கடொலர் செலவில் முன்வைக்கப்பட்ட திட்டம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டமாகும்.

இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு குளம் இரண்டு அடி உயர்த்தப்பட்டு, 14 வான்கதவுகளும் பொருத்தப்பட்ட நிலையிலும், சரியான திட்டமிடலின்மையால் தற்போது மக்களுக்கு ஏற்பட்ட நிலமை குறித்தும் உதயனால் அவரிடம் வினவப்பட்டது இந்தக் கேள்விக்குப் பதிலளித்த கலாநிதி எஸ்.சிவகுமார்: "2002 ஆம் ஆண்டு சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் அனுமதியுடன் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு முன்மொழியப்பட்ட பெரும் கருத்திட்டம் இதுவாகும்.

இதன்மூலம் குளத்தின் மேல்த்தள மற்றும் கீழ்த்தள வேலைகள் முன்னிலைப்படுத்தப்பட்ட போதும், மேல் தளத்தில் 14 வான்கதவுகளும் அதற்கான பொறிமுறைகளும் முன்னகர்த்த ப்பட்டன.

எனினும் உட்கட்டுமானத் திட்டம் மற்றும் பொறியியல் மதிப்பீட்டுத் திட்டம் எதுவும் இரணைமடுக் குள அபிவிருத்திக்குப் போதுமான அறிவுடன் முன்னகர்த்தப்படாமல், மேலெழுந்த வாரியாக இந்தத் திட்டம் அனுபவப்பகிர்வு ,அனுபவ முதிர்ச்சியற்ற நிலையில் முன்னகர்த்தி அரங்கேற்றப்பட்டது.

இதனால் தற்போது பெய்த மழையினால் 400 ஆயிரம் ஏக்கர் அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டதுடன், இரணைமடுக் குளத்தில் உள்ள நீரை போன்று 3 மடங்கு நீர் கடலுக்குள் அனுப்பப்பட்ட அவலநிலை இன்று தோன்றியுள்ளது.

அத்துடன் இன்று கிளிநொச்சி மக்கள் இந்தப் பேரிடரை அனுபவிப்பதற்கு கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரது அனுபவ முதிர்ச்சியற்ற நிலையே 100 வீத அழிவுக்குக் காரணம்.

மேலும்உட்கட்டுமானத்தின்போது 14 வான்கதவுகள் பொருத்தமான அணுகுமுறையில் அமைக்கப்படாததுடன், அதில் 3 வான் கதவுகள் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளருக்கு (பிரதிப் பணிப்பாளருக்கு) இரணைமடுக்குளத்தின் பொறியியல் செயற்பாடு தொடர்பான அறிவோ, வெள்ள இடர் தொடர்பான அறிவோ இன்றி இந்தச் செயற்பாட்டினை மேற்கொள்வதனால்த்தான் இந்தப் பேரிடர் ஏற்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், கிளிநொச்சிக்கும்,யாழ்ப்பாணத்துக்கும் குடிதண்ணீர் வழங்க முடியுமாக இருந்தால் மட்டுமே இந்தத் திட்டம் முன்னகர்த்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்திட்டம் இன்று அந்த குடிதண்ணீர் வழங்கும் திட்டமும் இன்றி இரணைமடுக்குள அபிவிருத்தி என்பது பொருத்தமான தொழில்நுட்ப தொழில்நுணுக்கம், அனுபவமுமின்றி மேற்கொள்ளப்பட்ட முறையால் கிளிநொச்சியில் மக்கள் இருப்பிடம் இழந்து முகாம்களுக்குள் அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர் நிலையாகவும் ஏற்படவுள்ளது.

இந்த ஏதுநிலைக்கு காரணமானவர் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் தான்" - என்றார்.

மேலும் இரணைமடுக்குளம் நீர் அதிகரிக்க முன்னர் வான் கதவுகள் படிப்படியாகத் திறந்திருக்க வேண்டும்.

இவ்வாறான அறிவுறுத்தல்களைச் சம்பந்தப்பட்ட கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பேரிடருக்கு முன்னர் நான் தொலைபேசியில் அறிவித்திருந்தேன். ஏனினும் இந்த விடயம் தொடர்பில் முப்பது வருட நீர்ப்பாசன பொறியியலாளரான எனது கருத்தை அவர்கள் செவி மடுக்க முயலவில்லை அத்துடன் விரும்பவும் இல்லை" - என்றார்.

3 வான்கதவுகள் பொறிமுறையற்று திறக்கப்பட முடியாமைதொடர்பில்வடக்குமாகாண ஆளுநரோ அன்றி அரச தலைவரோ விசாரணை ஆணைக்குழுவை நியமித்து இந்த விடயம் தொடர்பில் உண்மைத் தன்மையை ஆராயலாமே என தொடுக்கப்பட்ட வினாவுக்கு பதிலளிக்கையில் மேற்படி விடயம் மிகப்பொருத்தமானது -அவசியமானதும் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயம். இதற்கு ஆணைக்குழுவை நியமிப்பது பொருத்தமானது. இதன் உண்மைத் தன்மை முழுவதனையும் அறியலாம்" - என்றார்.

ஆனால் தற்போது இரணைமடுக்குளத்தினால் ஏற்பட்ட இடர்தொடர்பான விசாரணைக்குழுவுக்கு யாழ்.பல்கலைக்கழக பொறியியல்த்துறை முதுநிலை விரிவுரையாளரும், முன்னாள் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் நிபுணரு மான கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் ஆகிய இவரே முகாமைத்துவம் தொடர்பான விசாரணைக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(50)

# தகவல்களை மறைக்கும் வவுனியா நகரசபை

வவுனியா. டிசெ.30

வவுனியா நகரசபையால் கடந்த மாதம் 2 ஆம் திகதி நடத்தப்பட்ட "எழு நீ விருது" வழங்கும் நிகழ்வுக்கு செலவான செலவீனங்கள், பற்றுச்சீட்டின் விவரங்கள் என்பன கோரப்பட்டு வவுனியா நகரசபைக்கு தகவல் அறியும் சட்டத்தினூடாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அதற்கு நகரசபையிலிருந்து தங்களால் கோரப்பட்ட தகவல்கள் பூர ணமானதாகவோ திருப்திகரமானதாகவோ இல்லை எனவே தாங்கள் கோரும் தகவல்களை வழங்க முடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையினால் நடத்தப்பட்ட "எழு நீ விருது" வழங்கும் நிகழ்வில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக நகரசபை உறுப்பினர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ள நிலையில், அதன் விவரங்களே தகவல் அறியும் சட்டத்தினூடாக கோரப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அதற்கு வழங்கப்பட்ட பதிலில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பூரணமான தாகவோ திருப்பிகரமானதாகவோ இல்லை. எனவே தங்களின் கோரிக்கைக்கு பதில் வழங்க முடிய வில்லை என்று தெரிவிக்கப்பட்டு பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"எழு நீ நிகழ்வுக்கு" வர்த்தகர்களிடமிருந்து பெரும் தொகைப்பணம் சேகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் விழாக் குழுவினராலும் பல வர்த்தகப் பிரமுகர்களிடமும் பணம் சேகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. எனினும் இதன் விவரங்களை வெளியே வழங்குவதற்கு தயக்கம் காட்டிவருவதுடன் வெளியிடுவதால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதுடன் தலைவரின் பதவிக்கும் ஆபத்து ஏற்படும் எனக்கருதியே இதனை வெளியிட மறுத்துள்ளார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

(111)

# அடிக்கல் நடும் நிகழ்வு



வவுனியா,டிசெ.30

'எல்லோருக்கும் வீடு' எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் ஆறு கிராமங்களில் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோகதாரலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர் முன்னாள் செ.மயூரன், வவுனியா தெற்கு பிரதேச சபை உப தவிசாளர் மகேந்திரன், ஐக்கிய தேசிய கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் கருணாதாஸ, மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை முழுவதும் உள்ள 92 பகுதிகளில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக வவுனியா மாவட்டத்தில், சமயபுரம், சாம்பல்தோட்டம் 1, சாம்பல்தோட்டம் 2, சிறீராமபுரம் பெனடிக்நகர், தாஸ்நகர், இத்திக்குளம் ஆகிய கிராமங்களில் வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல்லு நடும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(110)

# மாந்தை மேற்கு பிரதேசத்தில் ஒளி விழா



மன்னார்,டிசெ. 30

வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், மன்னார் மாவட்டச் செயலகம் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய ஒளி விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் மாந்தைமேற்கு பிரதேச சபை மைதானத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே. மன்னார் மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னான்டோ. வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் சத்தியசீலன், முன்னாள் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்ரியன், திருக்கேதீஸ்வரத்தின் பிரதம குரு கண்ணன் குருக்கள், பேசாலை முருகன் கோவில் பிரதம குரு மஹா தர்மகுமார குருக்கள், மன்னார் மாவட்ட குருக்களின் முதல்வர் விக்டர் சோசை மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் சிவபாலன் குணபாலன், நானாட்டான் முசலி பிரதேச சபை தவிசாளர்கள், மன்னார் முசலி மடுப் பிரதேச செயலர்கள், பங்குத் தந்தையர்கள், மாந்தை இஸ்லாமிய மௌலவி அப்துல் றவூப் தஸ்னீம், வடமாகாண ஆளுநரின் செயலர் இளங்கோவன்,பிரதேச செயலக பணியாளர்கள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(213)

# மயானத்தில் கொட்டகை இன்மையால் மக்கள் அவதி



முல்லைத்தீவு,டிசெ.30

தருமபுரம் பொது மயானத்தில் மழைக்காலத்தில் சடலங்களை எரிப்பதற்கான நிரந்தர கொட்டகை இன்மையால் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். மழை காலத்தில் சடலங்களை எரிப்பதற்கு 12 ஆம் கட்டை விசுவமடு பகுதிக்கு எடுத்துச்செல்ல வேண்டியுள்ளது. உரியவர்கள் இதற்கான தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(222)

### திருட்டு முயற்சி பிசுபிசுப்பு

# வீட்டிலிருந்தோரை தாக்கிவிட்டு தப்பியோட்டம்

சாவகச்சேரி,டிசெ.30

நள்ளிரவு வேளையில் வீட்டினுள் நுழைந்து திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்களை வீட்டிலிருந்தவர்கள் தடுத்ததால் அவர்களைத் தாக்கி விட்டு திருடர்கள் தப்பியோடியுள்ளனர்.
இந்தச்சம்பவம் வரணி வடக்குப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது.
திருடர்களின் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
வீட்டினுள் நடமாட்டம் காணப்படுவதை அவதானித்த குடும்பத் தலைவர் மின் விளக்குகளை ஒளிரவிட்டபோது முகமூடி அணிந்திருந்த திருடர்கள் கொட்டன்களால் அவரைத் தாக்கியுள்ளனர்.
தந்தையின் அலறல்கேட்டு வந்த மகன் மற்றும் மகள் ஆகியோரையும் திருடர்கள் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.
தாக்குதலுக்கு இலக்கான தந்தையும் இரு பிள்ளைகளும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை மட்டுவில் வடக்குப்பகுதியில் காணிக்குள் அத்துமீறிச் சென்று குடும்பத்தினரை தாக்கிய சம்பவம் ஒன்றும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
தாக்குதலில் காயமடைந்த 54 வயது மற்றும் 28 வயதுடைய இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
(ஐ-9)

## பெரும்பான்மை...

னேஸ்வரன் தெரிவித்தார்.
'அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைப்பதிலும் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதிலும் இலங்கையின் உயர்மட்ட நீதித்துறை செயற்பட்ட விதம் மெச்சப்படக்கூடியது; மெச்சுகின்றோம். ஆனால், இதனை ஒரு உதாரணமாக எடுத்துக்கொண்டு போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை விடயங்களில் இலங்கை நீதிமன்றங்களின் ஊடாக நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பன்னாட்டுச் சமூகம் சிந்திக்கக்கூடாது. இரு இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஏற்பட்டதே இனப்படுகொலை. அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி என்பது நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு பொதுவான பிரச்சினை. ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சனை. அங்கே இன ரீதியான பக்கச் சார்பான செயற்பாடுகளுக்கு இடம் இருக்கவில்லை. இனப்பிரச்சினை விடயத்தைப் பொறுத்தவரையில், இலங்கையின் எல்லா தேசிய நிறுவனங்களுமே இன ரீதியாகப் பிளவடைந்து நிற்கின்றன. அரசாலும் பெரும்பான்மை இன மக்களாலும் கட்டுப்படுத்தப்படும் இந்த நிறுவனங்களில் எமக்கான நீதியை நாம் எதிர்பார்க்க முடியாது. இதற்கு நீதித்துறை விதிவிலக்கல்ல' என்று விக்னேஸ்வரன் குறிப்பிட் டார்.
கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியால் உதவி வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொன்று குவித்த இராணுவமே இன்று கொடைகளையும் கொடுக்க முன்வந்துள்ளது. தாம் மனிதாபிமான நிறுவனமாக மாறியுள்ளார்கள் என்று ஜெனிவாவில் காட்ட வேண்டிய ஒரு கடப்பாடு அவர்களுக்கு இருக்கலாம். அதற்கு எமது மக்களை அவர்கள் பாவிக்கலாம். ஆனால் அதற்காக எமது மக்கள் எமது மக்கள் அல்ல என்று ஆகிவிடாது.

**பாகுபாடு**
**அதிகரிப்பு**

எம்மவர் பிறர், நாங்கள் அவர்கள் என்ற பாகுபாடு எங்களிடையே அதிகமாக மேலோங்கியுள்ளதை அவதானிக்கின்றேன். அதனால் தமிழ்ச் சமூகம் சீரழிந்து செல்கின்றது என்பதை நாங்கள் உணர்வதில்லை. எங்கள் காரியாலய அறையில் காற்றாடியால் ஒரு ஆவணம் பறக்கத் தலைப்பட்டால் நாம் காற்றாடியின் விசையைக் குறைத்து ஆவணத்தைப் பற்றிக் கொள்கின்றோம். அதற்காக ஆவணத்தைப் பிடிக்க துள்ளித் துள்ளி ஓடுவது கெட்டித்தனமான ஒரு செயலல்ல. அதே போல் இன்று எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பலவிதமான அல்லல்களுக்கும் பிறழ்வுகளுக்கும் எம் இனத்தவரையே குறை கூறிப் பயனில்லை. காற்றாடியின் விசையைக் குறைப்பது போல் கொழும்பு அரசு எங்கள் மீது கொண்டிருக்கும் அழுங்குப் பிடியைத் தளர்த்த நாம் ஆவன செய்ய வேண்டும். அதனால்த்தான் நான் முதலமைச்சராக வந்த நாளில் இருந்து படையினரை எமது மாகாணங்களில் இருந்து மீளப்பெறுங்கள் என்று கோரி வருகின்றேன்.
போர்க்காலத்தில் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் சுனாமியின் போது ஒன்று சேர்ந்து சில நாள்கள் மனிதாபிமான மக்கள் சேவையில் ஈடுபட்டார்கள். ஆகவே நாங்கள் மனிதாபிமான செயல்களில் ஈடுபடும் போது எமது வேற்றுமைகளையும் விரோதங்களையும் வித்தியாசங்களையும் முதன்மைப் படுத்தாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தர பாடுபடுவோம்.

**மூடிமறைக்கும் அரசு**

காணாமல் போன உறவுகளை கண்டுபிடிப்பதற்கும் அநீதிக்கு எதிராக நீதியைப் பெற்றுக் கொள்வதற்கும் வீதிகளில் நின்று பல வருடங்களாக போராடி வந்துள்ளார்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர். அரசு அவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்காமல் பொறுப்பற்ற வகையில் நடந்து வருகின்றது. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் எமது கோரிக்கைகளை செயற்படுத்த அவை முன்வரா. எமது பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொண்ட தமது அனைத்துக் குற்றங்களையும் திட்டமிட்டு மூடி மறைக்கும் செயற்பாடுகளிலேயே அரசுகள் ஈடுபட்டு வருகின்றன.
அதனால்த் தான் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஊடாக பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ளும் விதமாக முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்ட காலம் முதல் அவற்றை வலியுறுத்தி வருகின்றேன். மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடு. இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எத்தகைய செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கவேண்டும் எவ்வாறு பன்னாட்டுச் சமுகத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பவை குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.
காணாமல்போனோரின் குடும்பத்தவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவதானால் இவ்வாறான வெளிநாட்டு நீதித்துறையினரின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் விசாரணைகளே அவற்றைப் பெற்றுக் கொடுப்பன என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது.

**கொள்கைகளில் உறுதி**

எமது கட்சி கொள்கைகள் சார்ந்த கட்சி. கொள்கைகள் என்று வரும் போது நாங்கள் அவற்றில் உறுதியாக இருப்போம். இவ்வாறான மனிதாபிமான உதவிகள் வழங்கும் இடத்தில் எந்தவித அரசியலையும் முடியுமான வரையில் சேர்க்க மாட்டோம். ஆனால் சில விடயங்களை இங்கு கூற வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.
நாங்கள் கொள்கைகளில் விடாப்பிடியாக நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆளுக்கு ஆள் 'கொள்கைகள்' 'கொள்கைகள்' என்று கூறிவிட்டுத் தமது பைகளை நிரப்பிக் கொள்கின்றார்கள். உல்லாச வாழ்க்கைகள் வாழ்கின்றார்கள். கொள்கைகளை ஆவணங்களில் பொறித்து விட்டு சுயநல நடவடிக்கைகளில் ஈடுபடத் துணிந்துள்ளனர். அந்த நிலை மாற வேண்டும். எமது வருங்காலம் பற்றிய சிந்தனைகள் மேலெழுந்தால் கட்டாயமாக நாம் எமது கொள்கைகளில் பற்றுறுதியாக செயற்பட வேண்டி வரும் - என்றார்.
(5.21)

## நீண்ட...

பொறுப்புக்கள், விடயதானங்கள் மற்றும் அரச நிறுவனங்களை உள்ளடக்கிய விபரம் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.
டிசெம்பர் 28 ஆம் திகதியிடப்பட்டு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.
பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள், தேசிய பாதுகாப்பு நிதியம், இலங்கை பொலிஸ் திணைக்களம், அரச புலனாய்வுத் துறை, கடலோர பாதுகாப்பு திணைக்களம், தேசிய ஊடக மத்திய நிலையம் மற்றும் அரச அச்சகம் என்பன உள்ளிட்ட 43 திணைக்களங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.
திறைசேரி, மத்திய வங்கி, அரச வங்கிகள், தேசிய லொத்தர் சபை, இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி சேவை, லேக்ஹவுஸ் நிறுவனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய அரச ஊடகங்கள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.
(5)

## நோய்கள்...

கின்றன. இங்குள்ள முகாம்களில் நோய்கள் பரவும் ஆபத்து இல்லை. இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முன்னெடுக்கப்படும் சுகாதார சேவைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கும் சுகாதார போசணைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித நேற்று சனிக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்திருந்தார்.
சுகாதார போசணைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம், சிறி ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, மருந்து தொழில்துறையின் வணிகக் குழு உள்ளிட்ட பல நிறுவனங்களால் பெற்றுக்கொடுக்கப்பட்ட உலர் உணவு மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் இதன்போது பகிர்ந்தளிக்கப்பட்டன.
வழங்கப்பட்ட உதவித் தொகையின் மொத்த மதிப்பு 2 கோடிக்கு அதிகமானவை. கிளிநொச்சி பரந்தன் முருகானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் உள்ள 400 குடும்பங்கள் மற்றும் முல்லைத்தீவு சுதந்திரபுரம் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள 600 குடும்பங்களுக்கு சுகாதார அமைச்சரால் உலர் உணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
இந்த இரண்டு முகாமில் உள்ள மக்களுக்கு உலர் உணவுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் ஏனைய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு எஞ்சியுள்ள உலர் உணவுப் பொதிகளை பகிர்ந்தளிக்குமாறு பிரதேச செயலர்களுக்கு சுகாதார அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.
இங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர்,
வடக்குக்கு தெற்கில் உள்ளவர்கள் செய்யும் நல்லிணக்க வேலைத்திட்டத்தின் மற்றுமொரு பகுதி இதுவாகும். நல்லிணக்கத்துக்காக எனது வாழ்நாள் முழுவதும் நான் செயற்பட்டுள்ளேன். நான் போருக்கு எதிரானவன். வடக்கு மக்கள் 30 ஆண்டுகளாகப் போரால் பாதிக்கப்பட்டனர். பின்னர் இந்த இயற்கை பேரழிவுக்கு முகங்கொடுக்கின்றனர்.
நோய் பரவல் மற்றும் பரவுதலை தடுப்பது தான் எமது முதலாது இலக்காகும். மக்களுக்கு அவசியமான உலர் உணவுகள் அரசு மூலமும் முறையாக வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்கவும் பாதிக்கப்பட்ட வீடுகளை மறுசீரமைக்கவும் அரசு உத்தேசித்துள்ளது. சுகாதார சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன - என்றார்.
இதுதேவேளை கிளிநொச்சியில் சுகாதார அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் அவசர மற்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை முழுமையாக நிர்மாணிப்பதற்காக 2017ஆம் ஆண்டு பாதீட்டின் ஊடாக வழங்குவதற்குப் பரிந்துரை செய்யப்பட்ட 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை கட்டம் கட்டமாக ஒதுக்கீடு செய்யுமாறு கோரினார். வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த காலப் பகுதியில் வடமாகாணத்தின் பல மருத்துவமனைகளை மேம்படுத்த நெதர்லாந்து அரசின் ஊடாகச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த செய்ற்திட்டமானது தாமதம் இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.
வடமாகாண சுகாதார சாரதிகள் சங்கத்தினர் அமைச்சரைச் சந்தித்து தமக்கு இலங்கையில் வேறெந்தப் பகுதியிலும் இல்லாத வகையில் வடமாகாணத்தில் மட்டும் திணைக்களத்துக்கு வெளியான இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக முறையிட்டனர். முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் சாரதிகள் பல காலம் சேவை அனுபவம் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றுடன் சிறந்த சேவையாற்றி வருவதால் வினைத்திறனான சேவையினைப் பெறும் நோக்குடன் திணைக்களத்தின் உள்ளான இடமாற்றம் வழங்கப்படுவதே பொருத்தமானது என்று குறிப்பிட்டார். அதே கருத்தையே கொண்டிருப்பதாகத் தெரிவித்த சுகாதார அமைச்சர் இலங்கையில் பிற மாகாணங்களிலும் கொழும்பு சுகாதார அமைச்சிலும் இடம்பெறுவது போல திணைக்களத்தின் உள்ளக இடமாற்றத்தை வடமாகாணத்திலும் நடைமுறைப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 50 ஆயிரம் குளோரின் மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆயிரத்து 500டி.சி.எல். கிலோகிராமும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்குத் தேவையான திரிபோஷாவும் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, யுனிசெப் நிறுவனத்தால் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்ட சுகாதார உபகரணங்கள் ஒரு தொகையும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
(5.6.10.105.214)

## வடமராட்சி...

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடமாராட்சி கிழக்கு ஆழியவளை கடற்கரையில் நேற்று அதிகாலை மர்மப் பொருள் கரை ஒதுங்கியுள்ளது.
சுமார் 15 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட மர்மப் பொருளின் நிறை சுமார் 3 ஆயிரம் கிலோ வரையில் இருக்கலாம் என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
மர்மப் பொருள் தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் இரு தடவை அதனை நேற்று வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.
(5.160)

## வெள்ள...

அதே இடத்தைச் சேர்ந்த சி.அன்பழகன் என்னும் சிறுவனே உயிரிழந்தவராவார்.
உயிரிழந்த சிறுவனும் இன்னுமொரு சிறுவனும் அந்தப் பகுதியில் விளையாடியுள்ளனர். இதன்போது அன்பழகன் நீரில் மூழ்கியுள்ளான். மற்றைய சிறுவன் ஓடிச் சென்று உறவினர்களிடம் விடயத்தை தெரியப்படுத்தியுள்ளான். இளைஞர்கள் வாய்க்காலில் குதித்துத் தேடியுள்ளனர். அன்பழகனை மீட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். சிறுவன் உயிரிழந்துவிட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
(5.105)

## காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் "வல்வை ஆவணக்காப்பகத்திற்கு" அருகில் 3 1/4 பரப்பு பனங்காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் வேண்டாம்.

தொடர்பு - 077 788 1726, 071 838 3309

## விற்பனைக்குண்டு

**ஓவ் செற் பிறிண்டிங் மெசின்**

Kord Black Long Box -18X24 inch

Chinese Cutter - 42 inch என்பன விற்பனைக்குண்டு.

T.P: - 076 997 4741

## விற்பனைக்கு உண்டு

ஆலய பாவனையில் உள்ள ஓட்டுக் கூரை மற்றும் கட்டட இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு. மிகவும் நல்ல நிலையிலுள்ள ஆலயத்தின் ஓடு. ஊசிக்கால் மரம், வளைமரம், சிலாகை மரம் என்பன விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் எமது ஆலய நிர்வாக சபையினரிடம் தொடர்பு கொள்ளவும்.

**நொச்சியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். - 077 986 4138, 076 905 7345**

## வாகனம் விற்பனைக்கு

நிறுவன பாவனையில் இருக்கும் சிறந்த பராமரிப்பு நிலையில் உள்ள 9 இலக்கங்கள் கொண்ட Toyota Hiace Panel van (Dual Purpose Vechicle) PF xxxx இலக்கமுடைய வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 9944 439,
077 769 6443

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

**யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

மேற்படி கூட்டம் எதிர்வரும் 13.01.2019 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே பழைய மாணவர்கள் அனைவரும் சமுகமளித்து கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆகவேண்டிய ஒத்துழைப்புகளை வழங்கும் வண்ணம் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**த. சர்வேஸ்வரன், தலைவர்.** **கா. சிவஞானசுந்தரம், செயலாளர்.**

(C 8902/15/17)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் 3 அல்லது 4 அறைகளுடன் சகல வசதிகள் கொண்ட வீடு தேவை.

077 646 0799

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு வேலை ஆள்கள் தேவை. ஆண் / பெண்

தொடர்பு - 077 704 3636,
077 327 6285

## வேலை வாய்ப்பு

நன்கு பராமரிக்கப்பட்டு வரும் சங்கிலித் தொடர் றெஸ்ரூறண்டுகளில் வேலை செய்ய கூலியாள் ஒருவர் உடனடியாக தேவை. கடுமையான வேலை செய்பவராக இருத்தல் வேண்டும் கவர்ச்சிகரமான சம்பளம் சேவைக்கட்டணம் மற்றும் அனுகூலங்கள் வழங்கப்படும். 075 848 8468 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில் A9 வீதி அறவெளி கட்டடம், பூங்கன்று விற்பனை நிலையம் அருகில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(CS 22054)(04.17)

076 716 2036/076 943 4916
077 968 1906

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதான வீதியில் கெருடாவில் கந்தசாமி கோயிலிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500 m (1/2 km) தூரத்திலும் பாடசாலை பாடசாலைகள், தபாற் கந்தோர், புகையிரத நிலையம் சந்தைக்கு நடந்து செல்லக் கூடிய தூரத்தில் பஸ் வசதியுடனும் 7 துண்டங்களாக அமைந்துள்ள 31 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தெருவோரத்தில் அமைந்துள்ள 9 பரப்புக்காணியின் பெறுமதி பரப்பு 4 1/2 லட்சம் துண்டங்களாகவோ (வரைபடமுள்ளது) முழுமையாகவோ விரும்பியபடி வாங்க முடியும் விலை பேசித்தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு - திருமதி யோகா நாகேந்திரம் கெருடாவில் கந்தசாமி கோவில் அருகில் பருத்தித்துறை வீதி, கெருடாவில் சாவகச்சேரி தொலைபேசி இல. 077 1601 115, 011 258 8325 காணி உரிமையாளரை 2018 டிசம்பர் 31 முதல் 2019 ஜனவரி 8 ஆம் திகதி வரை மேற்படி முகவரியில் சந்திக்கமுடியும்.

## சீருடை வவுச்சர் வழங்கல்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மாணவர்களுக்கான சீருடை வவுச்சர்கள் நாளைதிங்கள் கிழமைகாலை 9 மணிமுதல் வழங்கப்படும்என்று அதிபர் அறிவித்துள்ளார். மாணவர்கள் அனை வரும் இந்தச் சீருடை வவுச்சர்களை வந்து பெற்றுக்கொள்வதோடு, ஆசிரியர்களையும்பாடசாலைக்குசமூகமளிக்குமாறு அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (7)

## திருவாசக முற்றோதல்

திருவாசக முற்றோதல் நிகழ்வு வவுனியா தட்சணாங்குளம் விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம் பெறும். வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத்தலங்க ளில் திருவாசக முற்றோதல் கள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 ஆம் ஆண்டு சூரியன் செவ்வாய் (2இல்) கிரகபாவம் 23 1/2, ரோகினி 2 ஆம் பாதம் அரச தொழில் புரியும் (B.com) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு - 076 132 2135

## தேவை

பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், சமையல் உணவக வேலை என்பவற்றுக்கு பெண்கள் தேவை.

தொடர்பு - 077 174 6101

## விற்பனைக்கு உண்டு

முச்சக்கர வண்டி

NP ABS XXXX

(CS 22167)(04.17)

076 276 7165

## மணமகன் தேவை

1993, யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த Bio Medical Science படித்து வேலை செய்யும் லண்டனில் வசிக்கும் மகளிற்கு PR உள்ள / PR இல்லாத Student Visa இல் உள்ள மணமகன் தேவை.

(CS 22168)(04.17)

076 998 0693/076 119 8887

## நன்றி செலுத்தும் வழிபாடு

அருள்திரு சேவக்ஜ.த. இயேசு சகாயத்தின் (சின்னண் ணன்) வாழ்வு, பணிக்கு கடவுளுக்குநன்றிசெலுத்தும் நற்கருணை வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவசேவஆச்சிரமத்தில்நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டது. அனைத்து ஆச்சிரம அன்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக் கப் பட்டுள்ளது. (7)

## நூல் வெளியீடு

வவுனியா பிரதேச கலாசார அலுவலர் வீர சிங்கம் பிரதீபன் எழுதிய "தமிழர்மரபுக்கலைகள்" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசுவாமிகோவில் திருமணமண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளநிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் பதில்பணிப்பாளர்திருமதி சுஜீவா சிவதாஸ் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொள்வார். (110)

# மரண அறிவித்தல்

## கந்தையா விவேகானந்தன்

(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர், ஓய்வு பெற்ற சனச அபிவிருத்தி வங்கி முகாமையாளர், ஓய்வு பெற்ற கொமர்சல் லீசிங் கம்பனி முகாமையாளர்)



யாழ்ப்பாணம் நெல்லியான் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மன்னார் நானாட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விவேகானந்தன் நேற்று (29.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான Dr. இரத்தினசிங்கம் விஜயலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் ஸ்ரீஜெயதேவியின் அன்புக்கணவரும் திருச்செல்வத்தின் அன்புச்சகோதரரும் Dr. முரளீதரன் (பொது வைத்திய சாலை திருகோணமலை), துவாரகா (ஆசிரியை, மன் /டிலாசால் கல்லூரி நானாட்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் Dr. சக்திபாலன் (பொது வைத்தியசாலை மன்னார்), Dr. வசீகரி (பொது வைத்தியசாலை, திருகோணமலை) ஆகி யோரின் அன்பு மாமனும் சக்திகா, அக்ஷயினி, சக்திப்பிரியா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கனகசுந்தரி (கொழும்பு), காலஞ்சென்ற நடராஜாதாசன் மற்றும் தில்லை நடராஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் தங்கச்சியம்மா (கனடா), மகாலெட்சுமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும் Dr. கண்ணதாசன் (மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), மணி வண்ணன் (கல்வி அமைச்சு வடமாகாணம்), உமாதேவி (ஆசிரியர், யாழ். விக்ரோறியாகல்லூரி), Dr. கௌரிமகேஸ்வரன் (மலேசியா), ரவீந்திரன் (கொழும்பு), ரகுநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சித்தப்பாவும் செல்வரூபன் (கனடா), செல்வரஞ்சினி (டென்மார்க்), லோகேஸ்வரன் (பொறியியலாளர், யாழ்ப்பாணம்), லோகரமணன் (கணக்காளர், கொழும்பு) மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (31.12.2018) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நானாட்டான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஸ்ரீ ஜெயதேவி வாசா கங்காணி தீவு, நானாட்டான்*
*மன்னார். 023 205 0637, 077 378 4085*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ஒரு தரப்பை...

ரெலோ இளைஞர் அணியின் யாழ்ப்பாண மாவட்டக்கிளைக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"உக்கிரமான அதிகாரப்போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் புகுந்து விளையாடுவதன் ஊடாக இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்ற சிந்தனை நடைமுறைச் சாத்தியமானது அல்ல. அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு அரசமைப்பு மாற்றப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. அது மட்டுமன்றி பொது வாக்கெடுப்பு மூலம் அனுமதி பெறப்பட வேண்டும்.

இரண்டு சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் அரசியற் தீர்வை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. இந்த யதார்த்தமான நிலமையில் பிரதான சிங்களக் கட்சிகளில் ஒன்றைத் தீவிரமாக எதிர்த்தபடி தமிழர் தரப்பு அரசியல் தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

### கைகொடுத்த கூட்டமைப்பு

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்தது அரசமைப்புக்கு முற்றிலும் விரோதமானது என்ற அடிப்படையில் தான், மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் தலைமை அமைச்சர் பதவியில் மகிந்த ராஜபக்ச நீடித்து கொண்டிருந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்து, பெரும்பான்மை ஆதரவை நிருபிக்கும் அவரின் நடவடிக்கைக்கு கூட்டமைப்பு கைகொடுத்தது. நிகழ்ந்து முடிந்த அரசியல் நெருக்கடியில் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தீர்மானிக்கும் சக்தியாக அதனை நிலைநாட்டியது.

### திருப்திப்படுத்தாது

கூட்டமைப்பின் ஆதரவில் தங்கி நிற்கும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அரசியற் தீர்வுத் திட்டத்தை விரைவில் முன்வைக்கப் போவதாக கூறிக் கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் ஒற்றை ஆட்சி அரசமைப்பையும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமையையும் வலியுறுத்தி நிற்கின்றது. ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு சந்தேகத்துக்கும் இடமளிக்காமல் தனது நிலைப்பாட்டை தொடர்ந்து கூறி வந்துள்ளார்.

அரசியற் தீர்வுப் பொதியை அரச தரப்பு முன்வைத்தாலுங் கூட, தமிழ் இனத்தின் நீண்ட கால எதிர்பார்ப்புக்களை அது திருப்திப்படுத்தப்போவதில்லை என்பது வெளிப்படையானது.

### யதார்த்தம் வேறு

அரசியல் நெருக்கடியின் போது கூட்டமைப்பு கைக்கொண்ட நிலைப்பாட்டினால் சிங்கள மக்களின் மனங்கள் வெல்லப்பட்டிருப்பதாக அமைச்சர்கள் பேசி வருகின்றார்கள். கேட்பதற்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தாலும் யதார்த்தம் வேறாகவே உள்ளது.

சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் அரசியற் பாரம்பரியத்தின் வழியில் இனவாதக் கோஷத்தை மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணி கையில் எடுத்துக் கொண்டுள்ளது. பொதுத்தேர்தல் ஒன்றில் அந்த அணி வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புக்கள் இப்போதும் பிரகாசமாகவே உள்ளன. இந்த அரசியல் அணியை புறந்தள்ளிவிட்டு அரசியற் தீர்வு பற்றி சிந்திப்பதும் பேசுவதும் விவேகமானது அல்ல.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இப்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் முடிவதற்குள் அரசியற் தீர்வு நடவடிக்கைகளில் ஆக்கபூர்வமான திருப்பங்கள் எதற்கும் இடமிருக்கப் போவதில்லை என்று அடித்துக் கூற முடியும்.

### பிரதியீடு என்ன?

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் அரசு அமைக்கப்படுவதற்கும் நிலைத்து நிற்பதற்கும் கைகொடுத்துக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் முன்னால் அரசியல் சவால் இப்போது எழுந்து நிற்கின்றது. அரசியல் தீர்வு விடயத்துக்கு அப்பால், அரசைக் காப்பாற்றி நிற்பதற்கான பிரதி ஈடாக கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதே அதுவாகும்.

காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பவற்றை அரசியல் அழுத்தத்தோடு கையாளவேண்டிய அதே நேரத்தில் அரசமைப்பு பின்பற்றப்பட்டே ஆக வேண்டும் என்ற பொதுவான நிலைப்பாட்டை அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளைப் போலவே தானும் கொண்டிருக்கும் கூட்டமைப்பு, அதே அரசமைப்பின் கீழ், அதன் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு உரிய காணி மற்றம் பொலிஸ் அதிகாரங்கள், முப்பது வருடங்கள் கழிந்த நிலையில், இனியாவது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை தீவிரமாக வலியுறுத்தி சாதித்ததாக வேண்டும்.

### ஒளிவுமறைவு தேவையில்லை

கூட்டமைப்பின் நிலைப்பாட்டினால் ஒரு பகுதி சிங்கள மக்களின் மனங்களாவது வெல்லப்பட்டுள்ளன என்றால், அரசமைப்புக்கு அமைவான இத்தகைய நடவடிக்கையில் ஒளிவு மறைவு எதுவும் இருக்க வேண்டியதில்லை.

கூட்டமைப்பின் ஆதரவில் தங்கியுள்ள அரசு அடுத்துவரும் இரண்டொரு மாதங்களுக்குள் நல்லெண்ண அடிப்படையில் தமிழ் மக்களின் மிகவும் நியாயமான சில கோரிக்கைகளையாவது நிறைவேற்றத் தவறுமானால், தொடர்ந்தும் அரசுக்கு முண்டு கொடுப்பதை கூட்டமைப்பு மறந்தே ஆக வேண்டும்

இந்தக் கோரிக்கைகளின் பின்னால் உள்ள அவசியம், அவசரம் என்பனவற்றோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயமரியாதையும் இவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது. எனவே தான் சமரசம், விட்டுக்கொடுப்பு என்பனவற்றுக்கு இடமிருக்க முடியாது- என்றார். (5,26)

## பன்னாட்டு...

நாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும், சர்வ மதத் தலைவர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கருத்து மோதல்கள் வலுப்பெற்றன. அதைத் தணித்து இருவருக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நான் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன்.

அரச தலைவர் என்னைத் தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பல தடவைகள் கோரினார். அரச தலைவராக மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவும் செயற்படவே 2018ஆம் ஆண்டு மக்களின் ஆணை கிடைத்தது. அதை மீறிச் செல்ல நான் தயாராக இருக்கவில்லை.

கடந்த இரு மாதத்தில் யார் வெற்றி பெற்றனர் என்பது முக்கியம் அல்ல. நாட்டுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. உலகத்துக்கே முன்னுதாரணமாக இருந்த எமது நாட்டின் நாடாளுமன்ற மதிப்புக்கு பெரும் கறை படிந்துள்ளது. சுயாதீனமாகச் செயற்பட்ட உயர் நீதிமன்றம் நாட்டுக்குப் பெரும் மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படுகின்றது. இனி பன்னாட்டு நீதித்துறையின் தலையீடு தேவையற்ற - என்றார். இதேவேளை, இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படுகின்றது. பன்னாட்டு நீதித்துறையின் தலையீடு தேவையில்லை என்று மக்கள் விடுதலை முன்னணி, நாடாளுமன்றத்தில் இடைக்கால கணக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டபோது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற,5,10)

## வாள்வெட்டுக்...

இளைஞர்கள் ஒன்று சேர்ந்து விரட்டியடித்தனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது: கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் கோயில் பகுதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் இரண்டு உந்துருளிகளில் 6 பேர் கொண்ட வாள்வெட்டுக் குழுவினர் முகத்தை மறைத்து துணியால் கட்டிக் கொண்டு அந்தப் பகுதியில் நடமாடியுள்ளனர். வீட்டின் முன்கதிரையில் இருந்த ஒருவர் மீது வாள்வெட்டு நடத்த முற்பட்ட போது அவர் தப்பித்து வீட்டுக்குள் சென்றுள்ளார். அவர் இருந்த கதிரையை வாளால் வெட்டி தகர்த்துள்ளனர்.

இதனை அவதானித்த அயல் வீட்டார் கத்தி சத்தம் எழுப்பினர். பிடாரி கோயிலில் வலைப் பந்து விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் ஒன்று கூடி வாள்வெட்டு குழுவினரைப் பிடிக்க முற்பட்ட போது அவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டும் அவர்கள் உரிய நேரத்துக்கு வருகை தரவில்லை, என்றனர். (5,7)

## யாழ்ப்பாண...

செலவிட்டுள்ளோம். இந்த நிலையில், வெள்ளப் பெருக்கின் பின்னர் யாழ்ப்பாண மக்களுக்குப் பதில் சொல்வது எங்களுக்குக் கஸ்டமாக உள்ளது. புரிந்துணர்வு அடிப்படையில்தான், யாழ்ப்பாணம் இரணைமடு குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் பாதிப்புக்களை பார்வையிடுவதற்காக வருகை தந்த அமைச்சர், இரணைமடுக் குளத்தையும் பார்வையிட்டார். இதன் பின்னர் அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்தினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விவசாயிகளுக்கும், குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் மக்களுக்கும் இடையிலுள்ள பிரச்சினை வடக்கு மாகாணத்தில்தான் உச்சத்தில் இருக்கிறது. இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீரைக் கொண்டுசெல்வது இப்போது பிரதேசவாத பிரச்சினையாக பார்க்கப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு ஏற்கனவே நாங்கள் மாற்றுத் திட்டத்தை நடைமுறைத்த ஆரம்பித்துள்ளோம்.

நீர்க்கட்டணங்களை அதிகரிக்க முடியாமையால், வறட்சிக் காலங்களில் மாத்திரம் குடிதண்ணீரை வழங்குவதற்கு இந்தத் திட்டத்தை பயன்படுத்த தீர்மானித்துள்ளோம்.

அரசியல்வாதிகள் சிலர் இரணைமடு விவகாரத்தை கையில் எடுத்துள்ள நிலையில், விவசாயிகள் மத்தியில் இந்தத் திட்டம் பற்றிய தப்பபிப்பிராயங்களை களையவேண்டும். தண்ணீரை பகிர்ந்து கொள்வதால் விவசாயத்துக்கு பெரிய பிரச்சினைகள் ஏற்படாது என்பதை அவர்கள் உணரவேண்டும். பெரிய செலவில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தை இடைநடுவில் கைவிட முடியாது.

இந்த இழுபறியால் நிதி வழங்கும் நிறுவனங்கள் தங்களது முதலீடுகளை முடக்கிவிடும் அபாயம் உள்ளது. இருக்கின்ற குறுகிய காலத்துக்குள்ளாவது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு யாழ்ப்பாண மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்றார். (5,61)

## வடக்கில்...

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். 2004ஆம் ஆண்டு மகிந்த தலைமையிலான அரசு ஆட்சிப்பீடமேறியதும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மினிகோப் சிற்றிகளாக மாற்றியமைத்தது. காலப் போக்கில் அவை கைவிடப்பட்டன. இந்த நிலையிலேயே மீளவும், மினிகோப் சிற்றிகள் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறச் சங்கங்களின் கிளை நிலையங்கள் யாவும் மக்களை கவரும் வகையில் தரம் உயர்த்தப்பட்டு கோப் சிற்றிகளாக மாற்றியமைக்கப்படவுள்ளன. இந்த கோப் சிற்றிகளில் பொருள்களை பொதியாக்கி நுகர்வோருக்கு சிரமமின்றி விநியோகிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

இதே சமயம் இந்த மினிகோப் சிற்றி தொடர்பாக யாழ்.பலநோக்குக்கூட்டுறவுச் சங்க தலைவர் என்.எஸ் சத்தியதாசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது 'சங்கத்தின் 1ஆம், 7ஆம், 25ஆம், 27ஆம், 32ஆம் இலக்கங்களைக் கொண்ட 5 கிளைநிலையங்களையும் மினி கோப்சிற்றிகளாக மாற்றியமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. இந்த 5 மினிகோப் சிற்றிகளும் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் திறந்து வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்று யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.சத்தியதாசன் தெரிவித்தார். (5,17)

## ஜி.சி.ஈ....

விவரங்கள் வருமாறு.

யாழ்ப்பாண மாவட்டத்தில், கலைப் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி சிங்கராசா நிலக்ஷனா மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். வணிகப்பிரிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி மாணவி சாம்பவி ஜெயதிலக மாவட்டரீதியில் முதலிடம்பெற்றுள்ளார். உயிரியல் முறைமை தொழில் நுட்பத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி இரவிச்சந்திரன் கலக்சிகா மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். பௌதீக விஞ்ஞானத்தில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் சண்முகதாசன் சஞ்ஜித் மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில், விஞ்ஞானப் பிரிவில் பளை மத்திய கல்லூரி மாணவி க. அபிஷா மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். கணிதப் பிரிவில் புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி ஜெ.மகிழினி முதலிடம் பெற்றுள்ளார். முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி மாணவி க.ஜனனி வணிகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில், கணிதப் பிரிவில் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை மாணவன் எஸ்.அன்ரூ மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். விஞ்ஞானப் பிரிவில் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவன் எச். சர்வின் முதலிடம் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில், கணிதப் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவி பூஜிதா முதலிடம் பெற்றுள்ளார். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் ஏ.உதிஷ்டன் விஞ்ஞான்ப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

நேற்றிரவு வரையில் கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளே பிரசுரமாகியுள்ளன. பெரும்பாலான பாடசாலை அதிபர்கள், இன்று காலையே பெறுபேறுகள் தொடர்பான முழுமையான விவரங்களை வழங்க முடியும் என்று தெரிவித்தனர். இதேவேளை, பரீட்சைக்குத் தோற்றிய 3 லட்சத்து 21 ஆயிரத்து 469 பேரில் ஒரு லட்சத்து 67 ஆயிரத்து 907 மாண்வர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகமை பெற்றுள்ள்னர்;. 119 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 15 ஆயிரத்து 343 மாணவர்கள் முழுமையான சித்தி பெறவில்லை. (5,7,105)

## இரணைமடு...

குழு நேற்று நியமிக்கபட்டிருந்தது. இந்த நிலையில் ஆளுநரின் செயலர் இளங்கோவன் நேற்று வழங்கிய அறிவித்தல்களுக்கு அமைய அவர் நீக்கப்பட்டுள்ளார். கடந்த 21ஆம் திகதி பெய்த கடும் மழையின் போது இரணைமடுக் குளத்தின் நீர் கொள்ளளவு சடுதியாக உயர்ந்த போதும் குளத்தின் வான்கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாமையால் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டது என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து விசாரணைக்குழுவை ஆளுநர் நியமித்திருந்தார்.

விசாரணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர், இரணைமடுக் குளத்தின் முகாமைத்துவம் தொடர்பில் முகநூலில் விமர்சனம் முன்வைத்திருந்தார் என்று சில தரப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தன. இவ்வாறானதொரு நிலையிலேயே அவர் நீக்கப்பட்டுள்ளார். (5,214)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பௌத்த, ஒற்றையாட்சி பெரும்பான்மைவாதம்

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கும் அரசமைப்பின் 9ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாசகங்களில் ஒருஎழுத்துக்கூட மாற்றப்படாதஎன்று குறிப்பிட்டுள்ளார்தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்க. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மக்களைப் பார்வையிடுவதற்குப் புறப்பட முன்னதாக கண்டி தலதா மாளிகையில் மகாநாயக்கரைச் சந்தித்துப் பேசிய போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

தலதா மாளிகை இலங்கை பௌத்தர்களின் அதியுயர் புனித பீடம். அளவுக்கதிகமாகவே மத மற்றும் இனவாதத்தால் கட்டுண்டு கிடக்கும் பௌத்த சிங்கள மக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிசக்தி வாய்ந்த இடம். அதனால்தான் இலங்கையின் அரச தலைவராக இருந்தாலும் சரி, தலைமை அமைச்சராக இருந்தாலும் சரி பௌத்த துறவிகளான பிக்குகளின் முன்பாக உடல்தாழ்த்தி, சிரம்தாழ்த்தி வணங்குகிறார்கள். அதாவது ஒரு நாட்டின் முதல் குடிமகனே தாழ்ந்துபோகும் இடம் இந்த பௌத்த மகாசங்கங்கள் என்பது உலகறிந்த உண்மை.

அப்படியான இடத்திலேயே மீண்டும் ஒரு முறை ரணில் விக்கிரமசிங்க பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதில் மாற்றம் இல்லை என்றும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்றும் தெரிவித்திருக்கிறார். அதன் பொருள் என்னவென்றால், பௌத்த, சிங்கள பெரும்பான்மைவாதத்தை மீறமாட்டேன் என்று அவர் சிங்கள மக்களுக்கு கடவுள் சாட்சியாக உறுதி கூறுகின்றார் என்பதுதான்.

அதனாலேயே பௌத்தத்துக்கான முன்னுரிமையையும் ஒற்றையாட்சியையும் விட்டுக்கொடுப்பதற்கு அவரும் சரி ஏனைய தலைவர்களும் சரி தயாராக இல்லை. இதுதான் பெரும்பான்மைவாத அரசியல்.

ஆனால், இது ஒரு பெரும்பான்மைவாத அரசியல் என்பதை ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தயாராக இல்லை என்பதை அவரது நேற்றைய செய்தியாளர் சந்திப்பு எடுத்துக் காட்டுகின்றது.

சிங்களத்தில் குறிப்பிடப்படும் "ஏக்கிய ராஜ்ஜிய" என்ற பதத்தையே தமிழில் ஒற்றையாட்சி என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள், ஆனால் புதிய அரசமைப்பில் அதன் பொருள் ஒருமித்த நாடு, அதனைத் தெளிவுபடுத்துவதற்காக அதற்கான ஆங்கிலப் பதத்தையும் அரசமைப்பு வரைபில் சேர்த்துக்கொள்ளச் சொல்லிக் கேட்போம் என்று கூறியிருக்கிறார் அவர்.

ஆனால், இங்கே நிராகரிக்கப்பட வேண்டியது சொற்கள் அல்ல. அந்தச் சொற்களைச் சிங்களத் தலைவர்கள் கைவிட மறுப்பதன் பின்னணி என்ன அல்லது மீண்டும் மீண்டும் அவர்கள் சிங்கள மக்களுக்கு வழங்கும் உறுதிமொழிகளில் அந்தச் சொற்கள் புதிய அரசமைப்பில் இருந்து நீக்கப்படமாட்டா என்று கூறுவதற்கான தேவை என்ன என்பதுதான்.

பெரும்பான்மைவாதத்தைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான் தலைவர்கள் அந்தச் சொற்களைக் கைவிட மறுக்கிறார்கள், இறுக்கிப் பிடித்திருக்கிறார்கள் என்கிற உண்மையை ஏற்க மறுத்துச் சமாளிப்பதுதான் இங்கு பிரச்சினையே.

எதிர்க் கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்சவுக்குத் தூக்கிக் கொடுத்த போது இதே பெரும்பான்மைவாதத்தை ஏற்கமுடியாது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தே, பௌத்தத்துக்கான முக்கியத்துவம் மற்றும் ஒற்றையாட்சி என்பவற்றைக் கைவிட மறுப்பதற்கான காரணம் பெரும்பான்மைவாதமல்ல என்கிற விதத்தில் விதப்புரைகள் வழங்கப்படுவது துன்பியல்.

இன்னும் ஒன்றையும் கவனிக்க வேண்டும். தனிநாட்டுக் கோரிக்கையை அடியோடு கைவிட்டுத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போதைய அமைதி முயற்சிகளுக்குள் காலடி எடுத்துவைத்தது. விட்டுக்கொடுப்புகள் இன்றி அமைதியை வெற்றி கொள்ள முடியாது என்பது சரிதான். ஆனால், அந்த விட்டுக்கொடுப்பு ஒருதரப்பில் இருந்து மட்டுமேதான் இடம்பெறவேண்டுமா, என்பதுதான் கேள்வி. தனிநாட்டு விட்டுக்கொடுப்புக்குப் பதிலாக இலங்கையின் ஒற்றையாட்சி நிலையை விட்டு கூட்டாட்சிக்கு வருவதற்குக்கூட சிங்களத் தலைவர்கள் தயாரில்லை அல்லது பெரும்பான்மைவாதத்தைத் திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வுக்கும் தயாரில்லை என்கிறபோது அதனை நியாயப்படுத்தும் விதத்தில் நடந்துகொள்வது தமிழர்களுக்கு ஏற்புடையதல்ல.



# சொல்லைவிடவும் செயலே சிறந்தது!

## சிங்கள மக்களின் மனமாற்றம் பயன்கொள்ளப்படுமா?

சேரலாதன்



இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை விரைவில் கண்டு விடலாம் எனவும், அரசியல் குழப்பத்தின் போது கூட்டமைப்புச் சிறப்பாகச் செயற்பட்டதால் தமிழர்கள் சிங்கள மக்களின் மனங்களை வென்றுள்ளார்கள் என்றும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார். அதேவேளை தென்னிலங்கையில் கூட்டமைப்பின் மதிப்பு அதிகரித்துவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் கருத்துரைத்துள்ளார்.

**இனவாதம் வலுவிழந்து போகாமையே தீர்வின்மைக்கு அடிப்படைக் காரணம்!**

இவர்கள் இருவரும் கூறியது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அரசியல் தீர்வொன்றின் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்டடையும் செயற்பாடு என்பது, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு இலகுவாகிவிடும். ஏனெனில் நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இனப்பிரச்சினை என்பது தீர்வின்றி இடையறாது தொடர்ந்து வருவதைக் காண முடிகின்றது. இனவாதம் வலுவிழந்து போகா வண்ணம் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிங்கள மக்களை தவறாக வழிநடத்தி வருவதால் இனப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வொன்றைக் காண முடியவில்லை. அதுமட்டுமன்றி காலத்துக்குக் காலம் தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளே இடம்பெற்றுவருகின்றன. மொழிவாரியாகத் தமிழர்களும் சிங்களமக்களும் பிரிக்கப்பட்டிருந்தாலும் பல விடயங்களில் ஒன்றுபட்டிருப்பதைக் காண முடிகின்றது.

**கூட்டமைப்பு சூழ்நிலைகளை புரிந்துணர்வோடு கையாள முயற்சிக்கின்றது!**

அண்மையில் அரச தலைவர் தன்னார்வத்தோடு ஏற்படுத்திய அரசியல் குழப்பங்கள் மேலும் நீடிக்காது முடிவுறுத்தப்பட்டமைக்கு கூட்டமைப்பின் பங்களிப்பே முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. சூழ்ச்சிகரமான குழப்பங்கள் நடந்தேறிய போது சூழ்நிலைகளை புரிந்துணர்வோடு கையாளாது கூட்டமைப்பு ஒதுங்கி நிற்பதற்கு முடிவு செய்திருந்தால் நாட்டின் நிலமை மோசமான கட்டத்தை எட்டியிருக்கும்.

இந்த உண்மையைச் சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டதன் விளைவாகவே கூட்டமைப்பின் மீதான மதிப்பையும், கரிசனையுடன் கூடிய பார்வைப்புலத்தையும் வெளிப்படுத்த எத்தனித்துள்ளனர் எனலாம். இந்த மனமாற்றத்தை ஆட்சியாளர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மகிந்த தரப்பு வழக்கம் போல அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவார்கள் என்பது தெரிந்த விடயமாயினும், அரசு துணிவுடன் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதன் மூலமாகத் தமக்குக் கௌரவமான அரசியல் தீர்வொன்று கிடைக்குமெனத் தமிழ்மக்கள் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர். கூட்டமைப்பின் தலைவரும் இதையே அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார். இறுக்கமான பிடிமானத்தோடு எதற்கும் வளைந்து கொடுக்காத உறுப்புரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள, நடைமுறையில் உள்ள அரசமைப்பின் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவே முடியாது. இதன் காரணம் கொண்டே புதிய அரசமைப்பின் உருவாக்கம் முக்கியத்துவம் பெறுகின்றது.



**தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வையும் அரசியல் தீர்வையும் வேண்டி நிற்கின்றனர்!**

தனிநாடு கேட்டு ஆயுதமேந்திப் போராடிய தமிழர்கள் இன்று அதிகாரப் பகிர்வையும் அரசியல் தீர்வையும் கேட்டு நிற்கின்றனர். இவற்றை வழங்குவதால் சிங்கள மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டார்கள். மேலும் மீண்டுமொரு ஆயுதப் போரட்டம் இடம்பெறுவதையும் அவர்கள் விரும்பவே மாட்டார்கள். ஏனென்றால் போரினால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. போரைக் காரணம் காட்டி பணத்தைச் சம்பாதித்த அரசியல்வாதிகள் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர். இவர்கள் தமது சுய நன்மைக்காக எதையும் செய்யக்கூடியவர்கள். இவர்களுக்கு அப்பாவி மக்கள்மீது அக்கறை ஒருபோதுமே ஏற்பட்டதில்லை. இத்தகைய அரசியல்வாதிகளால்தான் நாட்டின் அமைதிக்கும் இனங்களுக்கிடையேயான ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படுகின்றது. அரசமைப்புக்கு எதிராகச் செயற்படுவதென்பது தண்டணைக்குரிய ஒரு செயலாகும். ஆனால் மகிந்தவை தலைமை அமைச்சர் பதவியில் அமர்த்தியதன்மூலமாக அரச தலைவரே அரசமைப்புக்கு எதிராக நடந்துகொண்டுள்ளார். உயர்நீதிமன்றம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்வொன்றை வழங்கியிருக்காவிட்டால் இந்த நாடு மிக மோசமான அடைவுகளைக் கண்டுகொண்டிருக்கும்.

**தீர்வு காணும் விடயத்தில் ரணில் சாணக்கியத்தோடு செயலாற்ற வேண்டும்!**

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை அனைவரும் அறிவார்கள். இராஜதந்திரமாகச் செயற்பட்டு புலிகளைப் பிளவுபடுத்தியதன் மூலமாக அவர் இதைச் சந்தித்தார். ஆனால் இதுவே அவர் அரச தலைவர் பதவியில் அமர்வதற்கான கனவைக் கலைத்துவிட்டது. மகிந்த அந்தப் பதவியில் அமர்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம். இருந்தபோதும் கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராக மைத்திரியை நிறுத்தியதன் மூலமாகத் தமது தோல்விக்குப் பழிவாங்கியும் விட்டார். அண்மையில் இடம்பெற்ற ஒக்ரோபர் சூழ்ச்சியைக்கூட எதிர்கொண்டு கூட்டமைப்பின் ஆதரவோடு மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி விடவும் அவரால் முடிந்துள்ளது. ஆக, அரசியல் சாணக்கியத்தில் கை தேர்ந்தவராக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள ரணில், இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதில் உத்வேகத்துடன் செயலாற்ற முன்வர வேண்டும்.

**சந்தர்ப்பங்கள் செயல்வடிவம் பெற வேண்டும்!**

தமிழ்மக்களுக்குத் தமது காலத்திலேயே ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் கூட்டமைப்பின் தலைவர் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். ரணில் விக்கிரமசிங்கவை அவர் வகித்த தலைமை அமைச்சர் பதவியில் மீண்டும் அமர்த்துவதற்கான முயற்சியில் சம்பந்தனின் அரசியல் மதிநுட்பம் பெரிதும் உதவி புரிந்துள்ளது. இதுவே சிங்கள மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படுத்துவதற்குக் காரணமாகவும் அமைந்துவிட்டது.

எனவே சொல்வதோடு மட்டுமே நின்றுவிடாது அதை செயலில் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் ரணில் தலைமையிலான அரசுக்கு வாய்த்துள்ளது. அதைச் சரியான முறையில் பயன்கொள்வதற்கு அதிகபட்ச முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். இந்த வாய்ப்பு நன்முறையில் பயனுறுதியாக்கப்பட்டு அரசியல் தீர்வு குறித்த பொருத்தமான பின்னூட்டங்கள் கண்டுகொள்ளப்படின், இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவரது பெயர் தனித்துவமான இடத்தைப் பெற்றிருக்கும்.

# பழிவாங்கும் மனோபாவத்தை மகிந்த தரப்பு கைவிட வேண்டும்!

இந்துமதி

கூட்டமைப்பைப் பழிவாங்கும் வகையில் மகிந்த தரப்பினர் செயற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகியுள்ளதையே அண்மைய அரசியல் கள நிலவரங்கள் சுட்டிநிற்கின்றன. ஏனெனில் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்த போதும், அந்தப் பதவியில் அவரால் தொடர்ந்தும் நீடித்திருக்க முடியவில்லை என்பதும், அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் கூட்டமைப்பினரின் பங்கு அளப்பரியது என்பதும் மகிந்த கொண்டுள்ள கோபத்துக்குக் காரணமாக அமைந்துவிட்டன. தவிர இந்த விடயங்கள் அவரைச் சார்ந்துள்ளோர் மத்தியிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக, அரச தலைவரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பங்கள் காரணமாக நாட்டில் பெரும் குழப்ப நிலையொன்று காணப்பட்டதும், இறுதியில் கூட்டமைப்பு வழங்கிய ஆதரவு காரணமாக ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சர் பதவியில் தொடர முடிந்ததும் யாவரும் அறிந்த விடயம். இதுவே மகிந்த தரப்பினர் கொதித்து எழுவதற்குரிய மூல காரணமாக அமைந்துவிட்டது எனலாம்.

**பதவி மோகத்தில் மூழ்கியுள்ள மகிந்த தரப்பு!**


தற்போது தலைமை அமைச்சர் பதவியை விடவும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மேலானது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறும் அளவுக்கு நிலமை மாற்றங்கண்டுள்ளது. தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பதை இனவாதிகளால் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்தப் பதவியை சம்பந்தனிடமிருந்து எந்த வகையிலாவது பறித்தெடுக்க வேண்டும் என்பதில் மகிந்த தரப்பினர் தங்களுடைய கழுகுப் பார்வையைச் செலுத்தி வந்தனர். தற்போது அதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொண்டு சம்பந்தனால் எதைச் சாதிக்க முடிந்தது என்பது ஒருபுறமிருக்க, அந்தப் பதவியை அவரிடமிருந்து பறித்து விடுவதால் மகிந்த தரப்புக்கு என்ன நன்மை கிடைத்துவிடப் போகின்றது என்பதையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைவிடவும் நாட்டின் மிக உயர்ந்த பதவியை வகித்த ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**அரசியல் குழப்பங்களை நீடிக்கவே மகிந்த தரப்பு விரும்புகிறது**

மகிந்த ராஜபக்ச ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிச் சென்று புதிய கட்சியொன்றை அமைத்து அந்தக் கட்சியின் சின்னத்திலேயே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். இந்தநிலையிலே இன்னமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே அவர் நீடிப்பதாகவும், புதிய கட்சியில் அவர் இணைந்துகொள்ளவில்லையெனவும் அவர் சார்பில் கூறப்படுவதை ஏற்றுக்கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது என்ற கேள்வி இயல்பாகவே எழுந்து மறைகிறது.

இவ்விதம் நாட்டைக் குழப்புகின்ற தவறான செயற்பாடுகளில் மகிந்த தரப்பினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவது அரசியல் நாகரீகத்துக்கு புறம்பான நடத்தையாகவே பார்க்கப்படுகின்றது. சிலவேளை இந்த விடயத்திலும் மகிந்த தோல்வி காண்பாராகில், அவரது அரசியல் எதிர்காலம் என்பது கேள்விக்குரியதாகவே மாறிவிடும். இதைவிட கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளதாகவும், அவர்களது நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிப்பதற்கான செயற்பாடுகள் அடுத்த ஆண்டில் இடம்பெறுமெனவும் மகிந்த தரப்பினர் செய்தியொன்றைக் கசிய விட்டுள்ளனர். ஏற்கனவே இரட்டைக் குடியுரிமையைக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது பதவியை இழந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும்.



**இரட்டைக் குடியுரிமை விவகாரம் குறித்த தெளிவு வேண்டும்!**

இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைமை உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவது அவசியமானதொன்றாகும். மகிந்த தரப்பு இதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும், இது தொடர்பில் நீதிமன்றத்தின் உதவியை நாடப் போவதாகவும் கூறியுள்ளதால், இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தாமதமின்றிப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடும் கூட்டமைப்பின் தலைமைக்கு உண்டு.

**தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத தலைமை**

கடந்த அரச தலைவர் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளே மகிந்த தோல்வி அடைவதற்குக் காரணமாக இருந்துள்ளதை மறந்து விடலாகாது. இறுதிப் போரின் போது தாம் அனுபவித்த அவலங்களை தமிழ் மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை. அந்தவேளையில் தெற்கிலிருந்து ஒருவர்கூடப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவில்லை. இதற்கு மாறாக போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் பரந்த அளவில் இடம்பெற்றன. மகிந்த ஒருபோர் வெற்றி வீரராக மக்கள் மத்தியில் வலம்வந்து கொண்டிருந்தார். வடக்கில் அழுகைக் குரல்கள் வானை முட்டும் அளவுக்கு எழுந்த நிலையில், தெற்கில் மகிழச்சியை வெளிப்படுத்துகின்ற வகையில் குரல்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன. இந்த நாட்டில் இனங்களுக்கிடையே நிலவிவருகின்ற நல்லுறவுக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இதைக்கூறவிட முடியும்.

**பழிவாங்கும் மனோபாவம் ஆபத்தானது என்பதை மகிந்த புரிந்துகொள்ள வேண்டும்!**

ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு எதையாவது வழங்குவதற்கு முற்படும்போது, மகிந்த தரப்பினர் அதற்கு முட்டுக்கட்டை இடுவார்களென்பதை உறுதியாகக் கூறிவிட முடியும். ஆனால் தமிழர் தரப்பின் ஆதரவு கிடைக்காது விட்டால் தேர்தல்களில், குறிப்பாக அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்பதை இவர்கள் மறந்து போயுள்ளமை குறித்து நோக்கப்பட வேண்டிய விடயம்.

இந்தநிலையில் மகிந்த தரப்பினர் கூட்டமைப்பை பழிவாங்க நினைப்பதும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இனங்களுக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்திவிடும். இதனால் தமிழர்களின் ஆதரவை அந்த அணியினர் நிரந்தரமாகவே இழந்து போகும் நிலை உருவாகும்.

கடந்த அரச தலைவர் தேர்தலில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தொடர்பில் இவர்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிலவேளை கூட்டமைப்பு கேட்டவற்றை வழங்குவதற்கு மகிந்த சம்மதம் தெரிவித்திருந்தால் சம்பந்தனின் ஆதரவை அவர் பெற்றிருக்க முடியும். தலைமை அமைச்சர் பதவியிலும் நீடித்திருக்க முடியும். ஆனால் இனவாதிகளுடன் உறவை வைத்துக்கொண்டு தமிழர்களுக்கு எதையுமே வழங்குவதற்கு மகிந்த தயாராக இல்லாததால் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

ஆகவே, கூட்டமைப்பைப் பழிவாங்கும் எண்ணவோட்டத்தை மகிந்த தரப்பினர் உடனடியாகவே மாற்றிக் கொள்ள வேண்டும். இதுவே மகிந்தவின் அரசியல் எதிர்காலத்துக்கு அரணாக அமையும்.



## ஆசிரியருக்கான கடிதம்

# மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் வாழ்க்கை!

"அன்பு, நேர்மை, பொறுமை ஆகிய மூன்றும் இருந்தால் போதும். வேறு எதுவும் தேவையில்லை. அன்புதான் வாழ்க்கையின் ஒரே நியதி. எல்லாவிதமான சுயநலமும் மரணம் தான். மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்பதுதான் மரணம். அன்புடையவர்களைத் தவிர மற்றவர்கள் வாழ்பவர்கள் அல்லர். மற்றவர்களுக்காக உங்கள் மனம் உருக வேண்டும். ஏழை எளியவர்கள், பாமரர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக உங்கள் மனம் உருக வேண்டும். மற்றவர்களின் நன்மையின் பொருட்டு உங்கள் இதயமே நின்று, மூளை குழம்பி, உங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும் என்ற நிலை வரும் வரையில் மற்றவர்களுக்காக நீங்கள் மனம் உருகுங்கள். பிறகு இறைவனின் திருவடிகளில் உங்கள் ஆன்மாவைச் சமர்ப்பியுங்கள். அப்போது உங்களுக்கு ஆற்றல் வரும், உதவி வரும், குறையாத ஊக்கம் வரும்."

இது சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஓர் பகுதி. இதை இவ்விடம் உணர்ந்து படிக்க வேண்டிய தன் அவசியத்தைக் காலம் நமக்குத் தந்திருக்கிறது.

கடந்த வாரம் வடமகாணத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக வன்னிப் பெருநிலப்பரப்பின் பல பகுதிகள், குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ள இடரால் அதிகளவான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. மக்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இரு மாவட்டங்களிலும் ஏற்பட்ட வெள்ள இடர் மற்றும் கன மழை காரணமாக அண்ணளவாக 3 ஆயிரம் மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையிலே பொது நிறுவனங்கள் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிபுரிவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். குறிப்பாக இந்து ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து உதவிப்பொருள்களைச் சேகரித்து, உரிய விதத்தில் அவற்றை ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றை வெளிப்படைத் தன்மையுடன் செய்ய வேண்டும். உதவியைப் பொருளாக அன்றி பண மூலமாக வழங்க விரும்புபவர்களுக்கும் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்புச் செய்வதற்கு இடம் தராமல், விசேட வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து, அது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். இவ்வாறான இடர்நிலமைகளின் போது தேவையற்ற விழாக்களைக் குறைத்து அல்லது அவற்றை நிறுத்தி, மக்களுக்கு உதவுவது தொடர்பில் பூரண கவனம் செலுத்த அனைவரும் முன்வர வேண்டும். சிந்திப்போம்! செயற்படுவோம்!

*இரா.ஜெயக்குமார், உரும்பிராய்.*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# 30 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 22.08.1944

உதிர்வு 02.12.2018

கடந்த 02.12.2018 சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்
திருமதி

## திருநாவுக்கரசு பரமேஸ்வரி (பரா)

அவர்களின் 30 ஆவது நாள் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (30.12.2018) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அவ்வமயம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள் கின்றோம்.

உம் கருவில் உருவாகா பிள்ளை என்னை
உம் அன்பில் நனைய வைத்தீர் பெருமையில்லா உம் உருவம்
சிந்தையில் நிலைத்ததம்மா சிகரம் சிற்பியாய் வாழ்ந்த கதை
சீக்கிரம் முடிந்ததேனோ? பரமனும் உம் அன்பில்
நெகிழ்ந்து போனான் அம்மா.

வாழ்வோடு கண்ட பாசம் உம் மொழியோடு தந்த நேசம்
நீ மொழிந்த வார்த்தையெல்லாம் சிந்தையொட்டிப் போகுதம்மா
பொன் நகையை விட - உம் புன்னகை சிறந்ததம்மா
இணையில்லா உம் அன்பில் இன்பமாய் கழித்த பொழுதுகளை

எம் இமை நொடியில் இழந்தோம் - உம் அரவணைப்பை இழந்து
கண்ணீர் துளிகள் நனைய - உம் ஆத்மா சாந்தியடைய
இறைபதம் வேண்டி நிற்கின்றோம்.


45, கொண்டலடி வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
021 222 9064

(cs.22159) (13.17)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் சின்னத்துரை



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் கைதடி, கனடா மற்றும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சின்னத்துரை நேற்று (29.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கதிராசிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான இளையப்பு - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், நாகமுத்து ஆகியோரின் சகோதர னும் ஜெகதீஸ்வரன் (ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), ஆனந்த நடேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் விமலா (கனடா), விசியகலா (கனடா), சசிகலா (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் புஸ்பராணி (நீர்வேலி), இராசமணி (கனடா), சபாபதிப்பிள்ளை (கனடா), தியாகலிங்கம் (கனடா), சிறிஸ்கந்தராஜா (கனடா), ஜீவா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நதியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய்) - சசிதரன், ஷர்மிளா (சட்டத்தரணி), யாதவன் (கனடா), மெலானி (கனடா), தனுஜா - கிரிதரன் (கனடா), மயூரன் (கனடா), திஜிபா - ஜெயதிலகன் (கனடா), சானு (கனடா), சாரங்கா (கனடா) அபினா (கனடா), ஜொனீசா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் தாரகி, தரணீதன், விற்றன், நிற்வன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.00 மணியளவில் மாசுவன் சந்தி, நீர்வேலி மேற்கிலுள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
சி.ஜெகதீஸ்வரன் (மகன்)

(CS 22183(15/17)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 3பேர் உள்ள குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. (CS 22145) (14.17)

071 117 3471

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம், உடுவில் கிழக்கு பிரதேச செயலகம் அருகில் 4¼ பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு. (CS 22138) (14.17)

076 305 2741

## விற்பனைக்குண்டு

German Shepard ஆண் நாய் (11 மாதம்) விற்பனைக்குண்டு. அத்துடன் Computer (C.P.O, Monitor, Mouse),JAOAஒரு சோடி, Cock talk ஒரு சோடி, Black check finches white விற்பனைக்குண்டு.

078 301 4280/021 205 1514 சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.

## Room வாடகைக்கு உண்டு

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் Attched Bathroom உடன் Room, வாடகைக்கு உண்டு.(பெண்கள் மட்டும்) (CS 22166) (14.17)

077 216 2622

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்குண்டு

075 693 8550

## தேவை

1. கணக்காளர்
2. மில் வேலை தெரிந்தவர்கள்
3. வெல்டிங்வேலை தெரிந்தவர்கள்
4. மில் உபகரணங்கள் தேவை.

(CS 22174) (14.17)

077 772 2215

## அறைகள்/ANNEX வாடகைக்கு உண்டு

யாழ் பல்கலைக்கழகம் அருகில் பலாலிறோட்டில் பல்கலைக்கழக மாணவிகள்/ உத்தியோகம் பார்க்கும் பெண்கள்/ கல்லூரி மாணவிகள்/ சிறிய குடும்பத்துக்கு ANNEX/ அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. (CS 22137) (14.17)

077 930 0148/ 077 880 8480/ 021 222 7069

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

மானிப்பாயில் நல்ல இடத்தில் வீட்டுடன் கூடிய 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும். (ACO 360) (14.17)

077 841 7720

## தேவை

வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை.
ஒரு நாள் 1500 /= சம்பளம் (CS 22082)(14.17)

077 876 5188/077 041 8823
கரந்தன்

## வேலையாள்கள் தேவை

எமது வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு
வேலையாள்கள் தேவைப்படுவதால் உடன் தொடர்புகொள்ளவும்

077 776 3533
இந்த இலக்கத்திற்கு உடன் அழைக்கவும்

## வாடகைக்கு உண்டு

மாநகரசபைக்கு அண்மையில் தனி அறை வாடகைக்கு உண்டு.
ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
071 638 3502 (CS 20052)(14.17)

## காணி விற்பனைக்கு

A9 றோட்டில் நாவற்குளி அமரா வீதியிலுள்ள 12 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.
விரும்புபவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
077 746 3885 (CS 22139)(14.17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1989, சதய நட்சத்திரம். Diploma in Hotel Managment &Tourism பட்டம் பெற்றவர் தற்போது மாலைதீவில் வேலைபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
(மூன்று மொழியும் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது)

078 632 2108 / 071 846 4442

## வேலை வாய்ப்பு

கடந்த 10 வருடங்களாக இயங்கி வருகின்ற எமது நிறுவனத்தின் யாழ் கிளைக் காரியாலயத்தில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- முகாமைத்துவ உதவியாளர்(பெண்)
  தகைமை : G.C.E A/L (முன் அனுபவம் விரும்பத்தக்கது)
- சந்தைப்படுத்தல் பிரதிநிதி (ஆண் /பெண்)
  தகைமை : G.C.E O/L (முன் அனுபவம் விரும்பத்தக்கது)

தகைமையுடையவர்கள் எதிர்வரும் 05.01.2019 முன்பாக நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். (CS 22115)(14.17)

இல.835, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 021 221 6864/077 297 5488

## பதவி வெற்றிடங்கள்

யாழ்.நகரில் அமைந்துள்ள லங்கா டைல் ( Lanka Tile) காட்சியறைக்குத் தகுதியான இருபாலாரிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- காசாளர்
- விற்பனை மேம்படுத்துநர்
- களஞ்சியப் பொறுப்பாளர்

(CS/21958)(11,17)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :- விளம்பர இல :- JF/1003
மே/பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பயிற்சியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான

(TRAINEE ENGLISH TEACHER) வேலைவாய்ப்பு

- பயிற்சியின் பின் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தும் முகமாக ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.
- வயது 18 - 28க்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*தூர பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

நேர்முகப்பரீட்சைக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS ஊடாக அனுப்பவும்.

0785 880 680

INTERNATIONAL TEACHER TRAINING ACADEMY

## கண்ணீர் அஞ்சலி



மன்ற முன்னாள் பொருளாளரும்
தற்போதைய நிர்வாகசபை
உறுப்பினருமான
திருமதி ராதிகா சுதாகரன்
அவர்களின் அன்புக் கணவர்

### ஈஸ்வரன் சுதாகரன்

அவர்கள் 26.12.2018 இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், உறுப்பினர்கள்
தென்மராட்சி கலை மன்றம் சாவகச்சேரி.

(AC 317)(14.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாடளாவிய ரீதியில் கலாசார
மத்திய நிலையங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட
"பிரதீபா தரங்க" நாட்டிய, நாடக சங்கீத
போட்டிகளில் அதிகூடியதான
15 விருதுகளை வென்ற சண்டிலிப்பாய் கலாசார
மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரியான
திருமதி பிருந்தா கோகுலன்
அவர்களுக்கு 04.11.2018 அன்று
மாத்தறை மாவட்டம் பலஸ்முல்ல தேசிய
பாடசாலையில்
நடைபெற்ற தேசிய கலை இலக்கிய விழாவில்
உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள்
அமைச்சினால் "அதிசூரா" விருது வழங்கி
கௌரவிக்கப்பட்டமையைப்
பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும்
பல சாதனைகள் புரிந்து வளமுடன்
வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

அன்புடன் மாமா, மாமி,
திரு.திருமதி தர்மபாலா

(cs21742)(33.17)

2018 உலகப் பதிவுகள்









# அர்த்தமிழக்கும் அறவழி போராட்டங்கள்

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது உட்படச் சில கோரிக்கைகளை முன்வைத்து மலையக இளைஞர்களால் கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் சில மதகுருமாரினதும், பொது அமைப்புக்களினதும் கோரிக்கைகளை அடுத்து நான்காவது நாளுடன் கைவிடப்பட்டது.

இளைஞர்கள் தமது போராட்டத்தை முற்றாகக் கைவிடவில்லை எனவும், எதிர்வரும் 15ஆம் திகதிக்கிடையில் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டம் நாட்டின் பல பகுதிகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுப் பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர்.

(அடுத்த பக்கம்)

**உணவு தவிர்ப்பின் மகோன்னதம்**

உணவு தவிர்ப்புப் போராட்டம் என்பது உயிரைப் பணயமாக முன்வைத்து நடத்தப்படும் அர்ப்பணிப்பு மிக்க போராட்டமாகும். எதிர்த் தரப்பினருக்கு எவ்வித ஊறுமின்றித் தம்மைத்தாமே வருத்தி உயிரைக் கொடுத்து சம்பந்தப்பட்டவர்களின் மனதைக் கனிய வைத்துக் கோரிக்கைகளை அடைய முயற்சிக்கும் ஒரு போராட்டமாகும். ஏனைய ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள், பேச்சுக்கள் போன்ற ஜனநாயகப் போராட்ட வழிமுறைகள் பயனற்றுப் போகும் நிலையிலேயே இப்படியான ஒரு கடினமான போராட்டத்தில் இறங்க வேண்டிய கட்டாயம் எழுகிறது.



**இளைஞர்களின் போராட்டத்துக்குத் தடைகள்**

மலையக மக்கள்-முன்னெடுத்த பேச்சுகளின் முடிவில் தொழிற்சங்கள், அரச தரப்பு எனச் சகல தரப்பினர் மீதும் நம்பிக்கையிழந்து விட்ட நிலையில், இளைஞர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆரம்பித்தனர். ஆனால் அவர்களின் போராட்டத்துக்கு வழங்கிய முதல் பதிலாகப் போரா்ட்டம் நடத்திய இளைஞர்கள் அமைத்திருந்த கூடாரத்தை ரயில் திணைக்களம் அகற்றியது. எனினும் இளைஞர்கள் போராட்டத்தைக் கைவிடாமல் வெயிலிலும், பனியிலும், மழையிலும் தொடர்ந்தனர். அதே வேளை மலையகத் தலைமைகளும் இளைஞர்களின் போராட்டம் தொடர்பாக எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக அவர்கள் ஜனநாயகத்தையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசையும் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டினர். மலையக மக்களின் பெரிய தொழிற்சங்கமான இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலர் ஆறுமுகம் தொண்டமான் தனது உறவினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றுவிட்டார். இப்படியாக ஆதரவளிக்க வேண்டியவர்கள் அலட்சியப் போக்கைக் காட்டிக் கொண்டபோதிலும் மலையக மக்கள் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தித் தமது பலமான ஆதரவை வெளிப்படுத்தினர்.

**தொழிலாளர்களின் எச்சரிக்கை**

போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் சில தோட்டங்களின் தொழிலாளர்கள் இனித் தொழிற் சங்கச் சந்தாப்பணம் வழங்கப் போவதில்லையென எச்சரிக்கை விடுத்துள்ளனர். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் மீது நம்பிக்கையிழப்பதற்கு நிறையவே காரணங்கள் உண்டு. அடிப்படையில் தொழிற்சங்கங்கள் என்பன தொழிலாளர்களை ஒரு குடையின் கீழ் அணிதிரட்டி அந்தப் பலத்தின் மூலம் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்டவையாகும். ஆனால் மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள் மலையக மக்களின் நலன்களில் அக்கறை காட்டுவதைவிட தங்கள் சொந்த அரசியல் நலன்களுக்கு மலையக மக்களின் பலத்தைப் பயன்படுத்துவதிலேயே அக்கறை காட்டி வருகின்றனர். அதுமட்டுமன்றி தொழிற்சங்கப் போட்டிகள் காரணமாக மலையக மக்கள் ஒன்றிணைத்து ஒரு பலமான சக்தியாகத் திரண்டுவிடாக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்துகின்றனர்.

**ஆயிரம் ரூபாவும் ஆறுமுகம் தொண்டமானும்**

ஏறக்குறைய இரண்டரை வருடங்களின் முன் கூட்டு ஒப்பந்தத்துக்கான பேச்சுகள் இடம்பெறவிருந்த வேளையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலர் ஆறுமுகம் தொண்டமான் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளக் கோரிக்கையை முன்வைத்தார். முதலாளிமார் சம்மேளனத்துடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்பு 500 ரூபா சம்பளத்துக்கு தொழிற் சங்கக் கூட்டு அமைப்பு சம்மதம் தெரிவித்துக் கையெழுத்திட்டது. ஆனால் கூடுதலாகக் கொழுந்து பறிப்பது, கூடுதல் நாள்கள் வேலை செய்வது போன்ற பணிகளூடாக 750 ரூபா ஊதியமாகப் பெற முடியுமென ஆறுமுகம் தொண்டமான் தொழிலாளர்களுக்குப் புதிய கணக்குக் கற்பித்துச் சமாளித்தார். தற்சமயம் கூட்டு ஒப்பந்தம் செய்யவுள்ள நிலையில் ஆயிரம் ரூபா சம்பளக் கோரிக்கையை முன்வைத்தவர் ஆறுமுகம் தொண்டமான் தான். அதுமட்டுமன்றி ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கப்போவதாகவும் அவர் சவால் விட்டார். ஆனால் ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்கு முன்பே மகிந்தவின் திடீர் அமைச்சரவையில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டார். மகிந்தவின் அமைச்சரவை நீதிமன்ற இடைக்காலத் தீப்பின் மூலம் இயங்க முடியாத நிலையில் தொண்டமான் ஆயிரம் ரூபா சம்பளக் கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை இறக்கினார். அரசியல் குழப்பங்கள் நிலவும் நிலையில் அது வேலைநிறுத்தப் போராட்டத்துக்குப் பொருத்தமான சந்தர்ப்பம் அல்ல எனச் சொல்லி பழனி திகாம்பரமும், இராதாகிருஷ்ணனும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதற்கு முதலில் மறுத்த போதிலும் பின்பு தொழிலாளர் ஒற்றுமையைப் பேணும் வகையில் தாங்களும் கலந்து கொள்வதாக அறிவித்தனர்.

> அனைத்து மலையக மக்களும் ஒன்றிணைந்து முதலாளிமார் சம்மேளனத்தைப் பணிய வைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு உருவான வேளையில் அரச தலைவர் தொழிலாளர் சம்பளப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதியளித்துள்ளார் எனக் கூறி வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொண்டமான் கைவிட்டார்.
> இப்படித் தொடர்ந்தும் மலையகத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே இளைஞர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர்.


அனைத்து மலையக மக்களும் ஒன்றிணைந்து முதலாளிமார் சம்மேளனத்தைப் பணிய வைக்கக் கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கினர். அந்த வேளையில் அரச தலைவர் தொழிலாளர் சம்பளப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதியளித்துள்ளார் எனக் கூறி வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொண்டமான் கைவிட்டார்.

இப்படித் தொடர்ந்தும் மலையகத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே இளைஞர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர்.

**அறப்போராட்டத்தை மதிக்காத அரசு**

இளைஞர்களின் நேர்மையையோ, மலையக மக்களின் நலன்கள் மீது கொண்ட அக்கறையையோ அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வையோ, எவரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆனால் அவர்களின் மேன்மையை மலையகத் தலைமைகள் பொருட்படுத்தாமைதான் கவலையளிக்கும் விடயமாகும். ஆனால் உணவு தவிர்ப்புப் போராட்டம் உட்பட அறவழிப் போராட்டங்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட பெறுமதியைக் கடந்த கால அனுபவங்களூடாக அலசிப் பார்ப்பது இந்த வேளையில் அவசியமாகிறது. 1987ஆம் ஆண்டு தியாகி திலீபன் 5 கோரிக்கைகளை முன்வைத்து உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தியபோது அதை இந்திய அரசோ, இலங்கை அரசோ பொருட்படுத்தவில்லை. அவர் 12ஆம் நாள் உயிர்துறந்தார். அன்னைபூபதி அறவழிப் போராட்டம் நடத்திய 30ஆம் நாள் உயிரைத் தியாகம் செய்தார். தமிழ் அரசியல் கைதிகள் பலமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு சாவின் எல்லை வரைச் சென்றும் சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அவர்களின் போராட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன. இதுவரை அவர்களுக்குத் தீர்வில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை என்பன தொடர்பாக மக்கள் பல போராட்டங்களை நடத்தியபோதும் எந்தவித பலனும் கிட்டவில்லை. வடக்குக் கிழக்கு தமிழ்த் தலைமைகள் என்றாலென்ன, மலையகத் தமிழ்த் தலைமைகள் என்றாலென்ன, இவர்கள் தலைவர்களாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோ அமைச்சர்களாகவோ மக்களின் வாக்குகள் மூலமே பதவி பெறுகின்றனர். ஆனால் மக்கள் தங்கள் பிரச்சினைகள் தொடர்பாகப் போராட்டங்களை நடத்தும்போது அவற்றுக்குத் தலைமைதாங்கி விரிவுபடுத்தி ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி கொடுத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்றுவது என்ற பெயரில் ரணிலின் ஆட்சியைப் பாதுகாப்பதில் காட்டிய அக்கறையில் ஒரு பகுதியைக் கூட மக்கள் தொடர்பாக முன்னெடுக்கவில்லை. இப்படியான நிலையில் அறவழிப் போராட்டங்கள் அர்த்தமிழந்து போவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.





கட்டுரை

ஸூடோ ஸ்வாமி

# மகிந்த எந்த கோட்டில் நிற்கிறார்?

திருடப்போனவனுக்குத் தேள் கொட்டிய கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கிறது மகிந்த அணி. அதில் ஒன்று அவர்கள் பொதுத்தேர்தல் ஒன்றினை இலக்கு வைத்துப் போட்ட தப்புக்கணக்காகும். பொதுத்தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு அதன் சட்டபூர்வத்தன்மை உயர்நீதிமன்றத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்படுகையிலே, மகிந்த உள்ளிட்ட தரப்பினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யிலிருந்து விலகி பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்வதான செய்திகள் ஊடகங்களில் படத்துடன் வெளிவந்திருந்தன.

ஆரம்பக்கல்விப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் வகுப்பறைக்கு வெளியேயான கிரகித்தல் செயற்பாடொன்றினை நடத்துவதற்காக மாணவர்களைப் பாடசாலை வளாகத்தினுள் அமைந்திருந்த மரநிழல் ஒன்றுக்கு அழைத்துச்சென்றார். அங்கே, இருபது அடி நீள வித்தியாசத்தில் தரையில் மூன்று கோடுகளைச் சமாந்தரமாகக் கீறி, நடுக்கோட்டில் மாணவர்களை வரிசையாக நிற்குமாறு பணித்தார். தனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, இடது மற்றும் வலது பக்கக் கோடுகளைத் தெரிவு செய்து மாணவர்களை ஓடுமாறு ஆசிரியர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் வழங்கிய அறிவுறுத்தல் இவ்வாறு அமைந்திருந்தது.

தான் ஒரு பெயரைக் கூறப்போவதாகவும் அந்தப் பெயர், ஒரு நிறத்தின் பெயராக இருந்தால், மாணவர்கள் வலப்பக்கத்தில் உள்ள கோட்டை நோக்கியும், அந்தப் பெயர் ஒரு பழத்தின் பெயராக இருந்தால் இடப்பக்கமுள்ள கோட்டை நோக்கியும் ஓட வேண்டும். ஆசிரியர் பெயரைக் கூறியவுடன் மாணவர்கள் விரைவாகக் கிரகித்து அதன்படி ஓடவேண்டும். இதுதான் போட்டி விதிமுறை. ஆசிரியர் முதலாவதாக 'பச்சை' என்று கூறினார். மாணவர்கள் உடனடியாக அதனை நிறப்பெயர் எனக்கணித்து, இருபது அடிக்கப்பால் வலப்பக்கத்தில் கீறப்பட்ட கோட்டை நோக்கி ஓடினர். ஒருவர் கூட நடுக்கோட்டில் எஞ்சவில்லை. ஆசிரியர் மகிழ்ச்சி அடைந்தார். இப்போது அடுத்த பெயரை கூறுவதற்காக ஆசிரியர் மாணவர்களை நடுக்கோட்டுக்கு அழைத்தார். அவர்கள் நடுக்கோட்டில் இரு பக்கத்தில் எந்தப் பக்கத்துக்கும் நோக்கி ஓடத் தயாரான நிலையில் நின்றனர். இப்போது ஆசிரியர் கூறிய சொல், 'மாம்பழம்'! மாணவர்கள் விழுந்தடித்துக்கொண்டு இடப்பக்கக் கோட்டை நோக்கி ஓடினர். கிரகித்தல் விளையாட்டின் அடிப்படை மாணவர்களுக்குப்புரிந்துவிட்டதனை அவதானித்த ஆசிரியர்ஒரு விவகாரமான பெயரை மனதில் கொண்டு, மாணவர்களை மீண்டும் நடுக்கோட்டுக்கு அழைத்தார். அடுத்த சொல்லை ஆசிரியர் எப்பொழுது சொல்வார் என்னும் எதிர்பார்ப்புடன் மாணவர்கள் நடுக்கோட்டில் தயாராகினார். ஆசிரியர் கூறிய அடுத்த சொல், 'ஒறேன்ஞ்'!



**மாணவர்களின் கதை மகிந்தவுக்கு பொருந்தும் விதம்**

மேற்கண்டவாறு ஆசிரியர் கூறியதும் எந்தப் பக்கத்துக்கு ஓடுவது என்று தெரியாமல் மாணவர்கள் நடுக்கோட்டில் பேந்தப்பேந்த விழித்தனர். முன்னாள் அரசதலைவரான மகிந்தவையும் அவருடைய பரிவாரங்களான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்று அடையாளம் காட்டியவர்களையும் மேலே சொன்ன கதையில் கீறப்பட்ட நடுக்கோட்டில் நிற்க வைப்பதாக வைத்துக்கொள்வோம். மேற்படி வகையறாவான போட்டி ஒன்றினை நவம்பர் 12ஆம் திகதியளவில் நடத்தி சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்கள் வலப்பக்கக் கோட்டை நோக்கியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்களை இடப்புறம் உள்ள கோட்டை நோக்கியும் ஓடுங்கள் என்றால், அப்போது வலப்பக்கம் நோக்கி அள்ளுப்பட்டவர்கள், இப்போதோ அதே போட்டியில் இடப்புறத்தை நோக்கி ஓடுகிறார்கள்.

**கொழுத்திப் போடப்பட்டிருக்கும் உறுப்புரிமை விவகாரம்**

கடந்த 13ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை அடுத்து, திருடப்போனவனுக்குத் தேள் கொட்டிய கணக்கில் பாதிக்கப்பட்டிருக்கிறது மகிந்த அணி. அதில் ஒன்று அவர்கள் பொதுத்தேர்தல் ஒன்றினை இலக்கு வைத்துப் போட்ட தப்புக்கணக்காகும். பொதுத்தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டு அதன் சட்டபூர்வத்தன்மை உயர்நீதிமன்றத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்படுகையிலே, மகிந்த உள்ளிட்ட தரப்பினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யிலிருந்து விலகி பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்வதான செய்திகள் ஊடகங்களில் படத்துடன் வெளிவந்திருந்தன. 13ஆம் திகதிக்குப் பின்னான சூழல், உடனடித் தேர்தலுக்கான சாத்தியப்பாட்டை நிராகரித்திருந்த நிலையில் இந்த கட்சி உறுப்புரிமை விவகாரம் இப்போது சூட்டைக் கிளப்பியிருக்கிறது. அதுவும், மகிந்த எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் விவகாரமாகியிருக்கிறது. இதுவரைநாளும் எதிர்க்கட்சி ஆசனத்தினை ஆண்டுகொண்டிருந்த சம்பந்தனை அதிலிருந்து விலக்கிய வேளையில், புதிய பிரதியீட்டாளருக்கு இருக்கக் கூடிய தகமை தொடர்பில் அவருடைய தரப்பு இந்தத் திரியைக் கொழுத்திப் போட்டிருக்கிறது.

**தாமரைமொட்டின் வெற்றி!**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் உதயமான தாமரை மொட்டினைக் கட்சிச் சின்னமாகக் கொண்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன ஜீ.எல். பீரீசைத் தவிசாளராகவும், சாகல காரியவசம் என்பவரைக் கட்சிச் செயலாளராகவும் கொண்டு இயங்குகிறது. அந்தக் கட்சியின் இயங்குதளத்தினை ஆட்டுவிப்பவர்கள் எல்லாம் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினுள் இயங்கும் மகிந்த ஆதரவு அணியினர் தான். இந்தக் கட்சி தனது 16ஆவது மாத வயதைக் கடக்கும் தறுவாயிலேயே நாட்டின் ஏழு மாகாணங்களிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் சக்கைப்போடு போட்டதன் காரணமாகப் பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8 இக்குப் பின்னான அதே வேளை 2018 ஒக்ரோபர் 26 இக்கு முன்னான சூழலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் அல்லது ஐ.ம.சு.மு.வினுள் இருக்கும் மகிந்தவாதிகள், கூட்டரசுக்கு ஒவ்வாத, பொதுஜன பெரமுனவை ஆதரிக்கும் நடவடிக்கைகளிலேயே சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர். சு.க.வின் மத்தியகுழுக் கூட்டங்களில் இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டு வந்தாலும் அது வெறுமனே வார்த்தைகளில் மாத்திரமே அமைந்திருந்தன. கடந்த செப்ரெம்பர் மாதத்தில் கூட்டு எதிரணியில் போய் ஒட்டியதற்காக சில தொகுதி அமைப்பாளர்களுடைய பதவிகள் கூட பறிக்கப்பட்டிருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் தமது படத்தினை கட்சி பதாகைகளில் பொறிப்பதற்கு பொதுஜன பெரமுனவினருக்கே அருகதை இருப்பதாக மகிந்த வாதிட்டிருந்தார்.

**தூர்ந்து போகும் நிலையில் சுதந்திரக்கட்சி**

67 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொது எதிரணி வேட்பாளர் ஒருவர் அரச தலைவர் தேர்தலில் இறங்கி வெற்றி பெற்றதனால் குழப்பம் கண்டிருந்தது. இரண்டு பிரிவு அணிகளைத் தன்னகத்தில் கொண்டு இயங்கிய வேளையில், கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதிய நிலைவரம் அந்த இரண்டு அணியினரையும் ஒன்றாக்கியிருந்தது. எனினும், கடந்த 4ஆம் திகதி சுதந்திரக்க ட்சியின் மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றபோது மகிந்தவோ அவரது விசுவாசிகளோ அதில் பங்குபற்றியிருக்கவில்லை. இதனைவிட வருங்காலத் தேர்தல்களை வெற்றிகொள்ள நேற்று முளைத்த மொட்டுக் கட்சியினருடன் ஒட்ட வேண்டிய தேவையும் சு.க.வினருக்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 24ஆம் திகதி நடந்த தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பில் இந்த நிலைவரத்தி னை அரச தலைவர் வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது. அதனைவிட இந்த நகர்வுக்கு முட்டுக் கட்டை போடும் சு.க.வின் தொகுதி அமைப்பாளர்களிடமிருந்து அமைப்பாளர் பதவியை பறிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

**உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தல்லவோ இருக்கிறார்களாம்!**

நாடாளுமன்ற உறுப்புரிமை பற்றியதான கேள்வி எழுப்பப்பட்டதனைத் தொடர்ந்து பொதுஜன பெரமுனவிலான அங்கத்துவம் தொடர்பில் முரணான அறிவிப்புக்கள் வெளிவரப்பட ஆரம்பித்திருக்கின்றன. கோலாகலமாக நடந்ததாக அறிவிக்கப்பட்ட உறுப்புரிமை பெற்றுக் கொள்ளும் நிகழ்வு மற்றும் அறிவிப்புகள் கூட விண்ணப்பம் சமர்ப்பித்த நிகழ்வுகளாக திரிக்கப்பட்டு தற்போது குறிப்பிடப் படுகிறது.

மகிந்த, எதிர்க்கட்சித்தலைவர் பதவியை உரிமை கோரும் நிலையை அடுத்து அவருடைய நாடாளுமன்ற உறுப்புரிமை யை சரிபார்க்கும் நடவடிக்கைகளுக்கான கோரிக்கைகள் எழுந்திருக்கின்றன. இந்தப்பத்தி எழுதப்படும் வரையில் அது தொடர்பில் சபாநாயகரினால் இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை. மகிந்தவோ தான் இன்னமும் சு.க.வினை சேர்ந்தவன் என்கிறார்.

மகிந்தவினுடையதும் அவருடைய ஏனைய பரிவாரங்களுடையதும் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தொடக்கிவைக்கப்பட்டிருக்கும் சுவாரஷ்யம் பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன 'ஓரேன்ஜ்' குழப்பத்தினை ஒத்திருக்கிறது. சு.க.வினுள் சந்திரிகா ஓரங்கட்டப்பட்டிருக்கும் நிலையில், தாமரைமொட்டுக்கட்சியை ஆரம்பித்து வைத்துவிட்டு மகிந்த சு.க.வில் மீளக் காலூன்ற விளையும் நிலைவரம் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பத்திரப்படுத்துவதற்காகவே என்பது விரைவில் வெளிச்சத்துக்கு வரும்.



# 2018 மறக்கமுடியாத உலக நிகழ்வுகள்





2018ஆம் ஆண்டு நிறைவுபெற இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ளன. கொண்டாட்டங்கள், போராட்டங்கள், விமர்சனங்கள், தேர்தல், ஆட்சி மாற்றம் இயற்கைப் பேரிடர் எனப் பல்வேறு உணர்வுபூர்வ சம்பவங்கள் உலகம் முழுவதும் அரங்கேறியுள்ளன. அந்த வகையில் இந்த ஆண்டில் உலகில் நடந்த அனுபவங்களை இந்தத் தொகுப்பில் பார்க்கலாம்.



**சிறகு முளைத்த சவூதிப் பெண்கள்**

சவூதி மன்னர் சல்மானும் இளவரசர் முகமது பின் சல்மானும் பெண்களுக்கான வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான பல்வேறு அனுமதிகளை இந்த ஆண்டு விதித்தனர். கார் ஓட்ட அனுமதி, சொந்தமாகத் தொழில் தொடங்க அனுமதி, இணை விமானிகள், விமான ஊழியர்கள் போன்ற துறைகளில் பெண்களுக்கான வாசலை சவூதி திறந்து வைத்தது.

**ட்ரம்ப் - கிம்மின் இணைந்த கைகள்**

அமெரிக்க அதிபர் தேர்தல் பரப்புரையில் ட்ரம்ப் முக்கிய ஆயுதமாக எடுத்ததே வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகளும், அதன் அதிபர் கிம்முக்கு எதிரான விமர்சனமும்தான்.



அதனை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் தொடர்ந்தார் ட்ரம்ப். தொடர்ந்து வடகொரியாவின் மீது பொருளாதாரத் தடைகள், போர் எச்சரிக்கை என ட்ரம்பின் மிரட்டல்கள் தொடர்ந்தன. நிச்சயம் அமெரிக்கா வடகொரியா இடையே போர் மூளும் என்று உலக நாடுகள் எதிர்பார்த்திருந்த நிலையில் நிகழ்ந்தது அந்த ஆச்சரிய சந்திப்பு. சிங்கப்பூரின் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா விடுதியில் ஜூன் மாதம் ட்ரம்ப்-கிம் இடையே சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் முடிவில் வடகொரியா அணு ஆயுதங்களைப் படிப்படியாக அழிக்க சம்மதம் தெரிவித்தது. எனினும் தொடர்ந்து அமெரிக்கா - வடகொரியா இடையே அணு ஆயுத சோதனைகள் தொடர்பான மோதல் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

**சுனாமி + நிலநடுக்கம் + விமான விபத்து = இந்தோனேசியா**

2018ஆம் ஆண்டில் வழக்கம் போல பெரும் இயற்கைச் சீற்றத்தை எதிர்கொண்டது இந்தோனேசியா. ஒகஸ்ட் மாதம் இந்தோனேசியாவின் லாம்போக் தீவில் கடலுக்கு அடியில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இவைரிக்டர் அலகில் 6.8,7 ஆகப் பதிவாகின. அதன் 132



முறை நிலஅதிர்வுகள் ஏற்பட்டன. இந்த நில நடுக்கத்தில் 500க்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்தனர். இந்த நிலையில் மீண்டும் டிசம்பர் 23ம் திகதி இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா.ஜாவா தீவுப்பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுந்தா ஜலசந்தியில் ஏற்பட்ட சுனாமி அலையில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிகை 300ஐ தாண்டியது. அத்துடன் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தா நகரில் இருந்து பங்கல் பினாங் நகருக்குச் சென்ற லயன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் ஜேடி610 என்ற வானூர்தி ஒக்டோபர் மாதம் விபத்தில் சிக்கியது.

இதில் பயணிகள், ஊழியர்கள் என 189 பேர் சாவடைந்தனர். இந்தோனேசியாவுக்கு இது மோசமான வருடமாக முடிந்துள்ளது.



**குகையில் சாகசம்**

தாய்லாந்து நாட்டின் சியாங்ராய் மாகாணத்தில் தாம் லுவாங் என்ற குகை உள்ளது. சுமார் 10 கிலோ மீற்றர் நீளமுடைய இந்தக் குகை ஆசியாவிலேயே மிகப்பெரிய குகையாகக் கருதப்படுகிறது. வைல்ட் போர் எனும் 11 வயது முதல் 16 வயது கொண்ட கால்ந்து அணியைச் சேர்ந்த சிறுவர்கள் கடந்த ஜூலை 23ஆம் திகதி இந்தக் குகைக்குச் சென்றனர்.

இந்தச் சிறுவர்களுக்கு உதவியாகத் துணைப் பயிற்சியாளர் எக்காபோல் சந்தாவாங் உடன் சென்றிருந்தார். இந்தக் குகை குறித்து அதிகம் அறிந்திராத இந்தச் சிறுவர்களும், துணைப் பயிற்சியாளரும் உள்ளே சென்று மாட்டிக்கொண்டனர். இவர்கள் சென்ற சமயம் அங்கு திடீர் மழை பெய்து வெள்ள நீர் குகைக்குள் சூழ்ந்து கொண்டது.

நீரும், சேறுமாகக் குகை சூழ்ந்ததால் குகையைவிட்டு வெளியேற முடியாத சூழல் அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் இரண்டு வாரங்களாக உணவும், நீரும் இன்றி அவர்கள் குகைக்குள் சிக்கிக் கொண்டனர். தாய்லாந்துக் கடற்படை வீரர்கள், பேரிடர் மீட்புப் படையினர், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் என பெரிய குழுவே அவர்களை மீட்கப் போராடியது. இறுதியாக அவர்கள் அனைவரும், மூன்று பிரிவாக மீட்கப்பட்டனர். இந்த மீட்புப் பணியில் மீட்புப் பணி வீரர் ஒருவர் தனது உயிரைத் தியாகம் செய்தார்.

**விமர்சனத்துக்கு ஆளான சூகி**

ரோஹிங்கியா விவகாரத்தை அந்த நாட்டின் தலைவர்ஆங்சாங்சூகி கையாண்ட விதம் உலக நாடுகளிடையே அவருக்கு எதிராகப் பல விமர்சனங்களை பெற்றுத் தந்தது. ரோஹிங்கியா விவகாரம் தொடர்பாக கனடாத் தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ரூடோ கனடாவின் கவுரவ குடியுரிமைப் பதவிக்குத் தகுதியானவரா? என்று கேள்வியையும் சூகியை நோக்கி எழுப்பினார். இந்த நிலையில், கனடா நாடாளுமன்றத்தில் ரோஹிங்கியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்கத் தவறியதன் காரணமாக சூகிக்கு வழங்கப்பட்ட கவுர குடியுரிமைப் பட்டத்தைத் திரும்பப் பெறக் கூறிய தீர்மானத்தில் ஒரு மனதாக வாக்களிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




மேலும், மியான்மர் அரசு ரோஹிங்கியா இனப்படுகொலை குறித்த செய்தியை சேகரித்த இரண்டு பத்திரிகையாளர்களுக்கு ஏழாண்டு சிறைத் தண்டனை வழங்கிய விவகாரம் காரணமாக உலக அளவில் சூகிக்கு எதிரான விமர்சனங்கள் எழுந்தன.

**தொடரும் ஏமன் துயரம்**

உள்நாட்டுப் போர் நடந்து வரும் ஏமனில் கிளர்ச்சி யாளர்கள் கட்டுப்பாட்டு பகுதியில் இலட்சக்கணக்கான குழந்தைகள் உணவில்லாமல் தவித்து வருவதாகவும், மேலும் சமீபத்தில் நிலவும் விலைவாசி ஏற்றம் காரணமாகவும் ஏமனில் உணவில்லாமல் தவிக்கும் குழந்தை களின் எண்ணிக்கை 50 இலட்சத்தை நெருங்கியுள்ளது என்று 'சேவ் தி சில்ட்ரன்' என்ற தனியார் தொண்டு நிறுவனம் தெரிவித்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து உலக நாடுகளிடையே எதிர்ப்பை மீறி, ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவூதி அந்நாட்டு அரசுடன் இணைந்து உள்நாட்டுப் போரில் சண்டையிட்டு வருகிறது.



**முடிவுக்கு வந்த காஸ்ட்ரோ சகோதரர்களின் சகாப்தம்**




கியூபா நாட்டின் புதிய அதிபராக மிகேல் டியஸ் கானெல் கடந்த ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்டார். இதன் மூலம் கியூபாவை 60 ஆண்டுகளாக ஆட்சி செய்த காஸ்ட்ரோ சகோதரர்களின் சகாப்தம் முடிவு பெற்றது.





# 2018 உலக நிகழ்வுகள்



**அமெரிக்கா - சீனா வர்த்தகப் போர்**

இறக்குமதிப் பொருள்களுக்கு வரி விதிக்கும் விவகாரத்தில் அமெரிக்கா - சீனா இடையே இந்த ஆண்டு கடும் மோதல் எழுந்தது. அமெரிக்காவும் சீனாவும், மாறி மாறி வரி விதித்து வருகின்றன. அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், அந்த நாட்டுப் பொருள்களுக்கு 3 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குச் சீனா வரி விதித்தது. இறக்குமதியாகும் பொருள்களுக்கு வரி விதிக்கும் விவகாரத்தில் சீனா, இந்தியா போன்ற நாடுகளை அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டியது. பிறநாடுகளின் பொருட்களுக்கு தாங்கள் குறைந்த வரி விதிக்கும் நிலையில் அமெரிக்கப் பொருட்களுக்கு அந்த நாடுகளில் கூடுதல் வரி விதிக்கப்படுவதாக ட்ரம்ப் முறைப்பாடு எழுப்ப இருநாடுகளும் மற்ற நாட்டின் இறக்குமதிப் பொருள்களுக்கு பரஸ்பரம் வரி விதித்தன. இதனால் உலகளாவிய 'வர்த்தகப் போர்' நடைபெறும் சூழல் உருவானது.

**பதவியைத் தக்கவைத்த தெரசா மே**



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவது குறித்த ஒப்பந்தம் தொடர்பாக ஆட்சிக்கு எதிராக நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரசா மே வெற்றி பெற்றார். இந்த வெற்றி மூலம் சுமார் ஓராண்டுக்கு அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாத நிலையும் உருவாகியது.

**இலங்கையின் அரசியல் சதுரங்கம்**

இலங்கை அரசியல் களத்தில் இந்த ஆண்டு பெரும் சதுரங்க விளையாட்டே நடந்து முடிந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அதிபர் மைத்திரிக்கு இடையே நடந்த கருத்து மோதலில், இலங்கை தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்ரமசிங்கவை கடந்த ஒக்பரோபர் 26ஆம் திகதி அதிபர் மைத்திரி பதவி நீக்கம் செய்தார். இதனைத் தொடர்ந்து பல எதிர்ப்புக்கு இடையே புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்து, நாடாளுமன்றத்தையும் முடக்கினார்.
பின்னர் உச்ச நீதிமன்ற உத்தரவு காரணமாக நாடாளுமன்றம் மீண்டும் கூடியது. நம்பிக்கை வாக்கெடுப்பில் ரணில் பெரும்பான்மையை நிரூபித்தார். மகிந்த ராஜபக்ச தோல்வியைத் தழுவினார். இதனைத் தொடர்ந்து ராஜபக்ச பதவி விலகி ரணில் விக்ரமசிங்க மீண்டும் தலைமை அமைச்சரானார்.

**உலகை அசைத்த சாவு**

சவூதியில் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு எதிராகப் பல ஆண்டுகளாக வன்முறைகள் நடந்தேறி வருகின்றன என்றாலும், பத்திரிகையாளர் ஜமால் கொலை விவகாரத்தில் சவூதியின் குருதி படிந்த கரங்கள் இந்த முறை வெட்டவெளிச்சமானது.
ஜமால் கஷோகிஜி சவூதியின் புகழ்பெற்ற பத்திரிகையாளர். 1980களில் அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர். அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவூதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களை விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர்.
இந்த நிலையில் அவர் துருக்கியில் சவூதி தூதரக அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டர். இந்தக் கொலைச் சம்பவத்தில் சவூதி இளவரசர் முகம்து பில் சல்மான் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதால் உலக அளவில் சவூதிக்கு எதிரான அதிர்வலை ஏற்பட்டது.
முதலில் இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறிய சவூதி பின்னர் சாட்சியங்கள் வலுவாக இருந்ததைத் தொடர்ந்து ஒப்புக் கொண்டது. ஆனால் இதில் இளவரசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு இல்லை என்று கூறி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று உறுதியளித்தது.



**அதிரவைத்த முகநூல் திருட்டு**

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் கேம்பிரிட்ஜ் ஜின் 'அனாலிட்டிகா' என்ற இணைய நிறுவனம், அமெரிக்க அதிபர் தேர்தலின் போது குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப்புக்காகப் பணியாற்றி சுமார் 5 கோடி அமெரிக்கர்களின் முகநூல் விவரங்களைத் திருடியதாக கடந்த மார்ச் மாதம் குற்றச்சாட்டு எழுந்தது.
மேலும் இது தொடர்பாக நடந்த விசாரணையில் முகநூல் பயனாளர்களின் அனுமதியின்றி அவர்களுடைய தகவல்களைத் திருடியதை முகநூல் நிறுவனர் மார்க் ஸக்கர்பெர்க் ஒப்புக்கொண்டார். இது பயனாளர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



**அதிர்ச்சி தந்த சென்டினல் தீவு**

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இருந்து 35 மைல் தொலைவில் இருப்பதுதான் நோர்த் சென்டினல் தீவு. இந்தத் தீவைச் சுற்றி 5 நாட்டிகல் மைல்வரை மனிதர்கள் செல்ல மத்திய அரசு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த தீவில் உள்ள பூர்வீகக் குடிகளான சென்டினல் பழங்குடி மக்கள் வேற்று மனிதர்களை விரும்பவதில்லை என்பதாலும், அவ்வாறு வரும் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாலும் இங்குச் செல்வது இந்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ளது.
இந்தக் கட்டுப்பாடுகளை மீறிக் கடந்த வாரம் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் ஆலன் சாவ் (வயது 27) மீனவர்கள் உதவியுடன் நார்த் சென்டினல் தீவுக்குச் சென்றார். முதலில் ஜோன் ஆலனை ஏதும் செய்யாமல் இருந்த அந்தப் பழங்குடியினர், பின்னர் அம்பு எய்திக் கொலை செய்தனர். இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

**4ஆவது முறையாக அதிபரான புடின்**

ரஷ்ய அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் விளாடிமிர் புடின் 76 சதவீத வாக்குகளுடன் அமோக வெற்றி பெற்றார். இதன்மூலம் 4ஆவது முறையாகப் புடின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இங்கிலாந்து இளவரசர் ஹாரி திருமணம்**

இங்கிலாந்து இளவரசர் சார்லஸ், டயானா தம்பதியின் இரண்டாவது மகன் ஹாரி தனது தோழியும், காதலியுமான அமெரிக்க நடிகை மெக்கன் மார்கலைத் திருமணம் செய்ய உள்ளதாகக் கடந்த ஆண்டு அரசக் குடும்பம் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து அவர்களது திருமணம் மே மாதம் நடந்தது.

**தொடரும் ஈரான் - அமெரிக்கா மோதல்**

ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஆனால், ட்ரம்ப்பின் மிரட்டலைச் சிறிதும் பொருட்படுத்தாத ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி ஈரான் ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு அணு ஆயுதச் சோதனையைப் பயன்படுத்தும் என்றார். இதனைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்த நாட்டுடன் எந்த நாடும் கச்சா என்ணெய் ஏற்றுமதி செய்யக் கூடாது என்றும் தெரிவித்தது.

**சிரியாவில் அமெரிக்கப் படை வெளியேற்றம்**

சிரியாவில் ஐஎஸ்ஸுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றதால், அமெரிக்கப் படைகள் அங்கிருந்து முற்றிலுமாக வெளியேறும் என்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் அமெரிக்காவின் முடிவை விமர்சித்தன.

**பாகிஸ்தான் தலைமை அமைச்சராக இம்ரான்கான்**

பாகிஸ்தான் தெஹ்ரீக்இஇன்சாப் கட்சியின் தலைவரும், பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான் தேர்தலில் வெற்றி பெற்று பாகிஸ்தானின், தலைமை அமைச்சராக ஓகஸ்ட் மாதம் பதவியேற்றார்.
இவரது பதவியேற்பு விழாவில் பஞ்சாப் மாநில அமைச்சரும், இந்திய கிரிக்கெட் வீரருமான சித்து கலந்துகொண்டது பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தியது.

**மறைந்தார் ஹாக்கிங்**



கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக இயற்பியலாளரும், விஞ்ஞானியுமான ஸ்ரீபன் ஹாக்கிங் கடந்த மார்ச்மாதம் காலமானார். அவரது மறைவுக்கு உலகம் முழுவதி லும் உள்ள தலைவர்கள், விஞ்ஞானிகள் இரங்கல் தெரிவித்தனர்.

**கிம் - மூன் சந்திப்பு**

அமெரிக்காவுடன் ஏற்பட்ட சமாதானத்துக்குப் பிறகு இனி அணு ஆயுத சோதனைகளை நடத்தப் போவதில்லை என்று அறிவித்த வடகொரிய அதிபர் கிம், சுமார் 50 வருடங்களைக் கடந்த கொரியப் போருக்குப் பிறகு தென்கொரிய எல்லைக்குள் அமைதிப் பேச்சுவார்த்தைக்காகச் சென்ற வரலாற்று நிகழ்வு நடந்தது.

**மெக்சிக்கோ அதிபராக ஆண்ட்ரஸ்**

மெக்சிக்கோவில் பல வருடங்களுக்குப் பின்னர், அதிபராக இடதுசாரி கட்சியைச் சேர்ந்த ஆண்ட்ரஸ் மானுவேல் தேர்ந்தெடுக்கப்பட்டார் மேலும் மெக்சிக்கோவில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற்ற அதிபர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

**உலகக் கோப்பையை வென்ற பிரான்ஸ்**

ரஷ்யாவில் இந்த வருடம் கோலாகலமாகத் தொடங்கிய உலகக் கோப்பைக் கால்பந்து போட்டியில் பிரான்ஸ் நான்காவது முறையாக உலகக் கோப்பையை வென்றது.





# எச்.ஐ.வி

கட்டுரை
சதானந்தன்

## ஏற்றப்பட்ட கர்ப்பவதி இந்தியாவைக் குலுக்கிய அதிர்வு

இந்தியாவின் சாத்தூர் அரசு மருத்துவமனையில் குருதி ஏற்றியதால் எச்.ஐ.வி. பாதிப்புக்கு ஆளான கர்ப்பவதிக்கு மதுரை அரச மருத்துவமனையில் மீண்டும் குருதிப் பரிசோதனை செய்து நோய்த் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. விருதுநகர் மாவட்டம் சாத்தூரைச் சேர்ந்த முச்சக்கர வண்டி ஓட்டுநர் ஒருவரின் மனைவி 9மாத கர்ப்பிணியாக உள்ளார். உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்த அவருக்கு, சாத்தூர் அரச மருத்துவமனையில் எச்.ஐ.வி. கிருமி கலந்த குருதி செலுத்தப்பட்டதால், அந்தக் கர்ப்பவதி எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகி இருப்பது தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அவருக்குக் கடுமையான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 9 மருத்துவர்கள் கொண்ட குழுவினர் அவரைக் கடுமையாகக் கண்காணித்துச் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

### எச்.ஐ.விக்குரிய குருதிக்காரன்

சவூதிக்குச் செல்வதற்காக நுழைவிசைவு பெறவேண்டி அதற்கான மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றபோது தன்னுடைய குருதியில் எச்.ஐ.வி. தொற்றிருப்பது சிவகாசியைச் சேர்ந்த அந்த இளைஞனுக்குத் தெரியவந்துள்ளது. அதற்கு முன்னர் தான் கொடையளித்த குருதி தன்னுடைய உறவினரான குறித்த கர்ப்பவதிக்கு ஏற்றப்பட்டுவிடும் என்று விரைந்து அதைத் தெரியப்படுத்தியிருக்கிறார் குறித்த இளைஞன். பின்னர் தன்னுடைய குருதி கர்ப்பவதிக்கு ஏற்றப்பட்டதையறிந்து மனம்நொந்து தன்னுடைய உயிரை மாய்ப்பதற்கு முயற்சித்துள்ளார். கர்ப்பவதிக்கு எச்.ஐ.வி. குருதி ஏற்றப்பட்டமை அந்த இளைஞர், தான் தானம் செய்த குருதி கர்ப்பவதிக்கு ஏற்றப்பட்டதை வெளியே சொன்னதாலேயே வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கர்ப்பவதிக்கு உயர்தர சிகிச்சை வழங்கப்படுகிறது. வயிற்றிலுள்ள குழந்தைக்கு எச்.ஐ.வி பரவாமல் தடுக்க தமிழ்நாடு சுகாதாரத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. அவரது கணவருக்கும் எச்.ஐ.வி. பரிசோதனை செய்து, அவருக்கு எச்.ஐ.வி. இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

"சின்ன வயசுல இருந்தே அவன் என் வீட்டில்தான் வளர்ந்தான். சரியாகப் படிக்கல. அதனால, சிவகாசி பட்டாசு கம்பெனியில் வேலைக்குச் சேர்த்துவிட்டோம். அவனுக்கு அந்த வேலையில பிடித்தம் இல்ல. சில மாதமாவே வெளிநாடு செல்ல முயற்சி செய்தான். சவூதி: செல்ல வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிலையில்தான் இவன் குருதி கொடுத்தான். எச்.ஐ.வி. இருந்திருந்தால் அப்போதே சொல்லியி ருப்பாங்களே. ஆனால், எல்லாம் சரியாக இருந்தது என்றார்கள். நாங்களும் மருமகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டோம். இவனும், வெளிநாடு செல்வதற்கான ஏற்பாட்டில் இருந்தான். மதுரையில் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றான். அங்குதான், அவனுக்கு எச்.ஐ.வி. இருப்பது தெரியவந்தது. உடனே, எங்களிடம் சொல்லாமல் சிவகாசி மருத்துவமனைக்குச் சென்று தான் வழங்கிய குருதியில் எச்.ஐ.வி. இருக்கிறது என்று சொன்னான். 18 வயதுப் பையன். எந்த தப்பும், தவறும் செய்யாதவன். அவனுக்கு இந்த நோய் எப்படி வந்ததென்று தெரியல - என்றுள்ளார்.

### குழந்தைக்கும் பரவுமா?

கர்ப்பவதியாகவிருக்கும் அவர் குழந்தையைப் பிரசவித்த பின்னர் தான் குழந்தைக்கு எச்.ஐ.வி. பாதிப்பு உள்ளதா? என்பது குறித்து உறுதியாக கூற முடியும். ஆனால் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்படாத வகையில் சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஏற்கனவே எச்.ஐ.வி. தொற்றிருந்த சில கர்ப்பவதிகளுக்கு, சரியான முறையில் சிகிச்சை அளித்து, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. பாதிக்காத வகையில் பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது. எனவே இந்தக் கர்ப்பவதிக்குப் பிறக்கும் குழந்தைக்கும் நூற்றுக்கு 99சதவீதம் எச்.ஐ.வி. தொற்று வர வாய்ப்பு இருக்காத வகையில் மிகவும் கவனத்துடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி. மற்றும் மஞ்சள் காமாலை நோய் ஆகியவை பிரசவத்தின் போதுதான் குழந்தையைப் பாதிக்கும். எனவே அந்த நோய் குழந்தையைப் பாதிக்காத வகையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



### கர்ப்பவதியின் நிலை?


கடந்த 8 நாள்களுக்கு முன்பு அந்த கர்ப்பவித் தாய்க்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் தொடர் சிகிச்சையால் அவருக்கு நோய் எதிர்ப்பு சக்தி தற்போது அதிகரித்துள்ளது. சாதாரண மனிதர்களுக்கு உள்ள எதிர்ப்பு சக்தியின் அளவைப் போன்று, அந்த கர்ப்பிணிக்கும் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட அவர் தொடர்ந்து அதற்கான சிகிச்சையைப் பெற வேண்டும்.

### வழக்குகளும் விசாரணைகளும்

கர்ப்பவதிக்கு எச்.ஐ.வி. தொற்றுடைய குருதி ஏற்றப்பட்ட விவகாரம் தமிழகம் முழுதும் பெரும் பரபரப்புக்குள்ளாகியதும் இந்த விவகாரத்தை விசாரிப்பதற்காக, உயர்மட்டத் தொழில் நுட்பக்குழு ஒன்று அமைக்கப்பட்டதோடு, சுகாதாரத்துறைச் செயலர் பாதிக்கப்பட்ட கர்ப்பிணியிடம் விசாரணை நடத்தினார். இந்த விவகாரம் தமிழக சுகாதாரத்துறை வரலாற்றில் கரும்புள்ளியாகப் பார்க்கப்படுகிறது.




சுகாதாரத்துறைச் செயலர் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணிடம் நேரடியாக விசாரணை நடத்திச் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளார். எச்.ஐ.வி. தொற்றுடைய குருதி வைக்கப்பட்டிருந்த சாத்தூர் குருதி வங்கியையும் அவர் ஆய்வு நடத்த உள்ளார். இந்த விவகாரத்தை விசாரிப்பதற்காக, மதுரை ராஜாஜி மருத்துவமனையின் குருதி வங்கித் தலைவர் மருத்துவர் சிந்தா தலைமையில் உயர்மட்ட தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர் விருதுநகர் மற்றும் சிவகாசியில் உள்ள குருதி வங்கிகளில் ஆய்வு நடத்த உள்ளனர். அத்துடன் தமிழகம் முழுவதும் உள்ள குருதி வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் குருதிகளை மறுபரிசோதனை செய்யவும் சுகாதாரத்துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்று தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த வழக்குக்குப் பதில் அளிப்பதற்குத் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கை அவசரமாக விசாரிக்க தொடங்கியுள்ளார்கள். அரச மருத்துவர்கள், ஊழியர்களின் அலட்சியமாக செயல்பட்டதால் குறித்த கர்ப்பவதிக்கு எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட நபரின் குருதி ஏற்றப்பட்டுள்ளது. அலட்சியமாக செயல்பட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து, அவர்களைக் கைது செய்யவேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துள்ளன.



தொகுப்பு
இந்துமதி

# முடிவுக்கு வருகிறது மோடியினது ஆட்சி!

இந்தியாவில் ஆட்சி மாற்றமொன்று இடம்பெறுவதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. அண்மையில் இடம்பெற்ற சில மாநிலங்களின் தேர்தல்களில் மத்தியில் ஆளும் பி.ஜே.பி. (பாரதிய ஜனதா கட்சி) மோசமான தோல்விகளைச் சந்தித்துள்ளதால் அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று ஆட்சியை அமைப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாகத் தெரிகின்றது.

**குஜராத்தினது முதலமைச்சர்**
**நாட்டின் தலைமை அமைச்சர்**

குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்த நரேந்திரமோடி பி.ஜே.பியின் மூத்த தலைவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தலைமை அமைச்சர் வேட்பாளரானார். தேர்தலில் அமோக வெற்றிபெற்று தலைமை அமைச்சர் பதவியில் இலகுவாக அமர்ந்து கொள்வதற்கும் அவரால் முடிந்தது. ஆரம்பத்தில் அவரது திட்டங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக இந்தியாவைத் தூய்மைப்படுத்துகின்ற அவரது திட்டத்துக்கு (கிளீன் இந்தியா) சகல தரப்பிலிருந்தும் பெரும் வரவேற்புக் கிடைத்தது. ஆனால் வறிய மக்களின்பிரச்சினைக்கு அவரால்தீர்வுகாண முடியவில்லை. அதேவேள வசதி படைத்தவர்கள் மேலும் வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் ஏற்பட்டன. இந்தியாவைப் பொறுத்தவரையில் வறிய மக்களே பெரும்பான்மையாக உள்ளதால் மோடி அரசின் மீது அந்த மக்கள் வெறுப்பைக் காட்ட ஆரம்பித்தனர். அதைவிட ஊழல் குற்றச்சாட்டுக்களும் மத்திய அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டதால் மக்கள் அரசின்மீது நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தனர். அது மட்டுமல்லாது மதவாதம் எழுச்சி பெற்றதால் இந்தியாவில் பெருமளவில் வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் மோடி அரசை வீழ்த்துவதிலேயே முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

மறுபுறத்தில் சோனியாகாந்தியின் வழிகாட்டலில் ராகுல் காந்தியைத் தலைவராகக்கொண்ட காங்கிரஸ்கட்சி மோடி அரசின் பலவீனங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்சியை அமைப்பதில் முனைப்புடன் செயற்படுகின்றது. மதவாதத்தை அந்தக் கட்சி தீர்க்கமாக எதிர்ப்பதால் சகல இன மக்களின் ஆதரவும் அந்தக் கட்சிக்குக் பெருகி வருகின்றது.

இதைவிட எளிமையானதொரு குடும்பத்தில் பிறந்து தலைமை அமைச்சர் பதவிக்கு உயர்ந்த நரேந்திர மோடி ஆடம்பரமான வாழ்வு வாழ்ந்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. வெளிநாட்டுப் பயணங்களை அவர் அடிக்கடி மேற்கொண்டதால் இந்திய மதிப்பில் இரண்டாயிரம் கோடி ரூபாவுக்கு மேல் செலவாகியுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் நாட்டுக்கு நன்மை கிடைத்ததோ இல்லையோ கோடிக்கணக்கான பணம் செலவாகியுள்ளமை ஏற்கத்தக்க ஒரு விடயமாகத் தெரியவில்லை.

**தென் மாநிலங்களை மோடியால்**
**அசைக்கவே முடியவில்லை**

தென் மாநிலங்களைப் பொறுத்த வரையில் பி.ஜே.பியால் காலூன்ற முடியவில்லை. மாநிலக் கட்சிகளே அங்கு செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. இங்கு கூட்டணி அமைப்பதில்கூட பி.ஜே.பி. சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் வட மாநிலங்களில் அந்தக் கட்சிக்குள் கிடைத்த தோல்விகள் அதன் அத்திபாரத்தையே ஆட்டம்காணச் செய்துவிட்டன.

தற்போது இந்திய அளவில் சுமார் 22 கட்சிகள் கூட்டணி அமைத்து பி.ஜே.பிக்கு எதிராகக் களத்தில் இறங்கிச் செயற்படுகின்றன. இந்தக் கூட்டணி வலுவாக உள்ளத்தை அண்மையில் இடம்பெற்ற தேர்தல்கள் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டன. இந்த நிலை தொடருமானால் அடுத்த ஆட்சி காங்கிரஸ் தலைமையில் அமையுமென்பது உறுதியாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.


தமிழ்நாட்டிலும் எதிர்க்கட்சியான தி.மு.கவும், காங்கிரசும் பலமான கூட்டணியொன்றை அமைப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாகத் தெரிகின்றது. இடதுசாரிக் கட்சிகள், சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகள் இந்தக் கூட்டணியில் நிச்சயமாக இணைந்துகொள்ளுமென்றுகூற முடியும். ஆட்சியில் அமர்ந்துள்ள அ.தி.மு.க. பா.ஜ. காவுடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தக் கட்சிக்குள் பெரும் பிளவு காணப்படுவதை மறுப்பதற்கில்லை. சென்னையின் ஆர்.கே. நகரில் இடம்பெற்ற சட்டமன்ற இடைத் தேர்தலில் தனியொரு மனிதனாக நின்று தினகரன் வெற்றி பெற்றமை அந்தக் கட்சியின் பலவீனத்தை எடுத்துக்காட்டி, தினகரனுக்கும் அந்தக் கட்சிக்குள் உள்ள செல்வாக்கும் தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பி.ஜே.பி., அ.தி.முகவுடன் கூட்டணி அமைத்துக்கொண்டாலும் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

**இலங்கைத் தமிழர்களை**
**ஏமாற்றினார் மோடி**

இலங்கைத் தமிழர் விடயத்திலும் மோடி ஏமாற்றி விட்டார் என்றுதான் கூறவேண்டும். போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களை அவர் முற்று முழுதாகக் கைவிட்டுவிட்டார் என்றுதான் கூறவேண்டும். அவர் இங்கு வந்தபோது வழங்கிய வாக்குறுதிகளும் காற்றில் பறந்துவிட்டன.

நரேந்திரமோடி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. ராகுல்காந்தி அடுத்த தலைமை அமைச்சராகப் பதவியேற்பதற்கான வாய்ப்பும் பிரகாசமாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.


> “தற்போது இந்திய அளவில் சுமார் 22 கட்சிகள் கூட்டணி அமைத்து பி.ஜே.பிக்கு எதிராகக் களத்தில் இறங்கிச் செயற்படுகின்றன. இந்தக் கூட்டணி வலுவாக உள்ளத்தை அண்மையில் இடம்பெற்ற தேர்தல்கள் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டன. இந்த நிலை தொடருமானால் அடுத்த ஆட்சி காங்கிரஸ் தலைமையில் அமையுமென்பது உறுதியாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.
> தமிழ்நாட்டிலும் எதிர்க்கட்சியான தி.மு.கவும், காங்கிரசும் பலமான கூட்டணியொன்றை அமைப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாகத் தெரிகின்றது.



# தென்கிழக்குத் திசையில் இருந்து

தொகுப்பு
அனார்கலி





## நினைவு நாள்!

ஆழிப் பேரலை இடர் ஏற்பட்டு 14 ஆண்டுகள் பூர்த்தியான நினைவு நிகழ்வுகள் தென்கிழக்கின் கரையோர தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன. கடந்த 26 ஆம் திகதி நினைவு தினத்தன்று தென்கிழக்குப் பிரதேசம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. தமிழ் பிரதேசத்தில் ஆழிப் பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிகளில் பெருமளவில் திரண்ட உறவுகள், கதறியழுது அஞ்சலி செலுத்தியதுடன் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்றன. முஸ்லிம் பிரதேசங்களில் உயிர்நீர்த்தவர்களது ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட மைய வாடிகளிலும், பள்ளிவாசல்களிலும் விசேட துஆபிரார்த்தனை, கத்தமுல் குர்ஆன் மற்றும் கந்தூரி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**ஆறாத்துயரின் நினைவு இது**



## தோற்கடிப்பு

கல்முனை நகர சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டது. குறித்த வரவு செலவுத் திட்டப் பொழிப்புக்கான மாநகரசபையின் சிறப்புக் கூட்ட அமர்வு மாநகர மேயர் சட்டத்தரணி ஏ.எம்.ரகீப் (முஸ்லிம் காங்கிரஸ்) தலைமையில் கடந்த புதன்கிழமை பிற்பகல் மாநகரசபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது மேஜர் றகீபினால் 2019ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டப் பொழி;ப்பு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விவாதமும் இடம்பெற்றது. எதிரணியினர் பொது வாக்கெடுப்புக்கு விடுமாறு கோரினர். இதன்படி சபைச் செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் பொது வாக்கெடுப்பைச் சபை அமர்வில் நடத்தியபோது சமர்ப்;பிக்கப்பட்ட வரவு -செலவுத் திட்டத்துக்கு மேஜர் உட்பட 17 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 24 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். ஏழு மேலதிக வாக்குகளால் கல்முனை மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

## இன்பத்தைப் பெற வேண்டும்!

'கௌரவ எதிரணி உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் போன்றவர்களும் எதிர் காலத்தில் இந்த மேஜர் கதிரைக்கு வரவேண்டும். இதிலுள்ள இன்பத்தை அனுபவிக்க வேண்டும்.' இவ்வாறு, கல்முனை மாநகரசபையின் வரவுசெலவுத்திட்ட 'விவாதத்தின் ஒரு கட்;டத்தில் ,மாநகர மேஜர் ஏ.எம். றகீப் ஆதங்கம் வெளியிட்டார். மேஜராக இருந்து கொண்டு தான் படும் பாட்டின் வெளிப்பாடான உள்ளக் குமுறலாகவே அவரின் இந்த ஆதங்கம் வெளிப்பட்டது. மலைக்கு மேல் மாடு ஏற்றும் நிலை தான் இங்கு உள்ளது எனவும் அவர் குறிப்பிடத் தவறவில்லை!

**அந்த இன்பம்தான் என்னவோ?**



## பெரும் எழுச்சியுடன் பேராளர் மாநாடு!

முஸ்லிம் அரசியல் வானில் புதிய பரிமாணமான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் முதலாவது பேராளர் மாநாடு கிழக்கில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. காத்தன்குடி, பீச்வே விடுதி அரங்கில் அரங்கு நிரம்பி வழிந்த பேராளர்களுடன் மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. தமது முதலாவது பேராளர் மாநாடு பெரும் எழுச்சியுடன் ,வெற்றிகரமாக இடம்பெற்றதாகத் தெரிவித்த கட்சியின் (கூட்டமைப்பின்) செயலாளர் நாயகமும் முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹசனலி, புதிய மக்கள் எழுச்சிக்கு வித்திட்;டுள்ளதாகவும் நம்பிக்கை வெளியிட்டார்.

**பழைய பாசறை அனுவங்களும் உண்டு தான்!**

## ஹரீசுக்கு வரவேற்பு!

உள்ளூராட்சி, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எச். எம்.ஹரிசுக்குக் கல்முனை மாநகரில் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் நியமனத்தை வரவேற்றும், வாழ்த்தியும் கல்முனை மாநகரெங்கும் பதாகைகள் தொங்க விடப்பட்டிருந்தன. முஸ்லிம் காங்கிரஸ் கொடிகளால் நகர் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக அவர் அழைத்து வரப்பட்டார். வரவேற்பு தொடர்பான பொதுக் கூட்டத்தில் இரா்ஜாங்க அமைச்சர் ஹரிஸ் உரையாற்றுகையில் தமிழ், முஸ்லிம் சமுகங்களுக்குப் பாதகமான புதிய மாகாண சபைகள் சட்ட அடிமை விலங்கை உடைத்தெறிவேன் எனச் சூழுரைத்தார்.

**கேட்பதற்கு நன்றாகத்தான் உள்ளது!**

## யாரைத்தான் விட்டது ஆசை!

நாட்டில் நிலவிய அரசியல் குழப்பங்;கள் தொடர்பான அந்த 51 நாள்கள் பற்றித் தாமும் நூலொன்றை வெளியிட விரும்புவதாக முஸ்லிம் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். கல்முனைக் குடி ஜிம்ஆப் பள்ளிவாசல் முன்பாக நடைபெற்ற 'எழுச்சியால் எழுவோம்' எனும் தலைப்பிலான பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதைத் தெரிவித்தார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரே 'அந்த 51 நாள்கள்' எனும் பெயரில் இந்த நூலை எழுத விரும்பியதாகவும் அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

**அரசியல்வாதிகளுக்கு இப்படி ஒரு புதிய ஆசை!**

## உயர் சபை வேண்டும்!

'இனப் பிரச்சினையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்த நாட்டில் நியாயமான நடுநிலையான தீர்மா னங்களை எடுக்கக்கூடிய அதிகாரங்களுடன் கூடிய ஓர் உயர்ந்த சபை, யாப்பு ரீதியாக அமைக்கப்பட வேண்டும்." இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று காத்தான்குடியில் நடைபெற்ற ஐக்கிய சமாதானக் கூட்ட மைப்பின் முதலாவது பேராளர் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளது.

எல்லாச் சமயங்களிலிருந்தும் அதி உயாந்த வகையில் பிரபல்யமானவாகளீக அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தச் சபையில் இடம்பெறவேண்டும் எனவும்-எவ்விதத்திலும் அரசியல் பாதுகாப்புப் படை சார்ந்த தலையீடுகள் இல்லாத இந்தச் சபையானது அரச தலைவர், தலைமை அமைச்சர், சபாநாயகர், ஆகியோரின் கூட்டு கண்காணிப்பில் வழிநடத்தப்பட வேண்டும் எனவும் குறித்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

**தீர்மானம் தீர்க்கமானது தான்!**





## கிராமசக்தி!

அரச தலைவரின் விசேட செயற்திட்டத்தின் கீழான கிராம சக்தி மக்கள் வேலைத் திட்டத் தொடக்க நிகழ்வுகள் நிந்தவூர்ப் பிரதேச செயலக பிரிவில் வெற்றிகரமாக இடம்பெற்றன. முதற்கட்டமாக நிந்தவூர்ப் பிரதேச செயலக பிரிவிலுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் தொடக்க நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பிரதேச செயலாளர் என்.எம்.அன்ஸார் உட்பட உயரதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

# அகத்தின் அழகே தனி அழகு!

ஒரு குளத்தில் பலவகையான வண்ண மீன்கள் வாழ்ந்து வந்தன. மீன்குஞ்சுகள் தினமும் குளத்தின் கரையோரமாகவந்து சூரிய ஒளியை ரசித்தபடி விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம். அப்படியே அன்றும் இரு மீன் குஞ்சுகள் கரைக்கு மிக அருகில் வந்து விளையாடிக்கொண்டிருந்தன.



அப்பொழுது காகம் ஒன்று கரையில் இருந்து புளுக்களைக் கொத்துவதும்...கா...கா.. என்று கரைவதுமாக இருந்தது. அப்போது மீன் குஞ்சொன்று காகத்தை உன்னிப்பாகக் கவனித்தது. காகம் எழுப்பும் சத்தத்தையும் காது கொடுத்துக் கேட்டது. உடனே அது பதற்றத்துடன் மற்ற மீன்குஞ்சிடம் "நாமெல்லாம் பொன்போல எவ்வளவு அழகாக இருக்கிறோம். ஆனால் அதோ பார் ஒரு கறுத்த. அருவருப்பான உருவம். அதன் குரல்கூட பயங்கரமாக இருக்கிறது" என்றது. மற்ற மீன்குஞ்சும். காகத்தின் நிறத்தையும் குரலையும் அவதானித்தது. "வா வா.. இதனைப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது உள்ளே ஓடி விடுவோம்" என்றுகூற. சூழ இருந்த எல்லா மீன்குஞ்சுகளும் ஒரு நொடியில் நீருள் மறைந்தன.

மீன் குஞ்சுகள் அவசரமாக ஓடி வருவதை அவதானித்த பெரிய மீன் ஒன்று "பிள்ளைகளே ஏன் இப்படி தலை தெறிக்க ஓடி வருகிறீர்கள்" என்று கேட்டது. "தாத்தா அங்கே கரையில் ஒரு கறுத்த உருவம். அதன்




குரலும் சரியில்லை. காட்டுக்கத்துக் கத்திக்கொண்டு ஏதோ சாப்பிட்டுக்கொண்டிருந்தது. அதுதான் பயந்து ஓடிவருகின்றோம்" என்றது ஒரு மீன்குஞ்சு. பெரிய மீன் சற்றுப் பொறுங்கள் அது கரையில் சென்று பார்த்துவிட்டு வருகின்றேன்" என்று கூறி கரையில் சென்று பார்த்துவிட்டு. " ஓ.... அதுகாக்கயார். அவரைக் கண்டா இப்படிப் பயந்தீர்கள். அவரால் உங்களுக்கு ஆபத்து வருவதும் இல்லை. உருவத்தை மட்டும் வைத்து ஒருவரைத் தப்பாக எடைபோடாதீர்கள் என்றது. "இந்த வயதானவர்களே எப்போதும் இப்படித்தான் எதற்கும் உபதேசம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்" என்று அலட்சியமாகப் பதில் கூறிவிட்டு மற்ற மீன்குஞ்சுகளையும் அழைத்துக் கொண்டு அப்பால் போனது சின்ன மீன்.

மறுநாள் விடிந்தது. வழமைபோல கரையோரமாக மீன்குஞ்சுகள் விளையாடிக்கொண்டிருந்தன. இப்போது குளக்கரைக் கட்டில் கண்களை மூடியபடி ஒற்றைக்காலில் நெடுநேரமாகத் தவம் செய்துகொண்டிருந்த ஒரு கொக்கைக் கண்டன. இதனைப் பார்த்த மீன் குஞ்சுகளுக்கு ஒரே கொண்டாட்டம். அடடா... வெள்ளை வெளேரென்று இவ்வளவு அழகாக இருக்கிறதே இது என்ன பறவை என்று ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டன.

மற்றொரு சின்ன மீன் "அதன் அழகைப் பாருங்கள் நீண்டு சிவந்து எவ்வளவு அழகாக இருக்கிறது. கால்களைப் பாருங்கள். ஒற்றைக்காலில் கண்மூடி நிற்கும் அதன் 'ஸ்ரைலைப் பாருங்கள்" என்றபடி இரண்டு மீன் குஞ்சுகள் கொக்கை நெருங்கி, "அண்ணே நீங்கள் ரொம்பவும் அழகாக இருக்கிறீர்கள் உங்கள் நீண்ட இந்த அலகைக் கொஞ்சம் தொட்டுப் பார்க்கலாமா?" எனக் கூறிகொண்டு இரண்டும் கொக்கை மிக நெருங்கின. "ஓடு மீன் ஓட உறுமீன் (பெரிய மீன்) வருமளவும் காத்திருந்த கொக்குக்கு இரண்டு சின்ன மீன்கள் கிடைத்தால் கூட கசக்குமா? பாய்ந்து லபக்கென்று இரு மீன் குஞ்சுகளையும் கௌவியது. குஞ்சுகள் இரண்டும் கொக்கின் அலகினுள் அவலக் குரல் எழுப்ப கொக்கு அப்பால் பறந்தது. மற்ற மீன் குஞ்சுகள் ஆபத்து ஆபத்து எனக் குரல் எழுப்பிக்கொண்டு ஓடின. அந்தத் தாத்தா நேற்றுச் சொன்னது இன்றைக்கு சரியாகப் போச்சு . அழகைப் பார்த்து ஏமாந்து போனோமே எனக் கவலையடைந்தன.

**அழகு என்பது புறத்தோற்றத்தில் வெளிப்படுவதல்ல, அகத்தின் அழகே தனி அழகாக மிளிரும்!**





## மன ஆரோக்கியத்துக்கு யோகா

உடல் ஆரோக்கியத்துக்கு எத்தனையோ உடற்பயிற்சிகள் இருக்கின்றன. ஆனால் மன ஆரோக்கியத்துக்கு யோகா போன்ற சில பயிற்சிகள் மட்டுமே உள்ளன. எதிர்மறையான எண்ணங்களால் ஏற்படும் கோபம், வெறுப்பு, கவலை, பயம், தோல்வி மனப்பான்மை போன்றவற்றிலிருந்து தப்பிக்க யோகா பயிற்சி அவசியம். தினமும் ஒரு மணிநேரம் யோகா செய்வது மனதை ஆரோக்கியமாக வைத்திருக்கச்செய்யும்.

இன்றைக்கு ஏற்படும் அனைத்து நோய்களும் உடல் மற்றும் மனம் தொடர்பானவையே. மனதை வைத்து தேவையான பயிற்சிகளை அளித்தால் பலநோய்கள் குணமாகிவிடும். மனதை மகிழச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்வதே ஒரு கலைதான். நோய்வந்த பிறகு கஷ்டப்படுவதைவிட நோய்வரும் முன் பாதுகாத்துக் கொள்வதே நல்லது.

மனதை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள யோகா பயிற்சிதான் பிராணாயாமம். மூச்சுப் பயிற்சி மற்றும் தியானப் பயிற்சிகள் உதவும் யோகாவைப் பொறுத்தவரை, நோய்வந்த பிறகு குணப்படுத்துவதற்கும் வராமல் பாதுகாப்பதற்கும் ஒரே பயிற்சிகள்தான். இதுதான் யோகாவின் மகிமை. உடற்பயிற்சிகள் செய்வது உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு உதவும். ஒவ்வோர் ஆசனப் பயிற்சியையும் கண்களை மூடி மூச்சுப் பயிற்சியுடன் சேர்த்துப் பொறுமையாகச் செய்யவேண்டும். சூரிய நமஸ்காரம், தடாசனம், பத்மாசனம், வஜ்ராசனம், பவன்முத்தானம், சேதுபந்தாசனம், புஜங்காசனம் சலவாசனம், சவாசனம் போன்ற ஆசனங்களைச் செய்யலாம்.'

தூக்கமின்மைப் பிரச்சினையால் பாதிக்கப்படும் நோயாளிகள் படுத்த நிலையில் 'ஓம்' என்று உச்சரித்தால் ஆழ்ந்த தூக்கம் வரும். மன அழுத்தம் உள்ளவர்கள் இந்தப் பயிற்சியை செய்தால் பிரச்சினை குறைந்து மகிழ்ச்சியுடன் வாழலாம். இவற்றைத் தினமும் செய்ய வேண்டியது அவசியம்.

இதனால் மன அழுத்தம் மீண்டும் வாரமலிருக்கும். மேலும் யோகா பயிற்சிகளை முறையான யோகா மருத்துவரிடம் கற்றுக்கொண்டு செய்தால் நல்ல பலனளிக்கும். மன அழுத்தத்துக்கும் மனம் சார்ந்த நோய்களுக்கும் யோகாவைத் தவிர வேறு மருந்தில்லை.

# மதங்களும் நற்போதனைகளும்

மதங்கள் ஒவ்வொன்றும் அறங்களைக் கட்டமைப்பதற்குப் பல்வேறு மூலாதாரங்களைப் பயன்படுத்துகின்றன. நூல்கள், மதங்கள் தம்முடைய அறக்கருத்துக்களை முன்வைப்பதற்குப் பல நீதி நூல்களைக் பயன்படுத்துகின்றன. ஒவ்வொரு மதமும் தனக்கென ஒரு புனித நூலை கொண்டிருக்கின்றன. இந்துசமயமானது வேதங்களை பொதுநூலாகவும் , ஆகமங்களை சிறப்பு நூல்களாகவும் கொள்கின்றன. பகவத்கீதையானது புனித நூலாகப் போற்றப்படுகின்றது. இஸ்லாமியர்கள் திருக்குர்ஆன் என்ற நூலைப் புனித நூலக போற்றுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பைபிளைப் புனித நூலாகப் போற்றுகின்றனர். மதங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறாகப் புனித நூல்களைப் போற்றுகின்றனர். மதங்கள் ஒவ்வொன்றும் இவ்வாறு புனித நூல்களின் வாயிலாகத் தம் கருத்துத்துக்களைப் போதிக்கின்றன. இந்து மதத்தைப் பொறுத்தமட்டில் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், பன்னிரு திருமுறைகள் நாலாயிரம் திவ்ய பிரபந்தம், உபநிடதம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் போன்ற பல்வேறு நூல்களைத் தன்பால் கொண்டுள்ளது. இந்த நூல்களின் வாயிலாகப் பல்வேறு அறக்கருத்துக்கள் முன்மொழியப்படுகின்றன, உதாரணமாக மகாபாரதத்தை எடுத்துக் கொள்வோமாயின்,


கௌரவர்கள் மிகுந்த கொடியவர்களா கக் காணப்பட்டனர். இவர்கள் தொகையில் அதிகமாகவும் காணப்பட்டனர். பாண்டவர்கள் அறவழியின் வழியே வாழ்ந்தவர்கள். இவர்கள் தொகையில் குறைந்தவர்களாகவே காணப்பட்ட போதிலும், தர்மத்தின் வழி நின்று வாழ்ந்தமையால் கௌரவர்க ளை வெற்றி கொள்கின்றனர்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் பைபிளானது மக்களை நல்வழிப்படுத்தும் நூலாக விளங்குகின்றது. இந்தப் புனித நூலானது பல்வேறுபட்ட அறக்கருத்துக்களை மக்களுக்குப் போதிக்கின்றது.

இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குர்ஆனில் பல்வேறு அறக்கருத்துக்கள் போற்றப்படுகின்றன. இஸ்லாமியர்களைப் பொறுத்தமட்டில் ஹதீஸ் என்பது நபிகளால் முன்வைக்கப்பட்ட பொன்மொழிகளாகும். இத்தகைய புனித ஹதீஸ் இஸ்லாமியர்களுக்கான சிறந்த அறப்போதனைகளை முன்வைக்கின்றன.

**சமயப் பரப்புரைகள்**:-உலக மதங்கள் தமது மதக்கருத்துக்களை போதிப்பதற்கும் தமது அறக்கருத்துக்களால் போதிப்பதற்கும் சமயப் பரப்புரைகளை மேற்கொள்கின்றன. சமயப் பரப்புரைகள் வாயிலாகப் பல்வேறு அறக்கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. கிறிஸ்தவ ஆலயங்களில் பிரதி ஞாயிறுதோறும் சமயப் பரப்புரை நிகழும். கிறிஸ்தவ வழிபாடுகளின்போதும், அதற்குப் பின்னரான பரப்புரையின்போதும் உலக நன்மை கருதிப் பரப்புரையானது மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பரப்புரையானது மக்களுக்கு அறக்கருத்துக்களைப் போதிக்கின்றது.

இதுபோல் இந்து ஆலயங்களில் நிகழ்கின்ற பரப்புரைகள் மக்களுக்கு அறக்கருத்துக்களை போதிக்கி ன்றன. இத்தகைய பரப்புரைகளின்போது பல்வேறு நீதி நூல்களின் வாயிலாகவும் நீதிக்கதைகள் மூலமும் அறக்க ருத்துக்கள் மக்களுக்குப் போதிக்கப்படுகின்றன. இஸ்லாமியர்களைப் பொறுத்தமட்டில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் பிரார்த்தனையின் பின்னர் 'குத்துபா' என்று சொல்லப்படுகின்ற சமயப் பரப்புரை



நிகழ்வானது இடம்பெறுகின்றது. இதன்போது இஸ்லாமியர்களுக்கு அறக்கருத்துக்களானவை போதிக்கப்படுகிறது. இதேபோல்பௌத்த ஆலயங்களில் பிரதி கிழமைதோறும் நிகழும் சமயப் பரப்புரைகளின் போதும் அந்தக் கருத்துக்களானது போதிக்கப்படுகின்றது. பௌத்த மதத்தின் மதக் கட்டளைகளாக சில பிரதான கட்டளைப் பிரிவுகள் காணப்படுகின்றன. பஞ்சசீலம், அட்டசீலம், தச்சசீலம், நல்ல செயல்வழிகள் மடலாயக்கட்டுப்பாடு. விதித்தொகுப்பு இவற்றுள் பரவலாகக் கடைப்பிடிக்கும் விதிகளின் திரட்டாக ஐந்து கட்டளைகள் விளங்குகின்றன.

தொடர்

தாஸ் மாஸ்ரர்



# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள் - 29

கொழும்பு நகரில் பொலிஸார், இராணுவம், கடற்படை, விமானப்படை எனப் பல பிரிவுகளால் திடீரென வாகனங்களும் மக்களும் சோதனைக்கு உட்படுத்துவதுண்டு. இவ்வாறு திடீரெனச் சோதனையிடப்படுவதால் புலிகளின் உறுப்பினர்கள் நினைத்த மாத்திரத்தில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குப் போகவோ அல்லது ஆயுதங்களைக் கடத்தவோ உட்படமாட்டார்கள். எதிர்பாராத நேரங்களில் எதிர்பாராத இடங்களில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது வெறும் தந்திரோபாய நடவடிக்கையே. இதில் கூட ஒரு நுட்பம் இருப்பதாக கொழும்பில் கைதான நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். உதாரணமாக நாம் பஸ்சில் பயணம் செய்யும்போது வான் அல்லது முச்சக்கர வண்டி அல்லது மோட்டார் சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டால் இனி வரவிருக்கும் சோதனைச் சாவடிகளில் பஸ்சை சோதிக்கப் போகிறார்கள் என அறிந்து அடுத்து வரும் பஸ் தரிப்பு இடத்தில் இறங்கி முதல் தரிப்பில் முச்சக்கர வண்டிகளைப் பரிசோதித்திருந்தால் அதன் பின் முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வது சோதனையிலிருந்து தப்பிக் கொள்வது இலகு. ஏனெனில் முச்சக்கர வண்டிகளைப் பரிசோதிக்கும் பொறுப்பு ஒரு குழுவினருக்கு மட்டும் தான் கொடுக்கப்பட்டிருக்கும். நாம் பயணம் செய்யும் வாகனம் ஒரு சோதனைச் சாவடியைத் தாண்டும்போது பரிசோதிக்காவிட்டால் இனிவரும் தரிப்புக்களில் மறிப்பார்கள் என்பது அர்த்தமாகும்.

□ □ □

புலனாய்வுப் பொலிஸார் சந்தேக நபர்கள் பற்றிய தகவல் கொடுப்பவர்களைப் பல இடங்களில் வைத்துள்ளார்கள். இதில் முதன்மையானவர்கள் முச்சக்கர வண்டிச் சாரதிகள். கொழும்பு நகரில் எல்லாச் சிறிய வீதிகளுக்கும் ஒவ்வொரு முச்சக்கரவண்டிச் சாரதி பொறுப்பாக இருப்பார். இவர் ஒரே இடத்தில் தொடர்ந்தும் தனது முச்சக்கர வண்டியை நிறுத்தி வைத்திருப்பதால் அங்கு வழமையாக குடியிருப்பவர்கள், புதிதாக வருபவர்களது விவரத்தைத் தெரிந்து வைத்திருப்பார். புதியவர்கள் யாராவது வீடு ஒன்றைத் தேடும்போதும், சிங்களம் பேசுவதில் தடக்கும்போதும் அவர்களை அவதானிக்கத் தொடங்குவார். இதன் பின் அந்த விவரத்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கின்றனர். இதைவிட ஒரு முச்சக்கர வண்டி ஒருவர் பின்னால் பின்தொடர்ந்தால் பின்தொடரப்படும் நபருக்குச் சந்தேகம் எழாது. இதனால், ஒரு நபரைத் தொடர்ந்து சென்று தகவல் அறியும் வாய்ப்பும் உண்டு. இவ்வாறான தகவல்கள் சேகரிப்போரின் நடவடிக்கைகள் அவர்களை ஒருவிதத்தில் தனித்துக் காட்டிக்கொடுக்கும் என்று இந்த விடயத்தைக் கூறிய நண்பர் தெளிவுபடுத்தினார்.

தமக்குப் பொலிஸ் தரப்பில் உள்ள ஆதரவை அல்லது அதன் பின்னணியை ஒரு முதலீடாக வைத்துச் சண்டித்தனப் பாணியிலும், மிரட்டுவதிலும் வீரப் பிரதாபங்களைக் காட்டுவதிலும் சிலர் ஈடுபடுகின்றனர். முச்சக்கர வண்டிச் சாரதிகளைவிட தபால்கந்தோர், நீர்வழங்கல் சபை, மின்சார சபை, தொலைபேசித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களத்தைச் சார்ந்தோர் எனப் பலரும் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எவரும் சந்தேகப்படாத வகையில் ஊடுருவித் தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்குவதில் இவர்கள் பெரும் பங்காற்றுகின்றனர்.

□ □ □

இவ்வாறான தகவல் சேகரிக்கும் முறைகள் எல்லாவற்றையும் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்பதை இலங்கை அரசின் புலனாய்வுப் பிரிவினர் புரிந்திருக்க வாய்ப்பில்லை. எங்கெல்லாம் தமக்கு அச்சுறுத்தல் இருக்கும் என்று புலிகளுக்கு எப்போதும் நன்கு தெரிந்திருக்கும். பொதுவாக விசாரணை நடத்துகின்றவர்களுக்கு வடக்குக் கிழக்குச் சூழலோ, தமிழ் மொழியோ தெரிந்திருக்கவில்லை. இதற்காக முஸ்லிம்கள் அல்லது புலிகள் இயக்கத்தில் இருந்து தப்பி ஓடிப் பொலிஸ் அல்லது இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், புலிகளுக்கெதிரான மாற்று இயக்கங்களைச் சார்ந்தவர்கள், மலையகத்தைச் சேர்ந்த சிங்களம் தெரிந்த தமிழர்கள் ஆகியோரில் தங்கியிருக்க வேண்டிய தேவை இருந்தது. இவ்வாறு பொலிஸார், இராணுவத்துக்கு உதவுபவர்களின் பெயர்கள் எல்லாச் சிறைச்சாலைகளிலும் கைதிகள் மத்தியில் ஆத்திரத்துடன் நினைவு கூறப்படுவதுண்டு. பலர் தம்மை விசாரித்த சிங்கள அதிகாரிகளில் ஆத்திரப்படுவதில்லை. அவர்கள் எதிரிகள் மட்டுமே. ஆனால் விசாரணைகளில் சம்பந்தப்பட்ட குறித்த முஸ்லிம்களோ, தமிழர்களோ துரோகிகள். அல்லது தேச விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானவர்கள். எனவே எப்படியாவது அவர்கள் கொல்லப்படவேண்டும் என்கிற வன்முறை மனநிலை கைதிகளிடம் இருந்தது. இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் வந்தால் கூட அவர்களின் உயிருக்கு உத்தரவாதத்தை எவரும் வழங்கமுடியாது. ஏனெனில், விசாரனைகளின்போது சிங்கள அதிகாரிகளை விட அவர்களுக்குத் தமது விசுவாசத்தை காட்ட நினைக்கும் இவ்வாறானவர்களே கூடுதலான சித்திரவதைகளைக் கைதிகளுக்குச் செய்துள்ளார்கள்.

□ □ □

தமிழ் அரசியல் கைதிகளில் 100 பேருக்கு இரண்டு அல்லது மூன்று பேர் நேரடியாக விடுதலைப்புலிகளின் அமைப்பில் அங்கத்தவர்களாக இருப்பர். இவர்கள் கைதாகின்ற நிலையில் சயனைட் குப்பிகளைக் கடித்த போதிலும் பொலிஸ் அல்லது இராணுவத்தால் பலவந்தமாகக் காப்பாற்றப்பட்டவர்கள். அல்லது சில தாக்குதல்களின்போது காயப்பட்டு, எதிர்பாராது கைதானவர்களாக இருப்பர். இவர்கள் இலங்கை அரசின் சட்ட திட்டங்களையோ, தண்டனைகளையோ பெரிதுபடுத்துவதில்லை. 'நாங்கள் மண்ணுக்காக எங்கள் உயிரை எப்போதே அர்ப்பணித்து விட்டோம். இந்த இலங்கை அரசின் கீழ்த்தரமான சட்டங்கள் எங்களை என்னதான் செய்துவிடப்போகின்றன' என்ற அலட்சியப்படுத்தலுடன் இருப்பார்கள். அவ்வாறானவர்கள் தமது உறவினர்களைக் கூட தம்மை வந்து பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. இவ்வாறு இருப்பவர்கள் மீண்டும் புலிகள் இயக்க வேலைத் திட்டங்களில் இணைய இருப்பதால் சிறையில் இருக்கும் காலப்பகுதி அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. இவ்வாறு வலிமையான மனம் உள்ளவர்களை பல வருடங்கள் சிறையில் அடைப்பதாலோ அல்லது விடுவிப்பதாலோ இலங்கை அரசு நினைத்தது நடக்கப்போவதில்லை. அவர்களின் இலக்கு ஒருமுகப்படுத்தப்பட்டிருப்பதால் ஏனைய கைதிகளுக்கு இருக்க கூடிய மன உளைச்சல்களோ வேறு பாதிப்புகளோ அவர்களுக்கு இல்லை என்பதை நான் அவதானித்து இருக்கிறேன். எனவே புலனாய்வுத் துறையினரால் கைதாகின்ற புலி உறுப்பினர்கள் எந்தவிதமான பின்னடைவும் இல்லாது மீண்டும் அதே மதிப்புடன் தமது பயணத்தைத் தொடர்கின்றனர். இலங்கை அரசின் நடவடிக்கையை 'நாய்கள் குரைக்கட்டும் ஒட்டகங்கள் தங்கள் பயணத்தைத் தொடரட்டும்' என்ற அராபியப் பழமொழியை ஒத்த வகையில் கருதிக் கொள்ளுகின்றனர்.


□ □ □

சில புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டவுடன் தமது நடவடிக்கைகளை முற்றாகவே மாற்றிவிடுகின்றனர். சிறையிலிருந்து வெளியேறியதும் வெளிநாடு செல்வதிலேயே கவனமாக இருக்கின்றனர். ஆனால், இயக்கத்தில் பற்றுறுதி கொண்ட பலர் தமது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் வெளிநாட்டில் இருந்தபோதிலும் அவர்கள் விடுதலையாகிப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்கின்றனர்.

□ □ □

தேசிய புலனாய்வு மையத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் என்னை விசாரணைக்கு உட்படுத்தினார். அப்போது ஒரு கட்டத்தில் நான் 'வவுனியா ஊடாக வன்னிக்குப் போவது சிரமமாக இருந்தது' என்றேன். அவர் உடனே கூறினார் 'ஏன்டா திருகோணமலையில் இருந்து கப்பல் சேவை இருப்பது தெரியாதா? திருகோணமலையில் ஏறி முல்லைத்தீவில் இறங்கியிருக்கலாமே' என்றார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்த நபர் இலங்கையைச் சேர்ந்தவர் தானா என்று யோசித்தேன். அருகில் இருந்த சாதாரண பொலிஸ்காரர்களோ சிரித்து விட்டார்கள். 1996ஆம் ஆண்டில் முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் தொடர்ந்தும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. புலிகளின் கடற்படை அணியினரின் ரோந்து நடவடிக்கைகள் வலுப்பெற்ற காலத்தில் திருகோணமலையில் ஏறி முல்லைத்தீவில் இறங்குவது சாத்தியமான செயலா? இது பற்றி மற்றையவர்கள் வாய் திறக்கவில்லை. நான் இந்த விடயத்தை விளங்கப்படுத்தினேன். உயரதிகாரிக்கு மிகவும் வெட்கமாகப் போய் விட்டது. ' சரி சரி அதை விடு' என்றார். அவர் அதற்கு மேல் என்னுடைய முகத்தைப் பார்த்து விசாரிக்கும் ஓர்மத்தை இழந்திருந்தார்.

அவர் சென்றதன் பின் ஏனைய விசாரணையாளர்கள் கூறினார்கள் 'பார்த்தீர்களா எங்கள் உயர் அதிகாரியின் புத்திக் கூர்மையை சும்மா பத்திரிகைச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்துவிட்டு நாங்கள் கைது செய்வர்களிடம் கேள்வி கேட்கிறார்களே தவிர இவர்களால் எவரையும் கைது செய்ய முடிவதில்லை' என்றனர். ஆரசியல் செல்வாக்கினால் பதவியை மட்டும் உயர்த்தியுள்ளார்கள் என்றார் மற்றொருவர்.



(தொடரும்)

# அதியயர் காண்டத்து மேடைகள்



மேடை - 12

தையிட்டி அ.இராசதுரை

கரடியார் கட்டியிருந்த சாரத்தையும் உரிந்து விழப்பண்ணிக் கரடியாரிடமும் அந்தளவு ஏச்சுப் பேச்சுக்களையும் திட்டுக் கொட்டுகளையும் வாங்கிக் கட்டிக் கொண்ட அதே ரைகர்தான்... நன்றியின் மேன்மைகொள் உதாரணமான அதே ரைகர்தான் இராத்திரிய அந்தப் பொல்லாத நடுச்சாமநேர சந்தடியோடு அந்தளவு பலமான கழுத்துக்கொடியையும் உன்னியிழுத்தறுத்துக் கொண்டே இனிவரத்தில்லையென்ற கணக்காய் இன்னடமென்றில்லாமலுக்கு ஓடிப்பறந்துவிட்டந்த ஒரு பிள்ளை நிகர் வெள்ளைத் தங்கச்சி மாட்டை... தன்னுடைய மோப்ப சக்தியினால் தேடிப் பிடித்து இந்த 'வெள்ளை தங்கச்சி' எங்களுடையதுதானென்ற உறுதிப்பாட்டோடு அதன் சொந்த இருப்பிடத்துக்கு வலு பக்குவமாய்க் கூட்டி வந்து விட்ட விதத்தை, புதினத்தை, அற்புதத்தை...

ஒரு கொஞ்சமும்தான்... மனம் சளைக்காமல் களைக்காமல் மாட்டுப்பழி பாவங்களையெல்லாம் செய்து குவித்து வைத்திருக்குமிந்தக் கரடியார் பாவங்களையெல்லாம் செய்து குவித்து வைத்திருக்குமிந்தக் கரடியார் நெற்றி முட்டாய்த்தான் பார்க்க வேண்டிவந்ததும் வந்த சலிப்புக்கு சத்தம் வைத்துக் குளறி அழத் தொடங்கியும் விடுகின்றாரே...! எந்தக் கவலையா்ன செத்தவீடுகளிலும் தான் யாராவது கூர்ந்து பார்த்தும் கொண்ட மனோன் மணியார் நெஞ்சமுருகிக் கண்கள் கலங்கி தங்களுடைய மாட்டை அந்தக் கோகுலத்து மாட்டிடையர் கூட்டத்துக் கோபாலக் கண்ணனாய்க் காத்துப் போத்து ரைகரின் உருவில் கூட்டிவந்து விட்டமைக்காக இறைவனுக்கு நன்றி சொல்லிப் பாவமன்னிப்பும் கேட்டுக் கொண்டே அந்தப் பயணகாரரைப் பார்க்கும் அவதியோடு மாட்டடிப் பக்கமாய் போயும் விடுகின்றார்.

+ + + + +

எந்தப் பாவம் பழிக்குமஞ்சாத இந்தக் கரடியார் எதுவும் தனக்கத் தனக்குதான் வரும்போது தெரியுமென்ற நேச்சரில் இப்பொழுது நோ வலிப்பு வேதனைகளென்றால் அதுகள் இப்படித்தானிருக்க வேண்டுமென்றும் 'அந்த நேரத்துக்கு மட்டும்' அதிகமாய் வொறி பண்ணிக் குளறியழுதும் படமோடிக் காட்டியும் விட்டும் பேந்தடுத்த நேரம் பழைய குருடி கெதியாய்க் கதவைத் திறவடி ஸ்ற்றோறிக்கும் குவிக்காய்ப் போய்விடவும்தான் கூடியவர். ஒரு சலிப்புக்காரின் வீட்டுக்குப் போவது போல் மாட்டடிக்குப் போனதும் 'ம்மா' என்று சத்தம் வைத்தும் கூப்பிட்டும் விடுகின்றது. இந்தக் கரடியாரின் கைகள், பாவம் பழி செய்த கைகளாய்த் தானிருந்தாலும் அந்த அதே கைகளினால் தினசரியாய் தீன் தண்ணி, தவிடு, பிண்ணாக்கு யிலும் தட்டித் தடவியும் விட ரைகரின் வால் என்ன சித்திரமாய் ஆடத் தொடங்கியும் விடக் கரடியார் தமது லேற்கஸ்ற் அனுபவத்தின் முழுத்தமாய் சாரத்தையும் இறுக்கி வரிந்து கட்டி சண்டிக்கட்டும் கட்டிக் கொண்டார். ('ரைகர்' என்று கூப்பிடப் பயந்து...) " பண்டா! பண்டா! என்று ரைகருக்குப் புதிய பெயர் சூட்டியதும் பண்டாவைத் தூக்கி அண்டாவுக்குள் போட்டும்விட்ட கணக்காய் ரைகரின் வாலாட்டமும் 'STOP' ஆகியேவிடுகின்றது. "வாடா ரைகர் வீட்டை போவம்" என்று மனோன்மணியார் பிள்ளையைக் கூப்பிடுமாப்போல் செல்லங்கொஞ்சி ரைகரைக் கூப்பிட்டதும் வாள்விசுக்கு போன்ற வால் விசுக்கோடு மனோன்மணியாரை FOLLOW பண்ணியபடியே ரைகர் வீட்டுக்குள் போனதும் ஆமிக்காரர் அள்ளிக் கொடுத்த ஆமியில் கற்கள் அமந்தறையாய்க் கிடைத்தும் விடுகின்றன.


+ + + + +

நேரமும் இருள ஆயித்துமென்றவுடன் கரடியாரும் இந்த இப்பவே நாலாபக்கமும் பார்த்துப் பார்த்து மிரண்டு வெருண்டு முழிசித் தழிசவும் தொடங்கியும் விடுகின்றார்... இந்தப் பயமென்றாலென்ன... ஒரு பயம் இரண்டு பயமா ஆள்களும் வெளிச்சங்களும் வாகனோட்டங்களின் சத்தஞ் சஞ்சடிகளும் கோவில் மணியோசைகளும் அடிஅத்தமானமாய் அற்றொழிந்து போய்விட்ட இந்த இருண்ட ஆபிரிக்காகக் கண்டத்துக் காடு பற்றிப் போயிருக்குமிந்த என்னம்பொரு காண்டத்தில் பேய்ப் பயம்... தாம் வளர்க்கும் டோக்கின் பேர் வழியிலுள்ளவர்களைத் தொட்ட பயம். இந்த இப்பவுள்ள சீருக்கு ஆட்களை விழுங்கக் கூடிய மலைப்பாம்புகளும் உண்மையான கரடி, புலி, யானைகளும் தான். வந்துவிட்டாலுமென்ற பயம்... இண்டைக்கிந்த எத்தனை வகையான பயங்களுக்கெல்லாம் பயந்து பயந்து கெடிமண்டி ஒவ்வொரு நாளும் தான். இரவிரவாய்ச் செத்துச் செத்துப் பொழுது காழிக்கிற நேரமுயிர்த்து என்றெல்லாமிந்தக் கரடியாரின் படுபயச் சிந்தனைகள், OVER FLOW பண்ணி விடத் தொடங்கி விதம்விதமான பயத்தம் பணியாரங்களையெல்லாம் சுட்டடிக்கிக் கொண்டிருக்க கரடியாரின் மனைவியார் கரடியாரின் கண்ணில் படாதபடிக்குப் பக்குவமாய்ப் பதுக்கி வைத்திருந்த செல்போன், மியூசிக் போடத் தொடங்கியும் விடுகின்றது.

+ + + + +

இந்தப் பொல்லாத பயக் குளிர் விறைப்பிலும் நல்ல ஆவி பறக்கும் சூடான இரண்டு மூன்று கப், அங்கர், அண்ணா கோப்பியும் றோலும் அடித்து விட்டாற் போல் கரடியார் LITTLE HOUSE சின் கடுமுளலையில் உளன்றாடி அவதிப்பட இதிந்த நாச்சியார் 'கோல்' தானென்ற ஒரு பொலிஸ்கார எச்சரிக்கையோடு கரடியார்க் கணவரை செல்போனிலும் முட்டவும்தான் விடக்கூடாதென்ற ஓர் உண்மையான மனைவியின் உச்சநிலை அதிகாரமிடுக்கோடு ஒரு கொஞ்சம் றாங்கியாக்க் 'ஹலோ' என்று கூப்பிட்டு மனோன்மணியார் கோலை ஒப்பின் பண்ணியும் விடுகின்றார்.

அந்தக் கோலின் ரூட் நினைத்ததுக்கு எதிர் மாறாய் கதைக்கச் சொல்லி மனோன்மணியார் செல்போனை நீட்டியதும் கரடியாரின் வாய் இஞ்சி தின்ற குரங்காய்...??



கட்டியழுதாலும் கூட... அழத் தெரியாதது மாதிரியாய்ச் சிரிப்பதுபோல் நின்று கொண்டிருக்குமிந்தக் கரடியார் மனின் இன்றைக்கிந்த வெள்ளைத்தங்கசி மாடும் ரைகரும் கூடி வந்துவிட்டநப் பவனியைப் பார்த்துவிட்டு ஏதோ செல் லிச்சொல்லிக் குளறியழுதுவிட்ட காட்சா னது தொட்டது தொட்டதற்கெல்ல ம் பெண்களுக்கே உரித்தான கண் ீர் விட்டுக் காட்டும்மனோன்மணியாருக் நப் பெரிய சிரிப்புச் சிரிப்பாலே வந்தும் டு கின்றது. இந்த எங்கள் 'மாடு' போலத்த ன் அடுத்தவர்கள் 'மாடும்' எங்கள் பிள் ள போலத்தான் அடுத்தவர்கள் பிள்ள க ளும்.

தண்ணீர் விடாயில் நம்பித் தண்ணீர் வாங்கிக் குடிக்க வந்த அந்தக் கோமாதாத் தெய்வங்களுக்குத் தமது கணவர் செய்து விட்ட துரோகங்களையெல்லாம் இந்தத் தக்க சமயத்தில் கூர்மையாக நினைவு இன்ன பிறவனவற்றையும் வாங்கி வாங்கிப் புசித்தக் கொண்ட பழக்கத்துக்கு இந்தக் கோமாதாத் தங்கச்சி ஒரு சந்தோசத்தில் சாணியும் போட்டுச் சலமும் குடக்கணக்காய் விடத் தொடங்க அந்தப் புண்ணிய தீர்த்தத்தைப் பூமாதேவி ஏந்திக் குடித்தும் கொண்டாளே! இந்த எஜமான் கரடியார் தன்னை 'தாவி நரகாலி' என்று திட்டிக் கொண்டே தோகமும் கழுவுப்பட்டுமென்று தானிந்தக் கெட்டிக்கார ரைகரும் MEEN பண்ணியதோ என்னவோ வெள்ளைத் தங்கச்சியின் பின்பக்கமாய்க் குந்தியிருந்து கொண்டிருந்தபோதும் மாட்டுச்சலம், பன்பலாய் மேல்முழுவதிலும் தெறித்தடத்திலும்தான் அந்தடத்தை விட்டு ஒரேப்பனும்தான் அரக்கவில்லை. தன்னுடைய மாட்டின் பாரிய 'தத்துக்' கழிந்து போன சந்தோசத்தோடு ஆறுதலோடு அதன் மடியைத் தடவிவிட்டு ரைகரைப் பாராட்டி வாழ்த்துவதுபோல் அதன் தலை

(தொடரும்)

## காலை வணக்கம்



எப்படி அனுப்புவது இந்தக்
காலை வணக்கத்தை
வைபர், வட்சாப், ஈ மெயில் எல்லாம்
இருக்கின்றன

தொடர்புகளைத் துண்டித்து
ஆதி கால மனுசியாகி இருக்கிறாய்
நீண்ட கடல் சூழ்ந்த தீவாகிறாய்

நான் ஒரு பறவையைப் பழக்கியிருக்கலாம்
என் பிரியத்தைச் சிறகினால்
பொத்தி வந்து கொடுத்திருக்கும்.

உயரத்தில் ஏறி நின்று உரக்கச் சொல்லிவிடவா
காற்றுக் காவி வரும் வார்த்தைகளுக்கு
வயதாகி விடாதா!


மேகத்தில் எழுதி விடலாம்
ஓடும் ஆயிரம் மேகங்களில்
எப்படிக் கண்டு கொள்வாய் இந்தத் துண்டு
மேகத்தை

என் சின்னப்பெண்ணே!
உனக்கான வணக்கம் இது
ஒவ்வோர் எழுத்திலும் இருக்கிற
அன்பின் ஈரம் காயும் முன்
இதைச் சொல்லி விடவேண்டும்

நீள நினைக்கிற நினைவின் கை நீட்டி
உன்னைத் தொடுகிறேன்


இப்போது சொல்கிறேன்
இனிய காலை வணக்கம்

■ வேலணையூர் தாஸ்



சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்



# உழைத்து வாழ வேண்டும்

எங்கேபோவதென்று புரியவில்லை கால்கள் போன போக்கில் நடைபயின்றேன். கட்டியவன் ஏறுமாறாக நடந்தால் கூறாமற்சன்னியாசம் கொள்ளலாம். இவளப்படி ஒன்றும்ஏறுமாறாக நடக்கவில்லை. தாறுமாறாகத்திட்டிவிட்டாள். அத்துடன் விட்டாளா! வீட்டைவிட்டே விரட்டிவிட்டாள் சண்டாளி கையிலும் சட்டைப்பையிலும் கொஞ்சக் காசிருக்கின்றதுதான்.

அதைவைத்து ஹோநாட்டலில் சாப்பிடமுடியுமா! எங்கேயாவது அன்னதான மடங்கள் , கோயில்கள், கல்யாண மண்டபங்களைத் தேடிப் புடிக்க வேண்டியது தான். பார்ப்போம் கல்லினுட்தேரைக்கும் கருப்பையிலிருக்கும் சிசுவுக்கும் சாப்பாடு கொடுக்கின்ற இறைவன் எனக்கு மட்டும் தராமல் விடுவாரா? தருவார். நம்பிக்கை மனத்தில் வச்சிரமாக ஒட்டியது.

நானும்தான் என்ன செய்ய! என்னால் ஊன்றி ஒருவேலைவெட்டி செய்ய முடியவில்லை. எப்போதாவது ஏதேனும் தரகு தம்பட்டம், கொமிஷன் வேலைகள் அகப்பட்டால் ஐந்தாறு நாள்கள் குருச்சந்திரயோகம்தான். தவறினால் தந்தனாத்தான் , உழைப்புப் பிழைப்பில்லை. யென்றுதான் எனது மனைவி என்னை வீட்டைவிட்டுச் சொறிநாயைக் கலைத்துவிட்டதுபோல ஒரேயடியாக விரட்டிவிட்டாள். அவளும்டிதான் பாவம் என்ன செய்வாள்! நானும்தான் பாவம்! என்ன செய்வேன். மனைவி யோகேஸ்வரியைத் திருமணம் செய்யும் போது அவளுடன் யோகமும் சேர்ந்து வருமென்று பார்த்தேன் ஆனால் வந்ததோ யோகமல்ல சாபம்தான்.

\+ \+ \+ \+ \+ \+

நடந்து கொண்டிருந்தேன். ஊரெல்லையைத் தாண்டி இப்போது பரீட்சயமற்ற ஒரு சூனியப்பிரதேசத்தில் மிலாந்தியபடி நின்றேன்.

காலைச்சாப்பட்டைச் சாப்பிடாட்டிலும் ஓரளவு சமாளிக்கலாம் இந்த மத்தியானச்சாப்பாட்டுக்குத்தான் தவண்டையடிக்கப் போகிறன். ஏதோபாப்பம்"

நினைத்தபடி தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தேன் எல்லாருக்கும் ஒரு சாண் வயிற்றைப்படைத்த இறைவன், எனக்குமட்டும் மூன்று சாண்களில் வயிற்றைப் படைத்து விட்டானே! நான் சாப்பிடும் சாப்பாட்டினவைப் பார்த்து இது இரைப்பையா? அல்லது உரைப்பையா? என்று எல்லோரும் கேட்கின்றார்கள் உண்மைதான் இந்த உலகத்தில் எனக்குத்தான் மிகப்பெரிய இரைப்பையாக விருக்குமோ! பிரம்மனைத்தான் கேட்கவேண்டும்.

அடடா! அதோ ஒரு கோயில்! ஏதோ விசேஷம் போல் தெரிந்தது. அடியவர்கள் அணிவகுத்துப்போய்க் கொண்டிருந்தார்கள் அடியவருடன் அடியவனாக நானும்சேர்ந்து கொண்டென். தில்லைவாழந்தனர்தம் அடியார்க்குமடியேன் திரு நீலகண்டத்து குயவனார்க்குமடியேன்" என்னையுமறியாது உதடுகள் தேவாரத்தை முணுமுணுத்தன.

அது ஒரு பிள்ளைார் கோயிலாம் பத்துநாள் திருவிழாவாம் பத்து நாளும் அன்னதானமாம்.

விடயத்தைக் கேள்விப்பட்டதும் முதல் வேலையாக நெற்றியில் மூன்று முறைகள் குட்டித் தோப்புக்கரணம் போட்டு அந்தப்பிள்ளையாரை மானசீகமாக வணங்கியதுடன் நன்றியும் தெரிவித்துவிட்டேன்.

பென்னம்பெரிய தாமரை இலையில் யாரோ ஒரு புண்ணியவானால் ஊர் அரிசிச் சோற்றைக் கொண்டுவந்து எனக்கு முன்னிலையில் படைத்துவிட்டான். நாலுகறி. பப்படம் பெரியல் என்று அமர்க்களமான சாப்பாடு.

இப்படியே பத்து நாள்களையும் திருப்தியாக ஓட்டியாயிற்று. படுப்பதற்கு விக்னேஸ்வரா வாசிகசாலையின் வெளிவிறாந்தை மந்தைகளுடன், மனிதமந்தையாக அவைகளுடன் கூட்டணியமைத்துப் படுத்துக்கொள்வேன். சில நாள்களில் சண்முகம் சைக்கிள் கடைத் தாழ்வாரமும் கை கொடுக்கும். வாசிகசாலையில் பத்திரிகை படிப்பதையும் வழக்கமாக்கிக்கொண்டேன் அரசியல் கைதிகள் விடுவிப்போ, அரசமைப்பு விடயங்களோ, அல்லது அரசின் தின்குத்துக்கரணங்களோ! இவைகளில் படிப்பதில்லை அந்தியேட்டி, கல்யாணம், பிறந்த தினம், சாமத்தியம் என எங்கேயாவதிருந்தால் அழையாவிருந்தாளியாக அவைகளில் பங்குபற்றிக் கொள்வதற்கு அவைகளைத் தேடிப்ப படிப்பேன். சும்மா சொல்லக் கூடாது எதுவித விக்கினங்களுமின்றி என்னுடைய வயித்தீஸ்வரனுக்கு அன்னதானப் பூசைகள் கிரமமாக நடந்து கொண்டேயிருந்தன. இருந்தும் இரண்டோருதடவைகள் அழையாவிருந்தாளிய ாகச் சென்று மண்டபங்களில் சங்கடப் பட்டு மிருக்கின்றேன்.

என்னினும் எது வித பிடிபாடுகளுமின்றி இனறுவரை தப்பிக்கொண்டிருக்கின்றேன் என்று பார்க்க, பாருங்கள்! வந்த வாழ்மானத்தை!

பொன்னியரிசிச் .சோறு நாலுகறிவகைகள், பப்படம், பொரியல், வடை! ஒன்றுக்கு இரண்டு இவ்வாறு வெள்ளித் தட்டில் இட்டு ஓர் ஒதுக்குப்புறத்திலிருந்து நானும் என்னுடைய சோறும் என்ற வகையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதுதான் இப்படியொரு இடியேறு:

"ஹலோ! உங்களைத் தெரியயில்லை"

" இவன் ஆரடா சிவபூசைக் கரடி மாதிரிக் குழம்புறான்"

மனம் சொல்லிக்கொள்ள உடல் 'ரைப்' அடித்தது

புரைக்கேறிவிட்டது போல் நடித்து, தண்ணீரைக் குடித்து "தாஜா" பண்ணிப்பார்த்தும் அவன் விடுவதா யில்லை.

"நா....ன் வந்து.....மாப்.... பிள்ளை யின்ரை ஒண்டைவிட்ட மாமா பாருங்கோ"

" மாப்பிளையோ! ஆர் மாப்பிளை! இது சாமத்திய வீடெல்லோ! ஆரைப் போய்க் காட்டுறாய்! உன்னை உப்புடிக் கன மண்டபங்களிலை கண்டிருக்கிறன் விடாதை வண்டில் ""

தாடிக்காரன் அடிக்கவந்தான். அடுத்தவன் தடுத்தான். இயந்திர கெதியில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்திருக்கலாமென்று பார்த்தால்

" ஏய் உந்த உடம்பை வைச்சுக் கொண்டு என்ன கேவலமான பிழைப்பு உதைவிடப் போய்ப் பிச்சையெடு

" ஐயோ அவசரத்தில் வந்தபடியால் கலியாண வீடும் தெரியயில்லை. சாமத்தியவீடும் தெரியயில்லை. அம்பிட்டிட்டன் மானம் பறந்தது. வேண்டாமிந்தக் கேவலம்கெட்ட வாழ்க்கை. இப்படி மரியாதை கெட்ட சாப்பாடு உடம்பிலையும் ஒட்டாது. இனி யென்டாலும் மற்றவை மாதிரி உடம்பை வருத்தி உழைச்சுச் சாப்பிடுவம் வேண்டாமிந்தக் கோணல்புத்தி எண்ணியபடி

**ஐயோ அவசரத்தில் வந்தபடியால் கலியாண வீடும் தெரியயில்லை. சாமத்தியவீடும் தெரியயில்லை. அம்பிட்டிட்டன் மானம் பறந்தது. வேண்டா மிந்தக் கேவலம்கெட்ட வாழ்க்கை இப்படி மரியாதை கெட்ட சாப்பாடு உடம்பிலையும் ஒட்டாது இனி.**

அவர்களின் முகங்களைப் பார்க்கவே திராணியற்ற நிலையில் நாலுபடிகளை ஒரு தடவையிலே, கடந்து, குதித்து வீழ்ந்து..... பொன்மூக்குடைந்து குருதி வழிய வழிய ஓடுகின்றேன். உழைப்பதற்கு இனிமேல் உழைத்துத்தான்சாப்பிடுவேன்.

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

மனிதன் படைத்த மொழி
மனிதத்தையே மாற்றியமைத்த மொழி
ஆதி அந்தமில்லாத மொழி
ஆயிரங்களிலும் மிளிர்கின்ற எம் மொழி

கம்பன் வளர்த்த மொழி
கம்பனையும் வளர்த்த மொழி
பழந்தமிழ் மரபுக் கூறுகளைக் கண்டு
பரவசம் கொள்ளும் கூறின் எச்சங்களாய்

ஏடுகளில் தேடிப் பெற்ற மொழி- இனத்தை
ஏற்றி வைக்கும் தீப ஒளி
உச்சரிப்பாய் வியாபார நோக்கில் நீ
எச்சரிக்கை எரித்திடும் அக்கினித் தீ

அகமும் புறமுமாய் வாழ்வை வகுத்த மொழி
அந்நியனையும் உறவாக்க வழிசமைத்த மொழி
உயர்வுகளின் உச்சிதனில் வேரிட்ட மொழி
உ(எ)ன்னையும் கவி படைக்க ஈந்திட்ட மொழி



கவிதை

ர.ரவிச்சந்திரன்



# ட்ரம்பின் பிடிவாதம் ஆபத்தானது!

சிரியாவிலிருந்து அமெரிக்கச் சிப்பாய்களைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் அதிபர் ட்ரம்ப் காட்டும் பிடிவாதம், அதிர்ச்சியளிக்கிறது. ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக உலக நாடுகள் தொடுத்துள்ள தாக்குதலை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கை இது என்று அமெரிக்காவின் தோழமை நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன. ட்ரம்பின் நடவடிக்கையின் எதிரொலியாக அமெரிக்க இராணுவத் துறை அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் பதவி விலகியிருக்கிறார். இத்தனைக்குப் பிறகும், தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள ட்ரம்ப் தயாராக இல்லை. தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்ததன் அடிப்படையில், வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத்தைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்.

**சிரியாவில் இன்னமும் சிக்கல் உள்ளது**

"சிரியாவில் ஐ.எஸ் ஆதிக்கத்தின் கட்டமைப்பை முற்றாக இல்லாமலாக்கியாகிற்று. இனி எஞ்சியுள்ள ஆயுததாரிகளை சிரியா அரசும் அதை ஆதரிப்பவர்களும் ஒடுக்குவார்கள்" என்று தனது செயலுக்குக் காரணம் கூறுகிறார் ட்ரம்ப். சிரியா அரசுக்கு ரஷ்யாவும் ஈரானும் ஆதரவாளர்கள் என்பது கவனிக்கத்தக்கது. மேலோட்டமாகப் பார்க்கும்போது ட்ரம்ப் சொல்வதில் உண்மையும், இராணுவ உத்தியும் இருக்கிறது. சிரியாவில் ஆதிக்கம் செலுத்திவந்த ஐ.எஸ் தன் வசமிருந்த பகுதிகளில் 95வீதத்தை இழந்துவிட்டது. ஈராக் சிரியா எல்லையை ஒட்டிய சிறு பகுதியில்தான் அது இப்போது ஒட்டிக்கொண்டிருக்கிறது.

எனினும், சிரியாவில் இன்னமும் நிலைமை மிகவும் சிக்கலாகத்தான் இருக்கிறது.

**துருக்கி விரும்பாத பின்னணி**

சிரியாவில் 2ஆயிரம் அமெரிக்கச் சிப்பாய்கள் உள்ளனர். அவர்களும் களத்தில் நேரடியாகச் சண்டையிடுவதில்லை. குர்து இனத்தைச் சேர்ந்த போராளிகளைக் கொண்ட சிரியாவின் ஜனநாயகப் படைக்கு ஆதரவாக அவர்கள் உள்ளனர். குர்துகளுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதை ஆரம்பம் முதலே துருக்கி விரும்பவில்லை. துருக்கி இராணுவத்துக்கு எதிராகச் சுயாட்சிக்காகப் போராடிவரும் 'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' என்ற அமைப்பின் நீட்சிதான் சிரியா ஜனநாயகப் படை என்று துருக்கி அரசு சந்தேகிக்கிறது. குர்துகள் இப்படி இராணுவரீதியாக வலுப்பெறுவதைத் துருக்கி அறவே விரும்பவில்லை.

அமெரிக்கத் துருப்புகள் முற்றாக விலக்கப்பட்டு விட்டால் துருக்கியப் படையின் கடும் தாக்குதல்களைக் குர்துகள் எதிர்கொள்ளும் ஆபத்து இருக்கிறது. அப்படியொரு நிலை வரும்போது குர்துகள் ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரை நிறுத்திக்கொண்டு, துருக்கி இராணுவத்துக்கு எதிராகப் போர் நடத்த நேரும். இது ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரைத் திசைதிருப்புவதுடன் நீர்த்தும்போகச் செய்துவிடும்.

**அமெரிக்காவின் அவசரம்**

ஐ.எஸ் முற்றாக ஒடுக்கப்படும் வரை காத்திருந்துவிட்டு அமெரிக்கா இந்த முடிவை எடுத்திருக்கலாம். அதேபோல குர்துகள் மீது துருக்கி இராணுவம் தாக்குதல் நடத்தாது என்ற உறுதிமொழியையும் கேட்டுப் பெற்ற பிறகு இதை அறிவித்திருக்கலாம். அமெரிக்க அரசின் முடிவால் வட கிழக்குச் சிரியாவில் இது ஆபத்தான வெற்றிடத்தை ஏற்படுத்திவிடும். தனது அயலுறவுக் கொள்கையால் அமெரிக்காவுக்குள்ளும் அமெரிக்காவுக்கு வெளியிலும் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுவரும் ட்ரம்ப், எந்த நிலையிலும் கள நிலவரங்களின் அடிப்படையில் செயல்பட முன்வருவதில்லை. அவரது இந்த நிலைப்பாடு மேற்காசியாவில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதில் சந்தேகமில்லை!

நன்றி: ஹிந்து

## சொற்சிலம்பம் போட்டி இல: 552

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | | 8 | | |
| | | 9 | | 10 | | | 11 |
| 12 | | | | | | 13 | |
| | | 14 | 15 | | 16 | | |
| | 17 | | | | | | 18 |
| 19 | | | | | | 20 | |
| 21 | | | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:......................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..............................................................
கையொப்பம்:...................................................

**இடமிருந்து வலம்**

1. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
7. அரசன்
8. விழி
9. காடு
12. புனித இடம்
13. உடை
14. பிரசாரப் பேச்சு
13. பயிரோடு வளரும் வேண்டாத தாவரம்
17. நிறைதல்
19. தாழ்ப்பம்
20. ஒரு பாத்திரம்
21. பழங்கால ஆயுதம்
22. பத்துக்கு அடுத்தது

**மேலிருந்து கீழ்**

1. கர்ப்பம் தரித்து ஆறாம் மாதம் செய்யும் சடங்கு.
2. பொன் அல்ல.
3. பெண்கள் சூடும் மாலை இப்பூவினால் கட்டுவர்.
4. சிறிய.
5. விடாய்.
6. மனிதன் ஆசை வைக்கும் பொருள்களுள் ஒன்று
10. வயிற்றில் குழந்தையைச் சுமப்பவள்
11. பதில்.
13. வட்டத்தின் பரிதிக்கும் மையத்துக்கும் இடையில் உள்ள தூரம்.
15. 35 குடிவகை
16. ஆடு, மாடு மேய்வது இதை.
17. உங்களையே விடாது தொடர்வது.
18. ஆண் பன்றி.
19. வெப்பத்தால் நீர் மாறுவது இப்படி.
20. விண்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர்மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 550 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சகுந்தலை (5) குதி (7) மறி (8) கலாரசிகை (10) தடு (11) கனி (12) துகள் (13)களை (15) வள்ளுவர் (17) தர (18) படிப்பகம் (20) ஆடி (21) பண் (22) ஓசை (23) அம்புஜம்.

**மேலிருந்து கீழ்**

(1) சமத்துவம் (2) குறி (3) தகடு (4) லைலா (5) குசுனி (6) திகை(9) ரகளை (10) தள்ளுபடி (13) கர்ப்பம் (14) ஆரம்பம் (16) படி (17) தக (19) பண்பு (20) ஆசை.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 550இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
திலகவதி இராமசாமி,
விமானநிலையவீதி,
வளலாய்.

**2 ஆம் பரிசு**
நா.ஆதவன்,
இலுப்பையடி வீதி.
மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
ஸ்ரீ கிருஷாந்தி,
உமாபதி சிவம்,
இல.18,வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
ப.செல்லத்துரை,
புலோலி தென்மேற்கு,
சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
ச.லிங்கமூர்த்தி,
அமெரிக்கன் மிஷன்,
பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

க.தில்லை,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

மு.ஜெயமுரளி,
மடத்தடி, பலாலி வீதி,
உரும்பிராய்.

**சொற்சிலம்பம் போட்டி இல.550**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (19.12.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.552 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.12.2018ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 552 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# 2018 உலக சினிமா

## சிறிய பார்வை



இந்த ஆண்டு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வெவ்வேறு மொழிகளில் ஏராளமான திரைப்படங்கள் வெளிவந்தாலும் உலக சினிமா இரசிகர்களைக் கவர்ந்த படங்கள் என்று சிலவற்றைத்தான் சொல்லமுடியும். உலகின் பல்வேறு திரைவிழாக்களில் பங்கேற்று ஏராளமான விருதுகளை பெற்றால்தான் சிறந்த படமா? ஆஸ்கர் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டால்தான் முக்கிய சினிமாவா என்றெல்லாம் ஆதங்கம் எழுகிறது என்றாலும் உலக சினிமா என்ற வரலாற்றுத் தடத்தில் இடம்பெற்ற தகுதிவாய்ந்த புதிய படங்களைப் பற்றி இங்கு பேசித்தான் ஆக வேண்டும். புகழ்பற்ற இயக்குநர்களின் சில படங்களை இங்கு பார்ப்போம். கொரிய இயக்குநர் கிம் கி டுக், துருக்கிய இயக்குநர் நூரே பில்கே செலான், ஈரானிய இயக்குநர் ஜாபர் பனாஹி ஆகியோரின் படங்கள் இந்த ஆண்டு மிகப்பெரிய எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தின.



கிம் கி டுக் இயக்கிய ஹியூமன், ஸ்பேஸ், டைம் அன்ட் ஹியூமன் திரைப்படத்தில் ஒரு காட்சி

### ஹியூமன், ஸ்பேஸ், டைம் அன்ட் ஹியூமன்

சமீப வருடங்களாகப் பலகோடி இரசிகர்களை தன்படங்களைப்பற்றிப் பேசவைத்த தென்கொரிய இயக்குநர் கிம் கி டுக் இயக்கிய புதிய படம் ஹியூமன், ஸ்பேஸ், டைம் அன்ட் ஹியூமன் (Human, space, time, time and human). அவரது முந்தைய படங்களுக்கே உண்டான புதுமையும் அதிர்ச்சியும் மிக்க ஒரு வினோதமான கதை இதிலும் உண்டு.

இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட ஒரு போர்க் கப்பலில் பலதரப்பட்ட மக்கள் உல்லாசச் சுற்றுலா செல்பவர்களின் பயணம் எவ்வளவு வித்தியாசமாக, எதிர்பாராத அனுபவங்கள் உணர்வுகளுக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதை ஒருநவீன ஓவியம்போல கிம் கிடுக் இந்தப் படத்தில் தீட்டிக்காட்டியுள்ளார். தனது முந்தைய படங்களுக்குப் பெருமளவில் விருதுகளைப் பெற்றதைப்போல் இந்தப் புதிய படம் விருதுகள் எதையும் பெறவில்லையெனறாலும் 'கிம் கி டுக்' படங்களின் மீதான காதல், அனைத்துலக சினிமா இரசிகர்களுக்கும் இன்னும் ஒரு போதையாகவே இருப்பதைக் காணமுடிகிறது. இது தொடர்ந்து புதுமைகளைச் செய்துகொண்டே இருக்கும்

## ஒஸ்கர் போட்டிக்கு செல்லும் 'யோமிடைன்'

சினிமா உலகின் பெருமைக்குரிய விருதாகக் கருதப்படும் 'ஒஸ்கர்' விருதுக்குப் பரிந்துரைக்கப்படும்போதும் ஒரு படம் உலக சினிமா இரசிகர்களின் கவனத்தை ஈர்த்துவிடுகிறது.

'யோமிடைன்' என்பது அரபி மொழியில் தீர்ப்பு வழங்கப்படும் நாள் என்று பொருள். கதையின் நாயகன் பெயர் பேஸ்ஹே. எகிப்து நாட்டில் நடக்கும் கதையாகும்.

பேஸ்ஹே தொழுநோயால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர். சிறுவயதில் இருந்தே தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் பகுதியில் பேஸ்ஹே இருந்தவர்.

தனது மனைவி மறைவுக்குப்பின் அந்த இடத்தில் வாழ பேஸ்ஹேவுக்கு பிடிக்கவில்லை, இழந்த தனது குடும்பத்தினரைச் சந்திக்கப் புறப்படுகிறார். ஒரு கழுதை பூட்டப்பட்ட வண்டியில் தன்னுடைய பொருள்களை எடுத்துக்கொண்டு வேறு இடம் நோக்கி முதல்முறையாகப் புறப்படுகிறார். அப்போது ஒபாமா என்ற ஆதரவற்றச் சிறுவன் பேஸ்ஹேவுடன் சேர்கிறான். இருவருக்கும் இடையே உருவாகும் நட்பும், அதன்பின் பேஸ்ஹே தனது குடும்பத்தினரைத் தேடிக் கண்டுபிடித்தாரா என்பதுதான் மீதமுள்ள கதையாகும்.


எகிப்து நாட்டின் பாலைவன, வெயில், பிரமிட்டுகள், மக்களின் வாழ்க்கை முறை தெளிவாகத் தரப்பட்டுள்ளது. குறிப்பாகத் தொழுநோயால் பாதிக்கப்பட்டு, குணமடைந்தவரை உண்மையாக நடிக்க வைத்திருப்பது படத்தின் சிறப்பாகும்.

வாழ்வின் சிடுக்குளையும் வலிகளையும் உள்வாங்கிய மனிதனின் வாழ்க்கையை, காலம் வழங்கிய அருவருப்பான தோற்றத்தை ஏற்றுக்கொள்ள நேர்ந்த ஒரு மனிதனின் கதை இது.

அலாதியாக உலகை இரசித்தபடியே, மற்றவர்களுக்கு நம்பிக்கையை விதைத்தபடி நடைபோடும் ஒரு நாடோடி வாழ்க்கையை உள்ளார்ந்த மனித உணர்வுகளோடும் துணிச்சலோடும் சொன்ன படம் என்பதால்; திரையிட்ட சர்வதேச திரைவிழாக்கள் எங்கும் ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பை இந்தப் படம் பெற்று வருகிறது. இந்தப் படம் ஆஸ்கர் விருதுக்காகச் சிறந்த வெளிநாட்டு படப் பிரிவில் போட்டியில் பங்கேற்றுள்ளது. கேன்ஸ் திரைவிழாவிலும் சிறந்த படத்துக்கான 'பாம் டி ஓர்' விருதுப் பட்டியலில் இடம்பிடித்தது.



### தி வொயில்ட் பியர் ட்ரீ





The wild pear tree

கேன்ஸ்திரைப்படவிழாவில் 'பாம் டி ஓர்' விருது பெற்ற மிகச் சிறந்த இயக்குநர் நூரி பில்கே செலானின் புதிய படம் தி வொயில்ட் பியர் ட்ரீ (The wild pear tree). இவருடைய பழைய படங்களான 'த்ரி மங்கிஸ்', 'ஒன்ஸ் டைம் ஒவ் அனடோலியா', 'விண்டர்ஸ்லிப்ஸ்' போன்றவற்றின் மூலம் மிகவும் தனது வித்தியாசமான ரசிகர்களைத் தக்கவைத்துக் கொண்டவர் இவர்.

'தி வொயில்ட் பியர் ட்ரீ' திரைப்படம் பெரிய அளவில் ஏமாற்றம் தரவில்லை என்றே தோன்றுகிறது.

இந்தப்படம், எழுத்தாளராக உருவாக வேண்டும் என்று கனவில் இருக்கும் இளைஞனைப் பற்றியது. தனது படைப்பைப் பதிப்பிக்கத் தேவையான பணத்தைத் திரட்ட கடுமையாக உழைக்கிறான். ஆனால் அவனது தந்தை வைத்துவிட்டுப் போன கடன் பிரச்சினைகள் தொடர்கின்றன.

கடன்களை அடைக்க சினான் முயற்சிக்கும் அதே நேரத்தில் தனது விதியும் தனது அப்பாவின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதை சினான் உணர்கிறான். மிகச் சிறந்த ஒளிப்பதிவுக் கோணங்களை அபரிதமான நிலப்பரப்பு காட்சிகளைத்தருவதில் இவரை அடித்துக்கொள்ள ஆளே இல்லை. இந்தப் படத்திலும் காமிரா அழகுக் காட்சிகள் நம் கண்ணைக் கவர்ந்து இதயத்தைத் தொடுகின்றன.

'கிராண்ட்ப்ரீ', 'பாம் டி ஓர்' விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட படம் இது.



'தி ஹெய்ரெஸஸ்'

## விருதுகளை அள்ளிக்குவித்த 'தி ஹெய்ரெஸஸ்' (The Heiresses)

பூமிப்பந்தின் எங்கோ ஒரு மூலையில் தென்அமெரிக்கக் கண்டத்தின் கீழ்ப் பகுதியில் உள்ளது பராகுவே. வரைபடத்தில் பொலிவியாவுக்கும் சிலிக்கும் பொதுவான இடத்தில், அவற்றின் அருகிலேயே தொற்றிக்கொண்டு நிற்கட்டுமா போகட்டுமா என்றிருக்கும் அந்த நாட்டிலிருந்து வந்த ஒரு படம்தான் 'தி ஹெய்ரெஸஸ்'

உலகின் பல நாட்டு திரைவிழாக்களுக்கும் சென்று 31 விருதுகளையும் 25 பரிந்துரைகளையும் பெற்றுத் திரும்பியிருக்கிறது.

இந்தப் படத்தின் இயக்குநர் மெர்செல்லோ மார்டினிஸி லண்டன் பிலிம் பாடசாலையில் படித்தவர். இவரது படங்கள் நினைவுகள், அடையாளம் மனித உரிமை ஆகியவற்றைக் கலவையாகக் கொண்டிருக்கும்.

இந்தப்படமும் குடும்பத்திலிருந்து தனியே பிரிந்திருக்கும் 60 வயதைக் கடந்த இரண்டு பெண்களின் அடையாளச் சிக்கலை அவர்களது நினைவுகளைப் பேசுகிறது. தங்களுடைய பணக்கார குடும்பங்களிலிருந்து பிரிந்து 30 ஆண்டுகளாக அவர்கள் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் இருவருக்கும் கடுமையான நிதி நெருக்கடி ஏற்படவே, தங்களுடைய உடைமைகளை இழக்க ஆரம்பிக்கின்றனர். கடன் காரணமாக, இருவரில் ஒரு பெண் மோசடி வழக்கில் சிறைக்குச் செல்ல நேரிடுகிறது. அதன்பிறகு, மற்றொரு பெண் அங்குள்ள பணக்கார வயதான பெண்களுக்கு வாகனம் ஓட்டி வருமானம் ஈட்டுகிறார்.

பல ஆண்டுகளாகத் தன் தோழியின் அரவணைப்பிலும் ஆதரவிலும் இருந்த அவர், புதிய மனிதர்களுடன் பழகுவதன் மூலம் தன்னையே கண்டுணர்கிறார். சிறந்த திரைப்படத்துக்கான விருதை உலகெங்கிலும் பல்வேறு திரைவிழாக்களில் அள்ளிக் குவித்த படம். விருதுகள் பெற்றால்தான் முக்கியமான படமா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது. விருதுகள் பெறாமலேயே நல்ல படங்கள் நிறைய வந்துள்ளன. ஆனால் விருதுகள் பெறும்போதுதான் ஒரு படம் உலகின் கவனத்தை தன்வசம் திருப்புகிறது. அத்தகைய சீரிய உத்திகளையும் மிகுந்த பொறுப்புணர்வோடும் சுவாரஸ்யத்தோடும் ஒரு திரைப்படம் தனக்குள் கொண்டிருக்க வேண்டும். 'தி ஹெரஸஸ்ஸஸ்' அந்த இலக்கணத்துக்குத் தகுதிவாய்ந்த ஒரு படைப்பே.



### த்ரீ பேசஸ்

உலகத் திரைப்படப் பாதையில் ஈரான் தனக்கென்று உருவாக்கிக்கொண்ட இடம் மிகமிக முக்கியமானது.

உலகின் சிறந்த இயக்குநர்களாகவே திகழும் ஈரானியத் திரைப்பட இயக்குநர்களான அப்பாஸ் கியராஸ்டமி, மக்மல்பஃப், தாருஹ் மெஹ்ருஜ், மஜீத் மஜீதி போன்றவர்களின் பாதையில் ஒரு புதிய தடத்தைப் பதித்து வருபவர் இயக்குநர் ஜாபர் பனாஹி.

அவர் திரைப்படம் எடுக்கத் தடை இருப்பதால் ஒரு முழுமையான திரைப்படமாக இல்லாதப் படங்களை ஆவணப் படம்போன்ற படங்களை அவர் இயக்கி வருகிறார்.

பெரும்பாலும் ஒவ்வொரு படத்திலும் அவர் அவராகவே தோன்றுவார். அதில் புனைவுக்கான திரைக்கதை எதுவுமின்றி உண்மைத்தன்மையுடன் காட்சிகள் படமாக்கப்படும். இத்தகைய அவரது பல படங்களுக்கு உலகம் முழுவதும் பெரும் வரவேற்புக் கிடைத்து வருகிறது.

இதில் துரதிஷ்டம் என்னவெனில் அவருக்கு விருதுகள் கிடைத்தால் அதை எந்த நாட்டுக்கும் சென்று அதைப் பெறமுடியாது. அவருக்கு வெளிநாட்டுக்குச் செல்ல தடை உள்ளது.

படங்களைத் திரையிடவும் விருதுகள் பெறவும் அவரது பிரதிநிதிகளே செல்கிறார்கள். அத்தகைய ஒரு பாணியில் வெளிவந்திருப்பதுதான் 'த்ரீ பேசஸ்' திரைப்படம்.

நடிப்பின்மீது ஆர்வம்கொண்டு டெஹ்ரான் நாடகப் பள்ளியில் பயிலும் ஒரு இளம்பெண்ணை, அவருடைய குடும்பத்தினர் அழைத்துக் கொண்டுபோய் விடுகின்றனர். அந்தப் பெண் உதவி கேட்டு அழும் காணொலியைப் பார்க்கிறார் பெஹ்னஸ் ஜஃபரி. அந்தப் பெண்ணுக்கு உதவி செய்வதற்காக, படப்பிடிப்பை நிறுத்தி விட்டு இயக்குநர் ஜாஃபர் பனாஹியுடன் புறப்படுகிறார் பெஹ்னஸ்.

வடமேற்கிலுள்ள கிராமத்துக்குக் காரில் பயணம் செய்து, அந்த இளம்பெண்ணின் மலைக்கிராம மக்களைச் சந்தித்துப் பேசுகின்றனர். பழங்கால மரபுகள் இன்னும் கடினமாகிவிட்டன என்பதை அந்தப் பயணத்தின் மூலம் இருவரும் உணர்ந்து கொள்கின்றனர். அண்டால்யா கோல்டன் ஆரஞ்சு திரைவிழாவில் இந்தப் படத்துக்குச் சிறந்த படத்துக்கான விருதை இயக்குநர் ஜாபர் பனாஹி பெற்றுள்ளார். 4 விருதுகள் 5 பரிந்துரைகளைப் பெற்ற படம் இது.

# 2018 தமிழ் சினிமா
## சிறிய பார்வை

ஒரு படத்துக்கு அறுநூறு கோடி ரூபாய் செலவிடும் அளவுக்குத் தமிழ்த் திரையுலகம் தொழில்நுட்பரீதியாக வளர்ந்திருக்கிறது. ஆனால் 'இதுதான் எங்கள் படம்' என உலக அளவில் முன்னிறுத்துவதற்கு அதனிடம் நிலம் சார்ந்த, பாரம்பரியம் சார்ந்த, பண்பாடு சார்ந்த கலை நுட்பம் கூடிய ஒரு படமாவது இங்கே உருவாக்கப்படுகிறதா என்றால் பெருத்த மௌனமே பதில்.

2018ஆம் ஆண்டைப் பொறுத்தவரை முதல் பாதியைவிட இரண்டாம் பாதி பரவாயில்லை. இந்த ஆண்டு வெளியான படங்களில் மாறுபட்டவை என 'சவரக்கத்தி' தொடங்கி 'கனா' வரை பலவற்றைச் சொல்லலாம். 'சவரக் கத்தி'யைப் பொறுத்தவரை படத்தின் இயக்குநர் ஜி.ஆர். ஆதித்யாவைவிட நடித்திருந்த இயக்குநர்கள் ராமும் மிஷ்கினும் அதிகம் பேசப்பட்டார்கள் அந்த அளவுக்குப் படம் பேசப்படவில்லை.




**இரும்புத் திரை**

பி.எஸ்.மித்ரன் இயக்கிய 'இரும்புத் திரை' பொழுதுபோக்கு நோக்கம் கொண்ட படம் என்றபோதும், டிஜிட்டல் இந்தியா என்ற முழக்கத்தின் உள் நோக்கத்தைக் கேள்வியுடன் அணுகி, துணிச்சலாகவும் புத்திசாலித்தன மாகவும் கதையை நகர்த்திச் சென்ற காரணத்துக்காகத் தனித்துத் தெரிகிறது.




**குப்பைக் கதை பசி**

திருமணத்துக்கு வெளியேயான உறவு ஒரு சாதாரண குடும்பத்தைப் பாதிக்கும் விதம் பற்றிப் பேசிய படம் காளி ரங்கசாமி இயக்கிய 'ஒரு குப்பைக் கதை'. 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி', 'எங்கேயோ கேட்ட குரல்' போன்ற படங்களில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட விடயம்தான் படத்தின் கரு. தகவல் தொழில்நுட்பத்துறையினரின் வாழ்வு பற்றிய மேம்போக்கான பார்வையைக் கொண்டிருந்த படம் என்றபோதும், சென்னை மாநகரில் நம் பார்வையில் தினந்தோறும் தென்படும் குப்பை அள்ளும் எளிய மனிதர்களின் வாழ்வை இயன்றவரை சினிமாத்தனமற்ற காட்சிகளாகக் கொண்டதால் விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தது. குப்பை பொறுக்குவோரை மையமாக வைத்து இயக்குநர் துரை 'பசி' என்னும்
படத்தை இயக்கியதையும் இந்தப் படம் நினைவுபடுத்திச் சென்றது.




**காலா**

ரஜினி காந்த் போன்ற உச்ச நட்சத்திரத்தை வைத்து ஒடுக்கப்பட்டவர்களின் அரசியலை இரண்டாம் முறையும் பேச வைத்தார் பா.இரஞ்சித் என்னும் பெருமையை அவருக்கு அளித்த 'காலா' தமிழ்த் திரைத் துறைக்கு எந்தப் பெருமையையும் பெற்றுத் தரவில்லை.



**பஞ்சு மிட்டாய்**

மாய யதார்த்த படம் என்னும் புதிய வகையில் முயன்றதைத் தவிர வேறொன்றும் இல்லாமல் போனதால் புது இயக்குநர் எஸ்.பி.மோகன் இயக்கிய 'பஞ்சு மிட்டாய்' கவனிக்கப் படாமலே போயிற்று.

**மேற்குத் தொடர்ச்சி மலை**

ஓகஸ்டில் வெளியான 'மேற்குத்




தொடர்ச்சி மலை' விமர்சகர்களின் பரவலான பாராட்டைப் பெற்றது. இயக்குநர் லெனின் பாரதியை அழைத்துப் பல விமர்சனக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. எளிய குடியானவனின் வாழ்வும் உலகமயமாதலின் பிடியில் சிக்கிச் சின்னாபின்னமாவதைப் பெரிய நடிகர்கள், பெரிய பட்ஜெட் இல்லாமல் எளிமையாகச் சொன்ன தன்மைக்காகப் பாராட்டப் பட்ட படமிது.




**வஞ்சகர் உலகம்**

இயக்குநர் மனோஜ் பீதாவின் இயக்கத்தில் வெளியான 'வஞ்சகர் உலகம்' தமிழ்ப் படத்தின் வழக்கமான தன்மையிலிருந்து சற்று மாறுபட்டிருந்தது. நிழலுலகத்தில் செயல்படும் சம்பத் எனும் மனிதனின் உளவியல் சிக்கலைப் பேசிய படம் இது. நட்சத்திர நடிகர்கள் இல்லாமல் மாறுபட்ட திரைக்கதை விவரிப்பில் வெளியான படமாகத் திரை ரசிகர்களின் சில பகுதியினரைப் பெரிதும் கவர்ந்தாலும் பரவலான வரவேற்பைப் பெறாத படமாகத் தங்கிவிட்டது.

**பரியேறும் பெருமாள்**




மாரி செல்வராஜ் இயக்கிய 'பரியேறும் பெருமாள்' என்னும் திரைப்படம் இயக்குநராகச் சம்பாதித்த பெயரைவிட அதிகமான பெயர் இந்தப் படத்தின் மூலம் பா.இரஞ்சித்துக்குக் கிடைத்தது. சாதி என்னும் கொடுமை சமூகத்தில் ஒழிய வேண்டியதன் அவசியத்தையும் ஆதிக்கச் சக்திகளை ஓர் உரையாடலுக்கான இடத்தை நோக்கி நகர்த்த வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் சினிமாவுக்குத் தேவையான நெகிழ்வுத் தன்மையுடன் சொன்ன படம் இது. தலித் அரசியலைப் பேசுவதற்காகவே மாரி செல்வராஜ் படத்தை இயக்கியிருந்தாலும் படத்தின் குரல் பா.இரஞ்சித் படங்களில் ஒலிப்பதைப் போல் இல்லாமல் நட்பார்ந்த தன்மையில் இருந்ததால் பெருவாரியான ரசிகர்களால் படம் கொண்டாடப்பட்டது.

**மனுஷங்கடா**




தலித் மக்களின் சிக்கலைப் பேசிய மற்றொரு திரைப்படம் 'அம்ஷன் குமார் இயக்கிய 'மனுஷங்கடா'. வணிகத் திரைப்படத்துக்குத் தேவையான எந்த நெகிழ்வுத்தன்மையும் இன்றி மாற்றுப் படத்துக்கான விடாப்பிடியான கொள்கையுடன் வெளியான படம் இது. திரையரங்குகளில் பெரிய வரவேற்புக் கிடைக்காதபோதும் மாற்றுப்பட முயற்சிகளுக்குக் கைகொடுப்போர் தயவில் இந்தப் படமும் கணிசமான பார்வையாளர்களைச் சென்று சேர முயன்றது.

**96**




தமிழ் இரசிகர்கள் காதல் மயக்கத்திலிருந்து ஒருபோதும் வெளியேறிவிட மாட்டார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்த படம் இயக்குநர் பிரேம்குமார் உருவாக்கிய '96'. பருவ காலத்தில் ஒன்றுசேராத பச்சை மண் காதல் காலமெனும் நீரோட்டத்தில் கரைந்த கதை. காதலனும் காதலியும் தொட்டுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தபோதும் தொடாமல் எட்டியே நின்றதால் இரசிகர்களின் மனதுக்கு மிகவும் நெருக்கமாகிவிட்டார்கள். ஒரு முழுமையான வணிகப் படத்தின் கதாநாயக அம்சத்தை அப்படியே கைக்கொண்ட ஒரு மாற்றுப்படம் என்ற மயக்கத்தைத் தந்தது 96.

**வட சென்னை**

'பொல்லாதவ'னில் தொடங்கி தனது இயக்கப் பாதையில் தொடர்ந்து வளர்ந்துவரும் இயக்குநரான வெற்றி மாறனின் 'வட சென்னை' வசூல் ரீதியில் பெரிய வெற்றி பெறாத போதும் படைப்பு ரீதியில் கவனிக்கத்தக்கது. நிழலுலக மனிதர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைக் கொண்ட திரைக்கதை என்றபோதும் இது அத்துடன் மட்டும் சுருங்கிவிடவில்லை. இந்த மனிதர்களைப் பகடைக் காய்களாக்கி நகர்ந்த அரசியல் வரலாறு ஒன்றும் படத்





தில் பேசப்படுகிறது. அதுதான் இந்தப் படத்தைப் பிற படங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. எளிய மனிதர்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலம் போல் செயல்படும் அரசியல்வாதிகளின் தந்திரத்தைக் கலையழகுடன் சுட்டிக்காட்டும் 'வட சென்னை' முதல் பாகம் மட்டுமே. அடுத்த பாகமான 'அன்புவின் எழுச்சி ' பற்றிய அறிவிப்புடன் நிறைவடைந்திருக்கிறது 'வட சென்னை'.

**செக்கச் சிவந்த வானம், ஆண்தேவதை, ராட்சசன், நாச்சியார், மெர்குரி, 2.0**

**மணிரத்னத்தின் 'செக்கச் சிவந்த வானம்', தாமிராவின் 'ஆண் தேவதை', ராம்குமாரின் 'ராட்சசன்', பாலாவின் 'நாச்சியார்', கார்த்திச் சுப்புராஜின் 'மெர்குரி' ஷங்கரின் '2.0' போன்ற படங்களையும் உள்ளடக்கியதே இந்த ஆண்டின் பட-வெளியீட்டுப் பட்டியல். இவ்வளவு படங்கள் வெளியான போதும் ஓரிரண்டு படங்களுக்கு மேற்பட்டவற்றை நல்ல படம் எனச் சொல்லத் தயங்கும் சூழலே தமிழில் நிலவுகிறது என்பது வழமைபோல் வருத்தம் தருகிறது.**





# மத்தியூஸுக்கு மீண்டும் காயம்

விளையாட்டு பிரகாஸ்

இலங்கை அணியின் நட்சத்திர வீரர் மத்தியூஸ் மீண்டும் காயமடைந்தார்.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றைய தினம் மத்தியூஸ் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த போது அவர் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்து வெளியேறினார். தசைப்பிடிப்புக் காரணமாகவே அவர் வெளியேறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மத்தியூஸ் உபாதைக்கு உள்ளாவது இது புதிதல்ல. இதற்கு முன்னரும் சில தடவைகள் அவர் காயமடைந்தார்.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் குறைந்தது ஐந்து தடவைகள் அவர் காயமடைந்து சில ஆட்டங்களைத் தவறவிட்டுள்ளார். இங்கிலாந்தில் அடுத்த வருடம் உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் மத்தியூஸ் காயமடைந்துள்ளமை அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# உலகக்கிண்ணத் தொடரில் சிமித், வோர்ணருக்கு இடம்

உலகக்கிண்ணத் தொடரில் சிமித், வோர்ணர் இருவரும் இடம்பெறுவது தொடர்பில் பச்சைக்கொடி காட்டியுள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை.

ஆஸ்திரேலிய அணி இறுதியாகத் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தியது. விசாரணையின் போது வோர்ணர் திட்டம் வகுத்தார் என்றும் சிமித் அதை அனுமதித்தார் என்றும் பான்குரொப்ட் பந்தைச் சேதப்படுத்தினார் என்றும் தெரியவந்தது. இதையடுத்து வோர்ணர், சிமித் இருவருக்கும் தலா ஓர் ஆண்டு தடையும் பான்குரொப்டுக்கு 9 மாதங்கள் தடையும் விதிக்கப்பட்டன. வோர்ணர், சிமித் இருவரும் இல்லாத ஆஸ்திரேலிய அணி தற்போது ஒன்றன் பின்னர் ஒன்றாக தொடர்ந்து பல அணிகளிடமும் முறையாக வாங்கிக்கட்டி வருகிறது. இந்த நிலையில் இவர்கள் இருவரும் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அதற்கு முன்னர் நடைபெறும் ரி20 லீக்குகளில் இருவரும் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும் என்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.



# மீண்டும் டோனி



இந்திய ரி20 அணியில் மீண்டும் இடம்பிடித்துள்ளார் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி.

மூன்று வகை ஆட்டங்களுக்கான இந்திய அணியில் தொடர்ச்சியாக இடம்பிடித்து விளையாடிவந்த டோனி, அண்மைக்காலமாக தொடர்ந்து தடுமாறி வந்தார். இதனால் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அண்மையில் முடிவடைந்த ரி20 தொடரில் இருந்து டோனி நீக்கப்பட்டார். இதனால் ரி20 வகை ஆட்டங்களுக்கான இந்திய அணியில் அவர் மீண்டும் இடம்பிடிப்பாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான ரி20 தொடரில் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார் டோனி.

# பும்ரா என்னும் புயல்



வேகப்பந்து வீச்சில் பலவீனமாக இருந்த இந்திய அணி அந்தத் துறையில் தற்போது அசுர பலம் பெற்றுத் திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் பும்ரா.

மணிக்கு சராசரியாக 145 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசும் வல்லமையைப் பெற்றுள்ள பும்ரா, பந்தை சரியான இடத்தில் வீழ்த்தி எதிரணியினரை நிலைகுலையச் செய்வதிலும் கைதேர்ந்தவராக உள்ளார். இந்த வருடமே டெஸ்ட் அரங்கில் பும்ரா அறிமுகமானார். இந்த வருடத்திலேயே ஏராளமான டெஸ்ட் இலக்குகளை அவர் அள்ளியுள்ளார். தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய ஆடுகளங்களில் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற அடைவையும் அவர் வசப்படுத்தியுள்ளார். தற்போது நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையிலான தொடரிலும் பும்ராவின் பந்துவீச்சு மிகமிக அபாரம்.




வலென்சியா அணிக்காக விளையாடிவந்த மொரில்லோ-பார்சிலோனா கழகத்துக்காக மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# தமிழர்களுக்குத் தேவையான தீர்வு 2019ஆம் ஆண்டிலாவது வரட்டும்!

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

கத்தோலிக்க திருச்சபையானது ஆண்டின் முதல் தினமான ஜனவரி முதலாம் திகதியை ஒவ்வொரு ஆண்டும் இறைவனின் தாயான அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாக அறிவித்துக் கொண்டாடும்படி அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பில் இந்த ஆக்கம் பேசுகிறது.

**'இறைவனின் தாய்' என்பது மரியாவுக்கே உரிய பெயர்**

இறைவனின் தாய் என்பது இயேசுவின் தாயான கன்னி மரியாவின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். இதன் மூலச் சொல் லான தியோடோக்கோஸ் என்பதற்கு கடவுளைச் சுமந்தவர் என்பது பொருள். மகனாகிய கடவுளுக்கு இவ்வுலகில் பிறப்பு அளித்தவர் என்பதால் மரியா கடவுளின் தாய் அல்லது இறைவனின் தாய் என்று அழைக்கப்படுகிறார்.

மரியா இயேசுவின் தாய் என்பதை சிறப்பிக்கும் இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு விழா "இயேசுவின் பிறப்பு விழா" இயேசுவைக் கோவிலில் அர்ப்பணிக்கும் விழா ஆகிய விழாக்கள் பொதுவாக கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக கன்னி மரியா இறைவனின் தாய் என்ற பெருவிழாவை கத்தோலிக்க திருச்சபை புத்தாண்டு நாளில் ஜனவரி முதலாம் திகதி சிறப்பிக்கிறது.

1974ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் ஒவ்வொரு ஆண்டின் முதல் தினமான புத்தாண்டு தினத்தையும் இறைவனின் தாய் கன்னி மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாக கத்தோலிக்க திருச்சபையில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.

**பழைய ஏற்பாட்டில் இறைவனின் தாய் பற்றிய அறிவிப்பு**

இறைவாக்கினர் எசாயா கடவுளின் தாயைப் பற்றி பின்வருமாறு முன்னறிவிக்கிறார். ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அந்தக் குழந்தைக்கு அவர் இம்மனுவல் என்று பெயரிடுவார். ஏனெனில், ஓர் ஆண்மகவு எமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும் என்று எசாயா கூறுகிறார். இம்மனுவல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பது பொருள்.

**புதிய ஏற்பாட்டில் இறைவனின் தாய் பற்றிய அறிவிப்பு**

மரியா கடவுளின் தாய் என்பதை புதிய ஏற்பாடு தெளிவாக எடுத்துரைக்கிறது. இயேசுவின் பிறப்பைப்பற்றி எடுத்துரைக்கும் மத்தேயு, லூக்கா ஆகிய இரு நற்செய்திகளுமே மரியாவை இறைவனின் தாயாகச் சுட்டிக்காட்டுகின்றன.

மரியா இறைமகனை கருவில் தாங்கிப் பெற்றெடுத்தார் என்பதை நற்செய்தியாளர் லூக்கா பின்வரு மாறு எடுத்துரைக்கிறார். வானதூதர் மரியாவுக்குத் தோன்றி அருள்மிகப் பெற்றவரே வாழ்க இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது என்றார். இந்த வார்த்தைகள் மரியா மகனாகிய கடவுளின் தாய் என்பதை தெளிவுபடுத்துகின்றன.


இறைவாக்கினர் எசாயாவின் இறைவாக்கு மரியாவிடம் நிறைவேறியதை நற்செய்தியாளர் மத்தேயு பின்வருமாறு எடுத்துரைக்கிறார். "யோசேப்புக்குக் கனவில் தோன்றிய ஆண்டவரின் தூதர், மரியா கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்" என்றார். இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அந்தக் குழந்தைக்கு இம்மனுவல் எனப் பெயரிடுவர் என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன.

**யாழ் .ஆயரின் புத்தாண்டு செய்தி**

யாழ் ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் தனது புத்தாண்டு செய்தியில் 2019ஆம் ஆண்டில் முதற் தினமான புத்தாண்டு தினம் அன்னை மரியா இறைவனின் தாய்க்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளமை பற்றியே பேசுகிறார்.



அன்னை மரியா இறைவனின் தாய். அவர் எவ்வாறு தனது வாழ்வில் இறைவனின் தாயாகும் அழைப்பை பெற்றபோது தெரிவித்த "உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும்" என்ற அர்ப்பண வார்த்தைகளையே தன் உள்ளத்தில் மௌனமாக அசை போட்டு தன் இன்ப துன்ப அனுபவங்களைக் கடந்தார் என்பது பற்றி தெரிவிக்கிறார்.






கத்தோலிக்க திருச்சபையின் விருப்பமான. ஆண்டின் முதல் தினத்தை அன்னை மரியா இறைவனின் தாய்க்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாக இருக்க வேண்டுமென்பதே தமது விருப்பமாகும் என்பதை அவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

அன்னை மரியாவை அனைவரும் தமது அன்புத் தாயாக ஏற்று அவவின் பாதுகாவலில் 2019ஆம் ஆண்டு முழுவதையும் நடந்து கடக்க வேண்டும் என்பதே கத்தோலிக்க திருச்சபையின் விருப்பமாகும்.

இறைவனின் தாயாகும் அழைப்பை பெற்றபோது உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற வார்தைகளை இறை திட்டத்துக்கு தன்னை அர்ப்பணிக்கும் வார்த்தைகளாக்கினார் இறைவனின் தாயான அன்னை மரியா.

இயேசுவைப் பெற்றெடுத்த இன்பமான அனுபவத்தின் போதும் இறந்த இயேசுவை மடியில் கிடத்திய துன்பமான அனுபவத்தின் போதும் உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற தனது அர்ப்பண வார்த்தைகளை தமது மனதில் மௌனமாக அசைபோட்டு இறை திட்டத்தை ஏற்று பணிந்தார் இறைவனின் தாயான அன்னை மரியா.

ஆயர், அன்னை மரியாவின் வாழ்வில் நடைபெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகளான இயேசுவை பெற்றெடுத்த நிகழ்வையும் அவரின் இறந்த உடலை மடியில் கிடத்திய நிகழ்வையும் மட்டும் தெரிவித்துள்ளார்.

நற்செய்தி ஏடுகள் அன்னை மரியாவின் அனுபவங்களில் இன்பமான அனுபவங்களாக இறைவனின் தாயாக கிடைத்த அழைப்பு அனுபவம் 'இயேசுவைப் பெற்றெடுத்த மகிழ்வு அனுபவம்' வேத அறிஞர்கள் மத்தியில் அவர் வல்லமையோடு பேசியதை கண்ட மகிழ்வு அனுபவம், கானாவூர் திருமணத்தில் தமது அழைப்பை ஏற்று தண்ணீரை இரசமாக்கிய மகிழ்வு அனுபவம் போன்றவற்றை குறிப்பிடுகிறது.

நற்செய்தி ஏடுகள் அன்னை மரியாவின் அனுபவங்களில் துன்பமான அனுபவங்களாக ஏரோது மன்னன் பாலக இயேசுவை கொல்லப்போகிறான் என கொண்டு ஓடிய துன்ப அனுபவம் மூன்று நாள் இயேசுவைக் காணாமல் தேடிய துன்ப -அனுபவம் சிலுவைப்பாதையின் வழியில் இயேசுவை சந்தித்த துன்ப அனுபவம் இறந்த இயேசுவை தன் மடியில் கிடத்திய தாங்கமுடியாத துன்ப அனுபவம் என்பவற்றை குறிப்பிடுகிறது.

யாழ் ஆயர் தொடரும் தனது செய்தியில் பிறக்கும் 2019ஆம் ஆண்டும் பல இன்ப துன்ப அனுபவங்களை எமக்குத் தர இருக்கிறது. இந்த இன்ப துன்ப அனுபவங்களில் இறைவனின் தாய் அன்னை மரியா போன்று உமது வார்த்தையின் படியே எனக்காகட்டும் என்ற வார்த்தைகளை ஏமதாக்கி இறை திட்டத்தை ஏற்று வாழ அழைப்பு விடுக்கிறோம் எனத் தெரிவிக்கிறார்.

2019ஆவது ஆண்டு தமிழ் மக்கள் அனைவருக்கும் இறையாசீர் மிக்க ஆண்டாகட்டும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்யும் ஆண்டாகட்டும். நீதியோடு கூடிய நிரந்தர அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற வழி வகுக்கும் ஆண்டாகட்டும்.

இலங்கையின் இரண்டு முதன்மைக் கட்சிகள் இணைந்த ஒரு நல்லெண்ண அரசை அமைக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. அதன் வழி ஒரு புதிய அரசமைப்பை அமைக்கும் திட்டம் உருவாக்கப்படலாம். அதில் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படலாம் என்பன எல்லாம் எதிர்பார்க்கப்பாத ஒன்று. அந்த நம்பிக்கைகள் எல்லாம் சிதறிக்க ப்பட்டுள்ளன. அதிகார மோகமும் அரசியற் பலமுமே தேவை என்பது தெளிவாகியுள்ளது.

தேசிய ஜனநாயக முன்னனி உதயமாகி நிறைவேற்று அதிகாரத்திற்கு முடிவு கட்டவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது வரவேற்கப்பட வேண்டியதே. இலங்கை நாட்டின் எல்லா பிரஜைகளுக்கும் நீதியான சமத்துவமான அமைதியான வாழ்வு கிடைக்க அனைத்து அரசியல்வாதிகளும் உழைக்க வேண்டும். தனிப்பட்ட அதிகாரம் பதவி பட்டம் என்பன எல்லாம் இங்கு முக்கியமல்ல.

ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி இது ஒரு முடிவல்ல மாறாக இது ஒரு ஆரம்பமே. எதிர்பார்த்து நம்பி இருந்த அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாமலே போய் விட்டது. கூட்டு அரசு நீதியாக செயற்படும் என நம்பி ஏமாந்து விட்டோம்.

ஆனால் தமிழ் அரசியற் கட்சிகள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் விலை போகாத வகையில் நாம் இன்று முன்பை விட இன்னும் அரசியல் பலம் மிக்கவர்களாகவே உள்ளோம்.

தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வுகாண இக்காலத்கைவிட மிக சிறந்த காலம் தோன்றப் போவதில்லை. இந்த நிலை தமிழ் மக்கள் இலங்கையின் பல பகுதிகளில் போர்க் காலத்தில் அனுபவித்த கோர அனுபவங்கள் வழியாகவே வந்தது என்பது உண்மை.

தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் பெயரால் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம். தயவு செய்து தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பணயம் வைத்து அரசியல் நடத்தாதீர்கள். தமிழ் மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் இலாபங்கள் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். இப்போது அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டு எட்டப்படாத எந்த முடிவும் வருங்காலத்தில் எட்டப்படும் என்ற எந்த உத்திரவாதமும் இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது சாதகமற்ற உங்கள் எந்த நிலைப்பாட்டையும் இனியும் தமிழ் மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என உறுதியாக சொல்லி வைக்க விரும்புகிறோம்.

இலங்கை நாட்டில் சிங்கள தமிழ் முஸ்லீம் இனங்கள் வாழ்கின்றன என்பதை உறுதிப்படுத்தி அவர்களின் சம உரிமையோடு வாழக்கூடிய கூடிய சுதந்திர வாழ்விற்கான நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைக் கொண்டு வரக்கூடிய மாற்றப்பட முடியாத புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான செயற்பாட்டுக்காக அரசியல் வாதிகள் மட்டுமல்ல சம்மந்தப்பட்ட அனைவரும் கண்டிப்பாக பயணியாற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம் என்று ஆயர் மேலும் தெரிவிக்கிறார். ■



# நித்திய சுகம் 405

உடலே கோயில்

# நீர்வெறுப்பு நோய்!



தாரணி சுந்தரம்

நாம்எல்லோருமேநாய்என்றால்நன்றியுள்ள பிராணி, வீட்டின் காவல்காரன் என்றெல் லாம்சிறுவயதில்கற்றுக்கொண்டுள்ளோம். எமக்கும்நாய்க்கும்இடையேயான அறிமுகவார்த்தை கள்மேற்கண்டவாறேஅமைந்தன. ஆனால்காலமாற் றத்தில்நாய்என்றவிலங்கின்மீதானஎமதுபுரிதல்களும் மாற்றங்கண்டுள்ளது என்றே கூறலாம்.

**செல்லப் பிராணி**

வீட்டின் செல்லப் பிராணிகளான நாய்கள் சரியான வளர்ப்புமுறையின்றிஇருக்கின்றன. அவற்றின்எஜமா னர்கள்கட்டாக்காலிகளாகவீதியோரங்களில்அவற்றை விட்டுவிடுகின்றனர். இதன் விளைவாக அவை பலரு டைய வாழ்வின் அழிவுக்கு வித்திடும் எமனாகவும் மாறிவிட்டன. இன்றுஇடம்பெறுகின்றகணிசமானஅளவு வீதிவிபத்துக்களுக்குதெருவோரத்துநாய்களேகாரண மாகிவிட்டன.

இவை தவிர கட்டாக்காலிகளாகத் திரியும் விலங்குகள் நீர்வெறுப்புநோய் (ரேபிஸ்) எனப்படும் உயிர்கொல்லி நோயைப் பரப்பும் காவிகளாகவும் மாறிவிட்டன.

**நீர்வெறுப்பு நோய்த் தொற்று**

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை வருடந்தோறும்60ஆயிரம்மக்கள் 'ரேபிஸ்'நோயினால்உலகெங்கும் இறப்பதாகவும், அவற்றில் 95 வீதத்துக்கும் மேலானவை ஆசிய மற்றும் ஆபிரிக்க பிராந்தியங்களில் நிகழ்வதாகவும்கூறுகிறது. இவற்றில்95வீதமானவை நாய்கடியினால்ஏற்பட்டதாகஇனங்காணப்பட்டுள்ளது. மேலும்விசர்நாய்க்கடிதொடர்பான சிகிச்சைக்காகவும், அதன்தடுப்புநடவடிக்கைளுக்கெனவும்பலமில்லியன் கணக்கிலான நிதி ஆண்டுதோறும் சுகாதார அமைச்சினால் செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நாம் அனைவரும் “2030 இல்ரேபிஸ் இல்லாத இலங்கை” என்னும்சுகாதார அமைச்சின்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எம்மால் இயன்ற பங்களிப்பினை வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

**நோய்த் தடுப்பு**

தற்போதுநாட்டில்விசர்நாய்க்கடிநோய்நிலமைஏற்படுவதைத்தடுப்பதற்குபல்வேறுசெயற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றுள்குறிப்பாக, அனைத்துவயதிலுள்ளநாய்களுக்



கும் தடுப்பூசி ஏற்றப்படுகிறது. வீட்டுவளர்ப்புநாய்களுக்கென 6 வாரங்கள், மூன்றுமாதம்பின்னர்வருடந்தோறும் என தொடர்ச்சியாகத் தடுப்புமருந்து வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் சமுதாயமட்டத்தில்நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதுதவிரபெண்நாய்களுக்கென கருத்தடை சத்திரசிகிச்சை முறையும் வழங்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கட்டாக்காலி நாய்களின் உருவாக்கத்துக்கு நாங்களே காரணமாக இருக்கின்றோம். வீட்டில் அதிகளவானநாய்க்குட்டிகள்உள்ள போது அவற்றைப் பராமரிக்கும் வசதி இன்மை காரணமாக வீதிகள், கோயில்கள், பொலிஸ் நிலையங்கள், உணவுக் கடைகள் போன்ற பொது இடங்களில் கொண்டுசென்றுவிட்டுவரும்முறைமைநம்மிடையே இன்றும்பிரபலமாகஇருந்துவருகிறது. இவ்வாறுகைவிடப்படும் சிறுகுட்டிகள் உணவுச் சண்டையின் போது வளர்ந்த நாய்களால் காயங்களுக்கு உள்ளாகின்றன.

இதன்போதுஅவை 'ரேபிஸ்' தொற்றுக்குள்ளாகின்றன. மேலும் இவ்வாறான நாய்களே வீதிவிபத்துக்க ளுக்கு வழிவகுப்பதோடு வீதியால் பயணப்படுவோரையும் நோய்த் தொற்றுக்குள்ளாக்குகின்றன. இந்த நிலமையைசீர்செய்வதற்குபெண்நாய்க்குட்டியைக்கருத்தடைச்சத்திரசிகிச்சைக்குஉள்ளாக்குவதன் மூலம் மிக இலகுவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். மேலும்உங்களிடம்மேலதிகமாகநாய்க்குட்டிகள்இருக்கும்போது அவற்றைவள்ர்க்கவும், வாங்கவும்விரும்புகின்றஉங்கள்உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசாக வழங்குங்கள். இதன் மூலம் நீங்கள் சமுதாயப் பொறுப்புடையவர்களாக மாறுகின்றீர்கள்.

அதேபோன்றுவீதியோரக்குப்பைமேடுகளே கட்டாக்காலிநாய்களின்போர் பூமியாகக் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான குப்பைமேடுகளை இல்லாதொழிக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்து கரிசனை கொள்ளுதல் விசர்நாய்க்கடித் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்குப்பேருதவியாக அமையும்.

**பாதுகாப்பு நடைமுறை**

விசர்நாய்க்கடிக்குஆளானபின்னரும் விசர்நாய்க்கடித் தொற்றிலிருந்து எம்மைப்பாதுகாத்துக்கொள்வதற்குநாம் தெரிந்திருக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவை குறித்து அறிந்துகொள்ளுதல் நன்று.

- காயம் ஏற்பட்ட பகுதி சவர்க்காரம் மற்றும் நீரினால் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் தொடர்ச்சியாக நன்றாகக் கழுவப்பட வேண்டும்.
- காயத்தை மிக இறுக்கமாகக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.
- உடனடியாக வைத்தியசாலைசென்று 'Antibiotics' மற்றும் 'Tetanus toroid' எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை வருடந்தோறும் 60 ஆயிரம் மக்கள் 'ரேபிஸ்' நோயினால் உலகெங்கும் இறப்பதாகவும், அவற்றில் 95 வீதத்துக்கும் மேலானவை ஆசிய மற்றும் ஆபிரிக்க பிராந்தியங்களில் நிகழ்வதாகவும் கூறுகிறது. இவற்றில் 95 வீதமானவை நாய் கடியினால் ஏற்பட்டதாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும் விசர்நாய்க்கடி தொடர்பான சிகிச்சைக்காகவும், அதன் தடுப்பு நடவடிக்கைளுக்கெனவும் பல மில்லியன் கணக்கிலான நிதி ஆண்டுதோறும் சுகாதார அமைச்சினால் செலவிடப்பட்டு வருகிறது.

மேலும் காயத்தின் தன்மை, கடித்தநாயின் நிலை என்பவற்றினைத்தெரியப்படுத்திநாய்க்கடிக்குப்பின்னரான சிகிச்சையைப்பொருத்தமான முறையில்பெற்றுச்சிகிச்சையை முழுமைப்படுத்த வேண்டும்.

**பங்களிப்பு**

என்வேநோய்நிலைஏற்பட முன்னர் அதனைத்தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும். 'ரேபிஸ்' இல்லாத இலங்கையை 2030 ஆம் ஆண்டளவில் உருவாக்கும் சுகாதார அமைச்சின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். முற்றாகத் தடுப்பு நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தக் கூடிய இந்த நோய்நிலைக்காகச் செலவு செய்யப்படும் நிதியைக் கட்டுப்படுத்தவும் அனைவரும் ஒன்றிணைந்து எமது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவோம். நாய் எமக்குத்தோழன்தான் என்ற சிறுவயதுக் கருத்தியலை என்றும் மாறாது நிலை நிறுத்துவோம்.

*கட்டுரையாளர்:*
*மருத்துவர்,*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்,*
*யாழ். போதனா மருத்துவமனை.*

## வகுப்பு (கணிதம்)

தரம் 5 முதல் O/L வரை கற்கும் மாணவர்களுக்கு கணிதம் பலவருட அனுபவம்மிக்க ஆசிரியரால் வீடு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும்.

(CS 22078) (04.17)

**077 937 0228**

## மணமகன் தேவை

யாழ் R.C கௌரவ சமூகத்தைச் சேர்ந்த கணக்காளராக பணிபுரியும் 40 வயதுடைய பெண்ணுக்கு R.C மணமகன் தேவை.

(CS 22158) (14.17)

**076 575 9954**

## சிறுநீரகம் தேவை

19 வயதுடைய ஒருவருக்கு O⁻ (நெக்கட்டிவ்) சிறுநீரகம் உடன் தேவை.
கொடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(CS 00450) (14.17)

**076 124 2512/ 077 926 2276**

## கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 137, 139, 141 ஆம் இலக்க இரண்டு மாடிகளைக் கொண்ட 12000 சதுர அடி கட்டடம் வாடகைக்கு உண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.

(CS 22156) (04.17)

**077 691 4229/021 222 4103**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 160 கோயில் வீதியில் I.OM நிறுவனத்திற்கு முன்பாக வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(CS 22156) (04.17)

**077 691 4229**


## துணுக்காய் பிரதேசசபை
## பொது அறிவித்தல் - 2019

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன் இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**01. வியாபார உரிம அனுமதிப் பத்திரம் - 2019**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் 2019ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரத்தை 2019.03.31ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) -2019**

1533/16 ஆம் இலக்க 2008.01.25ஆம் திகதிய அரச வர்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதித் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்

**03. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3:1 துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குள் புதிய கட்டடங்களை அமைத்தல், எல்லைச்சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், கட்டடங்களை விரிவாக்குதல், புதுப்பித்தல் என்பன பிரதேசசபையின் அனுமதியை பெற்று மேற்கொள்ளப்படல் வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாயினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது நட்டஈடின்றி அகற்றப்படும் .

3:2 கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒருவருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3:3 அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**04. துவிச்சக்கர உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2019**

2019ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகவரி உரிமங்களை 2019.03.31ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**05. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்கிலும், வீதிக்கு மேலாகவும் அத்துடன் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களுக்கு பிரதேசசபையில் கட்டணத்தைச் செலுத்தி சபையின் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் /நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்

**06. முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேசசபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்

**07. மரக்கறிகள், மீன், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையை தடை செய்தல்**

துணுக்காய் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1 km தூரத்துக்குள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழியிறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி என்பவற்றை விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது இதனை மீறுபவர்கள் மீது சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**09 படவரைஞராக பதிவுசெய்தல் / புதுப்பித்தல் - 2019**

2019ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019.01.31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளைச் மேற்கொள்ள, புதுப்பித்துக்கொள்ளவும் முடியும்

**10. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது**

பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கழிவுகளை உக்கக்கூடியவை, கண்ணாடி, பிளாஸ்ரிக், இலத்திரனியல் என வகைப்படுத்தி கழிவுசேகரிப்பு வாகனத்தில் ஒப்படைப்பதுடன் வர்த்தகர்கள் தமது மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு அலுவலகத்தில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவகற்றல் மேற்கொள்ளப்படும் என்பதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

**11. பொதுச்சுகாதாரம் பேணுதல்**

சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச்சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொதுச் சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.


**12. கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்**

சபை எல்லைக்குள் பொது போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படுவதுடன் மீளப்பெறப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படும்

**அ.அமிர்தலிங்கம்**
**தவிசாளர்**
**பிரதேசசபை, துணுக்காய்.**

(N.) (14.17)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 16 04 1947 — இறப்பு 28 12 2018

# கைலாசபிள்ளை கணேசையா
*(கணேஸ்)*

மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, சிவகுரு லேன், முதலாம் ஒழுங்கையை வசிப்பிட மாகவும் கொண்ட கைலாசபிள்ளை கணேசையா கடந்த (28.12.2018) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் பால சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், கனகலிங்கம் மற்றும் கெங்காதேவி, யோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கருணாகரன், தயாநிதி மற்றும் கருணாநிதி (கண்ணப்பா), கனகநாயகம் (குஞ்சன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் தர்சினி, சுதர்சினி (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), பாலரிஷி (ஆஸ்திரேலியா), ஜங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகதாசன் (தாசன் - லக்ஷன் றேடர்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சிவசங்கரன் (சுவிஸ்), சிவசுதன் (சுவிஸ்), சதீஸ்குமார் (ஆஸ்திரேலியா), பிறேமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யசோதா, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் கமலாம்பிகை (கனடா), விமலாம்பிகை (சுவிஸ்), விமலநாதன் (ஜேர்மனி), நவநாதன் (கனடா), காலஞ்சென்ற நந்தினிதேவி மற்றும் சிவகேந்தினி, பவனீதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸலக் ஷனா, டிலக்சன், கிஷாயினி, ரிஷிபன், சியானுகா (சுவிஸ்), சாரங்கி (சுவிஸ்), ருத்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ச. தாசன், சிவகுருலேன், உப ஒழுங்கை 01, கொக்குவில் மேற்கு, 077 959 5142**

தகவல்:
**குடும்பத்தினர்.**



பிறப்பு 09 . 08 . 1940 — இறப்பு 29 . 12 . 2018

# செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம்

*(முன்னாள் சங்கீத ஆசிரியர், யாழ்.வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி, இராமநாதன் நுண்கலைபீடம், யாழ் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற சிரேஷ்ட இசை (வயலின்) விரிவுரையாளர் )*

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் 29.12.2018 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஆசிரியர்) இராசம்மா தம்பதிகளின் அன்புமகளும் வினாயகமூர்த்தி, காலஞ்சென்றவர்களான தட்சிணாமூர்த்தி, பாலசுந்தர மூர்த்தி மற்றும் சௌந்தரநாயகி, ரங்கநாயகி, கமலநாயகி(ஓய்வு பெற்ற கணித ஆசிரியர் வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கமுத்து, ராஜேஸ்வரி(ஓய்வு பெற்ற அதிபர், மட்டக்களப்பு விபுலானந்த இசைக் கல்லூரி), பத்மாவதி, காலஞ்சென்ற ஜெகதீசன்(முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பெறாமகள்மார் -சுகன்யா இளவரதன் (U.K)**
**லாவண்யா விதூஷன் (Sydney Australia)**
**கமலநாயகி (சகோதரி)**
**021 222 6005**

**84/1, தபாற்கந்தோர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01 . 11 . 1941

மறைவு 30 . 11 . 2018

அமரர்

### சிவனேஸ்வரி ஸ்ரீவிக்னேஸ்வரன்


நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமோ உங்கள் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உங்கள் புன்சிரிப்பைக் கான
விழியோரக் கண்ணீருடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

96, 1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 23606) (14,17)

## கண்ணீர் அஞ்சலி



### கைலாசபிள்ளை கணேசையா

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மண்கும்பான் மேற்கு.

அப்பையா
குடும்பத்தினர்.

(CS 21762) (14,17)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை



**தோற்றம்**
**26.08.1937**

**மறைவு**
**27.12.2018**

பலாலியைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் தற்போது புகையிரத நிலையவீதி, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை 27.12.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் (ஓய்வு பெற்ற பரிசாரகர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) பாசமிகு மனைவியும் நிர்மலாதேவி(மாலா), தயாபரன் (நோர்வே), ஜெயதரன்(டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும் சந்தானகோபால்(சந்தானம்), சிவலோகநாயகி(நோர்வே), ரஞ்சனா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் சத்தியரூபி - சசிதரன் (துபாலகம் தெல்லிப்பளை), சயந்தன் - குமுதா(உரிமையாளர் - கோபன் பந்தல் சேவை, கோபன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்), சஜீவன்(பிரான்ஸ்), சடகோபன், தினேஷ், திவாகர்(நோர்வே), அபியா, மீரா(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சனா, கீதா, சயன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 22149) (14,17)

**ரூபி 077 451 7624/ சயந்தன் 077 894 8493 /கோபன் 077 248 7840**

# கண்ணீர் அஞ்சலி



லக்ஸன் ரேடேர்ஷ் உரிமையாளர் **சண்முகதாசன்**(தாசன்)
அவர்களின் மாமனார்

## கைலாசபிள்ளை கணேசையா (கணேஸ்)

(மண்கும்பான் கிழக்கு 4ஆம் வட்டாரம்)

மண்மகிழ 16.04.1947 மனம் நெகிழ 28.12.2018

உள்ளத் தூய்மை அன்பு
உபசரிக் கின்ற பண்பு
எல்லோருக்கும் உதவும் துடிப்பு
எளிமையாத் தெரியும் சிறப்பு
நல்லவர் என்று பார்த்து
நானிலம் கணிக்கும் மதிப்பு
வல்லவர் கணேசையா பிரிவு
வாட்டிடும் துயரம் பெரிது

மண்கும்பான் ஊரின் முத்தாய்
மற்றவர் நலனில் நோக்காய்
அன்பிற்காய் எதையும் செய்வாய்
அனைத்திற்கும் முதலில் நிற்பாய்
எண்ணற்ற கருமம் யாத்தாய்
எல்லோரும் ஏங்கி நிற்க
கண்ணுற்ற வெள்ளைப் புற்றான்
கழலடி சேர்ந்தீரோ ஐயா

**அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.**
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**புதிய நதியா நகைமாடம்**
இல.73, 103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021 222 8397
222 3261

**மைதிலி நகைமாடம்**
89V, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 7902
**79Z யாழ் மைதிலி ஜுவலர்ஸ்**
**79Z**, Sea Street Colombo - 11
Tel: 011 2396239

**கந்தவேலன் றேடர்ஸ்**
110, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 222 2822
021 2224496/077 2250377

**பாலவிநாயகர் மோட்டோர்ஸ்**
இல.8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5376

(IN 8895)(14,17)

கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ்

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் கயிலாயபிள்ளை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கயிலாயபிள்ளை (கயிலாயபிள்ளை களஞ்சிய உரிமையாளர்) 28.12.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் சிவரஞ்சினி, கிருபாகரி(லண்டன்), பிரதீபன்(பொறியியலாளர் சிங்கப்பூர்), நிகிந்தினி(ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலன்(கவிஷா ஸ்ரோர்), நிமலதரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கவிஷா, தக் ஷியன், திஸான்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் பூபாலசிங்கம், மகேஸ்வரி, யோகலிங்கம், கணேசமூர்த்தி, மனோன்மணி, பாக்கியவதி, நாகேந்திரம், நீலாவதி, இராசதுரை, குலசேகரம், உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விமலாதேவி, தயாபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சாவகச்சேரி.** (IN 8892) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 854 3126/ 077 850 7377**

# TELESOON Phone Shop

**Year end price Challenging**

Cargills square Jaffna, No 259C Power House Rd, Jaffna,
No.32, K.K.S Rd, ChunnaKam and Station Road, Chunnakam

Free 5D

## New Year
## அதிரடி விலைக்கழிவு

5D Glass free | 5D Glass free | 5D Glass free

| Samsung MRP | | Huawei MRP | | i Phone MRP | |
|---|---|---|---|---|---|
| J2(2017) | 18300 | Mate 20pro | 174900 | i phone 5C 16gb | 22000/= |
| J2Core | 16100 | Y9 | 36900 | i phone 6G 32gb | 36500/= |
| J2(2018) | 21800 | Y7 | 28990 | i phone 6G 128gb | 45000/= |
| J4 | 22400 | Y3(2017) | 14490 | i phone 7G 128gb | 70000/= |
| J4 + | 27350 | Y5 Prime | 20990 | i phone 7plus 128gb | 99000/= |
| J6 | 29600 | Y5 lite | 18690 | i pad mini 1 | 36500/= |
| J6 + | 33200 | Nova 2i | 41900 | i pad 2 | 39000/= |
| J8 | 46070 | Nova 3i | 50900 | i pad 3 | 46500/= |
| A7 | 58200 | Nova 3 | 79900 | i pad 4 | 49500/= |
| Note8 | 155000 | Tab 3 10in | 37900 | i pad 6th | 75000/= |
| S9+ | 115000 | Mate 20 | 24990 | i pad Air 2 | 90000/= |

இவை அனைத்துக் கொள்வனவிற்கும்
**10 %** தொடக்கம் **38 %** வரையிலான
விலைக்கழிவு உண்டு.

Indonesia

அத்துடன் அதிஸ்ரம் மூலமாகத் தெரிவு செய்யப்படும்
வாடிக்கையாளர்களுக்கு சிங்கப்பூர் அல்லது இந்தோனேசியா
சுற்றிவர வாய்ப்பு வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு :
**071 190 7466**
Or Telesoon Face book Page Like பண்ணவும்

(Sup 1857) (34.17)



